padippakam

ஈழ வரலாற்றில் ஒரு நோக்கு

# தமிழீழம்

## நாடும் அரசும்



சு. இராசரத்தினம்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

ஈழ வரலாற்றில் ஒரு நோக்கு

# தமிழீழம் நாடும் அரசும்

.......1977 வரை

சு. இராசரத்தினம்.

படிப்பகம்

padippakam

முதற்பதிப்பு .................. மார்கழி 1995

பதிப்புரிமை .................. ஆசிரியருடையது

*Copyright* .................. *©1995, Canada*

விலை .................. $ 12

நூலாசிரியர்
சுப்பிரமணியம் இராசரத்தினம்

ஒளியச்சும் அட்டை, புத்தக வடிவமைப்பும்
ஹரன் கிறாப், மிஸிஸாகா, கனடா.

அச்சிட்டது
றிப்ளக்ஸ் அச்சகம், கனடா.

Publication
Raja Publication
38 Balaclava Drive
Scarborough
Ontario M1P 1E6
Canada.
Tel : (416) 285-7332
Fax: (416) 285-9241

படிப்பகம்

padippakam

# சமர்ப்பணம்



தாயக மண்ணில் அந்நிய படையினரால்
உள்ளமும், உடலும் உருக்குலைய தாக்கப்பட்டிருந்தும்,
தளராது எம்மை உய்வித்த என் இனிய அன்னை
அமரர் நாகம்மா சுப்பிரமணியம்
அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

படிப்பகம்

padippakam



# அணிந்துரை

**ஈழத்துப் பூராடனார் - கனடா**

முது வயதானாலும் எனக்கு சில காரியங்கள் புதிராகவே இருக்கின்றன. அவற்றுள்;

ஸ்ரீ லங்கா- கொழும்பு அரசு தமிழ் ஈழத்தை ஸ்ரீ லங்காவின் இறைமையின் ஒரு பகுதியென்று உரிமை கொண்டாடுகிறது. ஈழத் தமிழ் அரசு எப்போது சிங்களவர்களுடன் இணைக்கப்பட்டது? எப்போது தமிழர்கள் சிங்களவர்களின் அடிமையாகினர்? இந்த இறைமையைத் தமிழர்களிடம் இருந்து பெற்றார்களா? அல்லது இலங்கையை ஆண்ட ஐரோப்பியரிடம் இருந்து பெற்றார்களா? இறுதியாக ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெறக் கைகோர்த்துப் போரிட்ட சிங்கள தமிழினங்கள் பெற்ற சுதந்திரம் எவ்வாறு சிங்களவருக்கே மாத்திரம் உரியதாயிற்று? என்பது முதலாவது புதிர்.

அடுத்த புதிர் உலகில் வாழ் மக்களின், இனம், மொழி, பண்பு, மதம், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் காவல் தெய்வமாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஐ.நா, உலகில் பரவலாக பெரும்பான்மை யோரால் சிறுபான்மை இனம் ஜனநாயகப் பெயரால் அழிக்கப்படுவதை எப்படி பார்த்துக் கொண்டிருக்கிறது? அல்லது சிறுபான்மை இன மக்களின் கோரிக்கைகளை வரலாற்று அடிப்படையில் விசாரணை செய்து அவர்களின் இனத்தை பாதுகாக்க என்னதான் நடவடிக்கை எடுத்துள்ளது? இத்தகைய பிரச்சனைகள் உள் நாட்டுப் பிரச்சனை என்று தட்டிக்கழிப்பதும் இரத்த ஆற்றுள் சமாதானப் புறாக்களைப் பறக்க விட்டு வேடிக்கை பார்ப்பதும் ஐ.நாவின் பொழுது போக்கா?

படிப்பகம்

padippakam



உலகில் வாழ்ந்த எத்தனையோ இனங்கள் முடியாட்சியான சர்வாதிகாரத்தால், பலாத்காரத்தால் அழித்தொழிக்கப்பட்டன என்பது பழைய வரலாறு. இன்று ஜனநாயகப் போர்வையில் இந்த அக்கிரமம் தொடர உலக மனித நேய அமைப்புகள் வாளாவிருப்பது ஏன்?

**தமிழீழம் - நாடும் அரசும்** என்ற இந்த அரசியல் வரலாற்று நூலில் சிறுபான்மை இனம் எவ்வாறு ஜனநாயக வழியில் பெரும்பான்மை மக்களால் சாகடிக் கப்படுகிறது என்பது வெளிப் படுத்தப்படுகிறது. அதுவும் இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின் போதே இரு இனங்களையும் சமமாக நடத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பெரும்பான்மையினரான சிங்களவரால் எவ்வாறு உதாசீனப் படுத்தப்பட்டுள்ளது - ஆங்கிலேயரின் வெளியேற்றத்தின் பின் எவ்வாறு அடிமைப்படுத்த உபயோகிக்கப்பட்டுள்ளது, பெருமையுடனும் தனித்தன்மை யுடனும் தனி அரசாக வாழ்ந்த தமிழினமும் அதன் தாயகமும் எவ்வாறு கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது என்னும் விபரங்கள் வரலாற்று உண்மைகளுடனும் அரசியற் கண்ணோட்டத்துடனும் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு மணி நேரத்துக்குள் இலங்கை வரலாறு, தமிழர் வரலாறு, ஈழத்தமிழ் வரலாறு என்பவற்றை ஆதிகாலந் தொட்டு இற்றைவரை ரத்தினச்சுருக்கமாக இலகு தமிழில் கருத்துக் கலக்கல்கள் இன்றிப் படைத்துள்ள நூலாசிரியரின் முயற்சி பாராட்டற்குரியதே. இற்றைச் சந்ததியினர் கடல் கடந்து எங்கெங்கு வாழ்ந் தாலும் தம்மினம், தம்மினத்துக்குரிய தாயகம் என்பவற்றை சுருக்கமாக அறிந்து கொள்ளும்படி இந்நூலை ஆசிரியர் படைத்திருப்பதாகக் கூறினாலும் அறிய வேண்டிய விடயங்கள் யாவையும் இச்சிறு நூலில் தந்திருக்கும் எழுத்துபாயம் கற்போரை வியக்கவைக்கிறது.



படிப்பகம்


padippakam



பல நூல்களின் கருத்துக்களை எடுத்தாண்டு இச்சிறு நூலைப் பயன்படத் தக்கவாறு ஒரு சிறு நூலாக எழுதிய வன்மையை எண்ணும் போது திருக்குறள் பாயிரத்தின்

"கடுகைத் துழைத்து ஏழ்கடலைப் புகுத்தி
குறுகத் தறித்த குறள்"

என்பதே நினைவுக்கு வருகிறது. எனவே நூலாசிரியர் சு.இராசரத்தினம் அவர்களையும் அவரது நூலையும் **"வரலாற்றைப் பிழிந்து வடித்தெடுத்த கருத்து களால் தரமாக்கப்பட்ட தமிழ் நூல்"** என்பதே பொருத்த மென நம்புகின்றேன். இவ்வழி நின்று இன்னும் பல நூல்களை செவ்வழிப்படுத்த இறைவன் ஆசீர்வதிப்பாராக.



ஈழத்துப்பூராடனார்



படிப்பகம்

padippakam



# பொருளடக்கம்


பக்கம்

**முன்னுரை** 11

**1. தமிழீழம்**

நாடு .......... 16
ஆதிகாலம் .......... 18
ஆதிக் குடிகள் .......... 21

**2. தமிழர் சமூகம்**

சமயம் .......... 29
சைவசமயம் .......... 30
புத்தமதம் .......... 35
இசுலாம் .......... 37
கிறித்தவம் .......... 39

**3. தமிழீழமும் அரசுகளும்**

ஆதிகால அரசுகள் .......... 40
கிரேக்க, உரோமர் குறிப்புகள் .......... 42
சமயப் போட்டியும் இனவாதமும் .......... 48
சோழர் ஆட்சி .......... 52
யாழ்ப்பாண அரசு .......... 61

**4. ஐரோப்பியர் வருகையும் - விளைவுகளும்**

போர்த்துக்கேயர் காலம் .......... 69
பண்டாரவன்னியன் .......... 72
ஒல்லாந்தர் காலம் .......... 74
றேலண்ட் குறிப்புகள் .......... 83
சுவட்சர் குறிப்புகள் .......... 84
ஆங்கிலேயர் காலம் .......... 85
கண்டி அரசு .......... 86




படிப்பகம்

padippakam



ஆங்கிலேயர் ஆட்சிமுறை.................................... 89
டொனமூர் அரசியல் அமைப்பு ........................ 100
றொபேட் நொக்ஸ் குறிப்பு .............................. 103
சோல்பரி ஆணைக்குழு .................................. 111

**5. இலங்கைப் பாராளுமன்றமும் சிங்கள மேலாதிக்கமும்**

இலங்கைப் பாராளுமன்றம் ............................ 116
சிங்க மேலாதிக்கத்தின் திட்டங்கள் ............. 120
தமிழர் தம் ஜனநாயக சாத்வீகப் போராட்டம் .. 126

**6. இலங்கை அரசுகளின் இறைமை**

குடியரசாக்குதல் ............................................. 137
1970 பொதுத் தேர்தல் ..................................... 140
தோல்வி கண்ட சனநாயகம் ............................ 149
தமிழர் கூட்டணியின் நடவடிக்கை .................. 150
தமிழீழ விடுதலைப்புலிகள் நடவடிக்கை ......... 152
தமிழீழ அரசுக்கான பொதுசன வாக்கெடுப்பு .. 154
மக்கள் ஆணை மீறப்பட்டமை ....................... 156
மக்கள் ஆணையை ஏற்ற தமிழீழ
விடுதலைப்புலிகள் ........................................ 157

**முடிவுரை** .................................................... 160

**துணை நூல்கள்** ........................................... 164



படிப்பகம்

padippakam



# முன்னுரை

இன்று இலங்கைத்தீவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது உள் நாட்டு யுத்தமா? இனக்கலவரமா? பிரிவினைப் போரா? அல்லது,

தமிழ் இனத்தின் மீதான சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக தமிழர் தொடுத்துள்ள எதிர் நடவடிக்கையா? அல்லது

ஒரு நாட்டினர் நடத்தும் விடுதலைப் போரா? ஒரு நாடு இழந்த தனது இறைமையை மீட்டெடுக்க, அங்கு வாழும் மக்கள் சுதந்திரம் உடையோராக வாழ வழி வகுக்கும் ஒரு முயற்சியா?

இதற்கான பதிலை உடனே கூறிவிட முடியாது. இதன் பதிலை-யுத்தத்தில் பங்கு கொண்டுள்ள மக்களின் வரலாற்றை, அவர்கள் ஆயுதம் ஏந்தியதற்கான காரணத்தை அறிந்து கொள்ளாமல் கூறிவிடவும் முடியாது.

இன்று நடைபெறும் போரைத் தமிழ் மக்கள் "தமிழீழ விடுதலைப் போர்" என அழைக்கின்றனர். எனவே தமிழீழத்தின் வரலாற்றை மிகமிகச் சுருக்கமாகக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும்.

இன்று பல்வேறு வாழ்க்கைப் போராட்டங்களிடையே நாளாந்த கருமங்களைச் செய்து முடிக்கவே நேரம் இன்றித் தவிக்கும் மக்கள் மத்தியில், தமிழீழப் போராட்ட விடயத்தை நீண்ட புத்தக வடிவில் எழுதினால்

படிப்பகம்

எவருக்கும் படிக்கும் ஆசை ஏற்படாது. அதேவேளை தமிழீழ வரலாற்றைப்பற்றி அறிய விரும்புவோர் மிகக் குறுகிய நேரத்தில், கூடியளவு விடயங்களை அறியக் கூடியதாகத் தமிழீழத்தோடு தொடர்புடைய முக்கிய சம்பவங்கள் என நாம் கருதியவற்றை இங்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம், ராஜாவலிய போன்ற சிங்கள நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சரித்திர நூல்களைப் படித்தோருக்கும், அதன் அடிப்படையில் இலங்கை வரலாற்றை அறிந்தோருக்கும், இங்கு கூறப்படும் சில விடயங்கள் சந்தேகத்திற்கு இடமாக இருக்கலாம். ஆனால் இங்கு கூறப்பட்ட எவ்விடயமும் கற்பனை அல்ல. இவை இலக்கிய, சாசனச் சான்றுகளையும், வரலாற்று அறிஞர், அரசியல் சிந்தனையாளர் ஆகியோரின் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். இங்கு கூறப்படும் ஒவ்வொரு விடயத்தையும் விரிவாக அறிய விரும்புவோர் அதற்குரிய நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், தொல்லியற் சான்றுகளையும் உற்று நோக்குவது சிறப்புடையதாகும். இங்கு கூறப்பட்ட கருத்துக்களில் முரண், ஒவ்வாமை இருப்பின் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நான் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் படிக்கும் போது எனது சரித்திரப்பாட ஆசிரியர் மதிப்புக்குரிய திரு. பரநிருபசிங்கம் (சிங்கம் மாஸ்டர்) இலங்கைக்கு விஜயன் வந்ததைப் பற்றி குறிப்பிடும் போது "முந்தி வந்த கள்ளத் தோணி பிந்திவந்தவனைக் கள்ளத்தோணி என்கிறது" என்றார்.

padippakam



"பிந்தி வந்தவர் யார் சேர்" என்று கேட்டேன்.

"கள்ளத்தோணி என்று யாரை சிங்களவர்கள் அழைக்கின்றவர்கள்" எனக் கேட்டார்.
"மலையகத் தமிழரை" எனப் பதில் வந்தது.

அதைக் கேட்ட ஆசிரியர் "தற்போது ஈழத் தமிழர் ஆகிய எங்களையும் அப்படித்தான் சொல்கிறார்கள்" என்றார்.

1961ஆம் ஆண்டு எனது காதில் விழுந்த என் ஆசிரியரின் ஒலி இன்றுவரை ஒலித்த வண்ணம் உள்ளது. என்னைத் தமிழர் பணியின் பக்கம் தள்ளியதும் இந்த ஒலியே. இவ்வொலியே இந்த நாடு எமது சொந்த நாடு என்ற கருத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் நோக்கோடு 1970இல் "நாம் இலங்கையர்" இயக்கம் என்னும் ஓர் அமைப்பை எனது நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்க என்னைத் தூண்டியது.

தமிழர்களது வரலாறு சம்பந்தமான பல நூல்களைக் கட்டுரைகளை பாடசாலைக் காலத்தில் இருந்தே தேடித்தேடிப் படித்தேன் பல மூதாதையர்களிடம் இருந்து ஈழத் தமிழர் பற்றிய எண்ணிறந்த கதைகளைக் கேட்டுள்ளேன். அக்கதைகளுக்கான ஆதாரங்கள் கண்டறிய முடியாவண்ணம் வெளிநாட்டு வாழ்க்கை ஏற்பட்டு விட்டது. இருப்பினும் சில விடயங்களை ஆராய்ந்துள்ளேன். குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள உடையார்கட்டு என்னும் இடத்தை எனது மாமனார் கூட்டிச் சென்று காட்டினார். அக்காலத்தேதான் அங்குள்ள குளம் புதுப்பிக்கப்பட்டது. அக்குளத்தை அண்டி கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் நிலத்தைத் தோண்டிய இடமெல்லாம் காணப்பட்டன, முழுவதும்



படிப்பகம்

padippakam



காடாக இருந்த அப்பிரதேசத்தின் ஒரு பகுதியைச் சென்று பார்த்தோம். மிகப் பெரிய விளையாட்டு மைதானம் போன்ற இடம் மைதானத்தின் நடுவே அழகிய நீள்வட்ட வடிவில் அமைந்த ஆழமற்ற நீர்த்தடாகம், நீர்த்தடாகத்தைச் சுற்றி (150 அடி அகலத்திற்கு மேல் இருக்கும்) ஓடுபாதை, இப்பாதையைச் சுற்றி முதிர்ந்த வேப்பமரங்கள் உண்டு. அரசகாலத்தில் இது பந்தய மைதானமாக பாவிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விடத் துக்கு அருகில் புதையுண்டு இருந்த தேர்ச்சில்லுகள் இருப்பதைக் கண்டோம். இவ்வாறு ஈழத்தமிழர் வரலாறு பற்றி ஈழம் முழுவதும் ஆராய வேண்டிய பல விடயங்கள் இருந்தபோதும் ஸ்ரீலங்கா அரசு தமிழர் வரலாற்றை ஆராயக்கூடிய வழிவகைகளைச் செய்யவில்லை. மாறாக மறைக்கின்றது, மறுக்கின்றது. அதற்கும் மேலாக திரித்துக் கூறுகின்றது.

தமிழீழத்தின் இறைமையை மீட்டெடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் நாம் சந்திக்கும் பலரும் தமிழீழ அரசியல் வரலாற்றைப்பற்றிக் கேட்பதை கண்டோம். அதன் அவசியத்தை உணர்ந்து இரண்டு வருடங்களுக்கு முன்னரே இக்குறிப்புகளை நாம் சேகரித்து வரிசைப் படுத்திக் குறித்து வைத்திருந்த போதும் இவற்றை ஒரு நூலாக வெளியிட எம்மால் முடியுமா? என்ற தயக்கத்தில் வைத்திருந்து விட்டோம்.

இக்குறிப்புகளை மதிப்புக்குரிய பேராசிரியர் க.ப. அறவாணனிடம் தற்செயலாகக் காண்பிக்க நேர்ந்தது. அவரும் இதன் அவசியத்தை அடிக்கடி கூறி இந் நூலை எழுதும்படி தூண்டினார். மேற்கூறியோர் தந்த உற்சாகத்தி னால் இதனை எழுதி வெளியிட்டுள்ளோம்.

எனது கையெழுத்துப் பிரதியை மின்கணனி



படிப்பகம்

padippakam



மூலம் புத்தக வடிவில் அமைத்துத் தந்த சகோதரி திருமதி. ரமணி அருள், திரு. சுரேஸ் தர்மரட்னம் ஆகியோருக்கும், இந்த நூலை எழுதும்படி உற்சாகம் அளித்து வந்த என் இனிய நண்பர்கள் பலருக்கும் இதற்குரிய படங்களை உரிய அளவில் வரைந்துதந்த திரு. சாள்ஸ் தேவசகாயம் அவர்களுக்கும் இந்நூலின் எழுத்துப்பிழைகளைத் திருத்தி தந்ததுடன் தமது ஆலோசனைகளையும் கூறி இன்நூலை இயன்றவரை ஒரு சிறந்த நூலாக வெளியிட ஆலோசனை கூறிய பெரியோர்களுக்கும் இப்புத்தகத்தை வடிவமைத்துத் தந்ததுடன் அதற்கான அட்டைப்படம் மற்றும் படங்களையும் சீர்செய்து ஒழுங்கமைத்துத் தந்த தம்பி சசி பத்மநாதன் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுப்பிரமணியம் இராசரத்தினம்

38 Balaclava Drive
Scarborough
Ontario M1P 1E6
Canada

03. 12. 1995



படிப்பகம்

padippakam



# 1
# தமிழீழம்

## நாடு


ஈழம் என்று ஆதியில் அழைக்கப்பட்ட இலங்கையானது (CEYLON) இந்து மகாசமுத்திரத்தில், இந்தியாவின் தென்முனையில் இருந்து 22 மைல் தொலைவில் தென் திசையாக 80 பாகை நெடுங்கோட்டில், 25,000 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ள ஒரு தீவாகும். தமிழர் அந்நாளில் முழுத் தீபகற்பத்திற்கும் உரிமையாளராக இருந்தனர். கி.மு.6ஆம் நூற்றாண்டு தொடக்கம் ஆண்டாண்டு காலமாக ஏற்பட்ட பல குடியேற்ற, அரசியல் நிலைமைகளால் இன்று தமிழர் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை மாத்திரம் தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இன்று தாம் வாழும் பிரதேசத்தைத் ***"தமிழீழம்"*** என அழைக்கின்றனர்.

தமிழீழம் என்பது ஐரோப்பிய கடலோடிகள் வரும் பொழுது தமிழர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த பிரதேசமாகும். ஈழத்தமிழ் மன்னர்களின் ஆட்சியின் கீழிருந்த தமிழீழத்தின் சில பகுதிகளைப் போர்த்துக்கேயர் முதன் முதல் வெற்றி கொண்டு அடிமைப்படுத்தினர். தமிழீழத்தின் எல்லைகளைப் போர்த்துக்கேயர் முதல் ஆங்கிலேயர் வரை அறுதியிட்டுக் குறிப்பிட்டுள்ளனர். கிளெக்கோண் (Sir Hugh Cleghorn) என்பவர், இலங்கையின் பிரித்தானிய ஆளுநர் நோர்த் அவர்களின் செயலாளர் ஆவார். இவர் 1799ஆம் ஆண்டு ஜூன் முதலாம் நாள் பின்வரும் குறிப்பை எழுதியுள்ளார்:

> "இலங்கைத் தீவானது இரு வேறு நாட்டினர்களால் வெவ்வேறு பகுதிகளாக உரிமை

padippakam








படிப்பகம்

padippakam



கொண்டாடி ஆட்சி செய்யப்பட்டது. இத்தீவின் நடுப்பகுதியும் தெற்குப் பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரையும் உள்ள மேற்குப்பகுதியும் சிங்களவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபாரிகளால் (தமிழர்களால்) ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இவ்விரு நாட்டினர்களும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறு பட்டிருந்தனர்."

**ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பத்து வருடங்களுக்கு ஒரு முறை குடிசனமதிப்பீடு எடுக்கப்பட்டது. இப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஆங்கிலேயர் காலத்தில் தமிழர் செறிவாக வாழ்ந்த பிரதேசத்தை அறிந்து கொள்ள முடியும்.**

## ஆதிகாலம்

ஆதிகாலத்தில் இலங்கைத் தீவானது இந்தியாவுடன் இணைந்தே இருந்தது. அது மாத்திரமன்று அது தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற கண்டங்களை உள்ளடக்கித் (லெமூரியாக் கண்டம்) தென் துருவம் வரை நீண்டிருந்தது எனவும், புவியில் ஏற்பட்ட பிரளயங்களினால் அவை பிரிந்து போயின என்றும், இந்தியாவும் இலங்கையும் ஒன்றாக இருந்தபகுதி, வடகிழக்கு நோக்கித் தள்ளப்பட்டதனால் இமயமலை தோன்றியது என்றும் புவியியலாளர் கருதுகின்றனர். இதன் பின்னர் ஏற்பட்ட கடற்பெருக்கு ஒன்றினால் ஈழம் இந்தியாவிலிருந்து 22மைல் நீர்ப் பரப்பால் பிரிக்கப்பட்டுள்ளது. இது நிகழ்ந்தது ஐயாயிரம்



படிப்பகம்

padippakam



ஆண்டுகளுக்கு முன்னர் எனக் கருதப்படுகின்றது.[1]

ஈழத்தைப் பற்றிய ஆதிகால வரலாற்றை நோக்க முற்படும் போது இராமாயணம் என்னும் இதிகாசத்தில் ஈழத்தை வீணைக்கொடியை உடையவனாகிய இராவணன் என்னும் அரசன் ஆண்டான் எனவும், அவன் சிவ வழிபாடு உடையவன் எனவும் அவனது அரசு தென் இந்தியாவின் சில பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது எனவும், திருகோணமலையில் அமைந்துள்ள ஈஸ்வரத்தின் மீது மிக்க பக்தி உள்ளவன் எனவும், சிறந்த தமிழ் அறிவும், தமிழ் இசைஞானமும் உள்ளவன் என்றெல்லாம் கூறப்படுகிறது. திருநீற்றின் மகிமையைக் கூறும் தேவாரத்தில் "இராவணன் மேலது நீறு" என்று கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இராமாயணத்தில் குறிப்பிடப்படும் பல இடங்கள் இன்றும் அதே பெயருடன் வழங்குவதும் ஆச்சரியப் படக்கூடியதுதான். உதாரணமாக சீதையைச் சிறை வைத்த இடம் சீதாஎலியா, திருகோணமலையில் உள்ள இராவணன் வெட்டு (28ஆம் பக்கம் பார்க்க), மாரீசன் வாழ்ந்த இடம் மாரீசன்கூடல், இராமரணை போன்ற பல இடங்கள் குறிப்பிடத் தக்கவை.

இராமாயணத்தை இதிகாசக்கதை என்று கூறுவோரும் உளர். அதேவேளை அது நடந்த காலத்தை

---

1 பைபிளிலுள்ள நோவா ஆக் (NOAH'S ARK) கதையில் வரும் கப்பலைத் துருக்கியில் கண்டெடுத்துள்ளனர். அதன் மரத் துண்டினை பரிசீலனை செய்த விஞ்ஞானிகள் அதன் கால எல்லையை ஐயாயிரம் வருடங்கள் எனக் குறிப்பிட்டுள்ளதும் தமிழர்களது பஞ்சாங்க (Calender) கணிப்பின்படி இவ்வுலகம் நீரால் அழிந்து கலியுகம் தொடங்கி ஐயாயிரத்துத் தொண்ணூற்றேழாவது வருடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் புலனாகிறது.



படிப்பகம்

padippakam



ஐரோப்பிய ஆய்வாளர் முதல், பல சரித்திர ஆய்வாளர்கள் கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல், கி.மு 10ம் நூற்றாண்டு வரை கணக்கிட்டுக் கூறியும் உள்ளனர். அதேவேளை திரு.காமினி புஞ்சிகாவா (GAMANI PUNCHI-HEWA) என்னும் ஸ்ரீலங்கா சரித்திர ஆய்வாளர் இராம-ாயணகாலம் கி.மு 3500 ஆண்டுகளெனவும், முனிஸ்வர ஆலயம் கட்டப்பட்டது அக் காலத்தில் எனவும், சம்பவ ங்கள் நடைபெற்ற பல இடங்களையும் சம்பவங்களையும் குறிப்பிடுகின்றார்.

**இவற்றை நாம் எவ்வாறு நோக்கினும் இராமாயண த்தை எழுதிய வால்மீகியின் காலத்திற்கு முன்னரேயே ஈழம் முழுவதிலும் சிவ வழிபாட்டை உடைய, நாகரிகம் மிக்க திராவிடத் தமிழ் இன மக்கள் வாழ்ந்தனர் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.**

தமிழரது வரலாற்றை ஆராய முற்பட்ட பெரும் பாலான வரலாற்று ஆய்வாளர்கள் தமிழர்களது தோற்றம், இந்தியாவிற்கு வடக்கே இருந்து அல்லது வட இந்தியா வில் (இந்துநதி, இமயமலை) இருந்து தெற்கு நோக்கி பரவியதாகக் கருதியே தமது ஆய்வுகளைச் செய்து உள்ளனர். ஆனால் தமிழர் (திராவிடர்)களது தோற்றமும் வளர்ச்சியும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியே பரவியு ள்ளது என்றும், இலங்கைக்குத் தெற்காக அத்தோடு இணைந்து இருந்த தமிழர்களது ஆதித் தாயகத்தின் பெரும் பகுதிகள் கடலில் மூழ்கியிருக்க வேண்டும் அல்லது பிரிந்து சென்றிருக்க வேண்டும் என்னும் கருத்து தற்காலத்தில் வலுப்பெற்றுள்ளது.[2]

---

[2] இது பற்றிய மேலதிக தகவல்களைத் தேவநேயப்பாவாணர் எழுதிய தமிழர் வரலாறு என்னும் நூலில் காணலாம்.



படிப்பகம்

padippakam



# ஆதிக்குடிகள்

ஆதி காலம் தொட்டு ஈழத்தில் இயக்கர், நாகர் எனப்படும் இரு திராவிட இன மக்கள் வாழ்ந்து வந்தனர். ஈழத்தில் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பல தொல்லியற் சான்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. பழைய கற்காலம் தொட்டு (ஒரு இலட்சம் வருடங்களுக்கு முன்னர்) திராவிட இனமக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

பழைய கற்காலத்தைத் தொடர்ந்து குறுணிக் கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான பல தொல்லியல் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல இடங்களில் கிடைக்கப் பெற்ற பிரேத அடக்கங்கள் இவற்றை உறுதி செய்கின்றன. குறிப்பாகப் பலாங்கொடையில் கண்டு பிடிக்கப் பட்டவைக்கும் கற்கால வேடர்களது எலும்புக் கூடுகளுக்கும் இடையே அறிஞர்கள் ஒற்றுமையைக் கண்டதுடன், இவர்கள் தென்னிந்தியாவில் இருந்து குடி பெயர்ந்து வந்தோர் எனவும் விளக்கம் கொடுத்துள்ளனர்.


குறுணிக்கற்காலத்திற்குப் பின்பு ஈழம் எங்கும் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கி.மு 10ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே விவசாயத்திலும், நீரப்பாசனத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் குடியிருப்புகள் காணப்படுகின்றன. பயிர்செய்நிலம், சிறுகுளம், இடுகாடு என்பனவற்றை உள்ளடக்கியனவே குடியிருப்புகள். இக்கால மக்களின் பண்பாடும், நாகரிகமும் அதே காலத்தில் தென் இந்தியா தொடக்கம் தக்கணம் வரையுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன, இம்மக்களின் இரும்பு உபயோகம்,



படிப்பகம்

padippakam




ஆதிகால
குடியிருப்புகள்
நாகர்
இயக்கர்
நாவலன் தீவு
நாகர் கோயில்
மணிபல்லவம்
மாந்தை
அரிப்பு
நாகதீப
அரசு
திரிகூடம்
குதிரை மலை
மகாவில்லர்ச்சி
நாகபொக்குணை
சிலாபம்
நாகன்சாலை
நாகபர்வதம்
நாகர் முனை
கல்யாணி
கதிர்காமம்
நாகதுமை
நயிமான்
நாகர்கோமல்

padippakam



இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, ஆழ்கடல் மீன்பிடி முறை, நீரப்பாசன முறை, கறுப்பு, சிவப்பு மட்பாண்ட உபயோகம் என்பன ஒத்ததாகக் காணப்படுகின்றன.

கந்தரோடை, அநுராதபுரம், பொம்பரிப்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வு ஆய்வுகள் இதனை மேலும் உறுதி செய்கின்றன. பொம்பரிப்பில் தாழிகளில் கிடைத்த எலும்புக் கூடுகள் தென்னிந்தியத் திராவிட மக்களது தன்மையை ஒத்தது என அறிஞர் கென்னடி உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் மகாதீர்த்தம், ஆனைக்கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களில் எலும்புக்கூடுடன் கிடைத்துள்ள "கோவேந்தன்" - "கோவேதன்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட வெண்கல முத்திரையும், வடமேற்கே பூநகரி தொடக்கம் களனி ஆற்றங்கரைவரையும், தென்கிழக்கே மட்டக்களப்பு தொடக்கம் அம்பாறை மாவட்டம் வரையும் காணப்படும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் என்பனவும் கி.மு 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே ஈழத்தில் நாகரிகம் மிக்க திராவிட (தமிழ்) இனம் வாழ்ந்ததைத் தெரிவிக்கின்றன.

இதே போன்று ஈழத்தின் பல பகுதிகளில் கல்லறைகள், கல்மேசைகள், தாழிகள், இறந்தோரை நிலத்தில் அடக்கம் செய்ததற்கான குழிகள் போன்ற பல ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கும், தென் இந்தியாவில் காணப்படும் ஈமச்சின்னங்களுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை உண்டு.

ஈழத்தில், மேற்கே களனி ஆற்றங்கரை தொடக்கம் அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை உட்படக் கரையோர வரண்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நீர்ப்பாசன நாகரிகம் மிக்க மக்களாக வாழ்ந்தனர்.



படிப்பகம்

padippakam



இத்திராவிட மக்களது மொழி தமிழாக இருந்தது. ஈழத்தின் தென்பகுதியில் வாழ்ந்த இயக்கர் எனப்படும் திராவிட மக்களது மொழி "எலு" என வழங்கியது. இதுவே ஆதிச் சிங்கள மொழி ஆகும். மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகள் தோன்றியதைப் போன்றே "எலு" மொழியிலிருந்து சிங்கள மொழி தோன்றியது எனவும் அறிஞர் கருதுகின்றனர்.

எலு — கெல எனப் பின்னாளில் திரிபு பெற்றது. சிங்க வம்சத்தவர் எனத் தம்மை அழைத்துக் கொண்டவர்கள் மகத நாட்டுப் பிராகிருத (பாளி) மொழியைத் தமது "கெல" (ஆதித்திராவிட) மொழியுடன் சேர்த்துக் கொண்ட போது (சிங்க + கெல) = சிங்களம் எனும் மொழி உண்டாயிற்று எனவும் கூறுவர்.[3]

நூலின் ஆரம்பத்திலேயே புத்தமதத்தைப் பேணுவதற்காகச் சிங்கள இனம் தோற்றுவிக்கப்பட்டது என்ற பொருள்படக் கூறும் மகாவம்சம், தீபவம்சம் எனப்படும் பௌத்த மத வரலாற்று இலக்கிய நூல்கள் முறையே கி.பி 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை. இவை அக்காலத்தில் பௌத்தர்களாக வாழ்ந்த மக்களைச்சார்ந்த சரித்திரங்களை மாத்திரம் குறிப்பிட்டுள்ளன. இந்நூல்கள் அதேகாலத்தில் ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் பற்றியோ அதன் அரசுகள்

---

3 எலு மொழியே ஆதித் திராவிட மொழி எனவும் எலு மொழி பேசிய மக்களிடையே நாகரிகம் படைத்த மக்களான நாகர் இன மக்கள் தமது மொழியிலும் மாற்றங்களை உண்டாக்கியதன் மூலம் தமிழ் மொழி பிறந்ததெனவும். அதனாலேயே இயக்கர் பேசிய மொழியில் இருந்து நாகர் பேசிய மொழி (தமிழ்) வேறுபாட்டை அடைந்து ஆதிகாலத்திலேயே மிகச் சிறந்த இலக்கண வளர்ச்சியை உடைய மொழியாகத் திகழ்ந்தது எனவும் கூறுகின்றனர்.



படிப்பகம்

padippakam



பற்றியோ பெருமளவில் குறிப்பிடவில்லை. தமிழர்களது (நாகர்இனத்தின்) அரசுகள் இருந்த கந்தரோடை, திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் வன்னிமைகள் (சிற்றரசுகள்) பற்றி அதிகம் குறிப்பிடாது, அதே வேளை தமிழரது பிரதேசமாகிய அநுராதபுர அரசு பற்றிப் பெருமளவில் குறிப்பிட்டுள்ளன.

கி.மு 5ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் இருந்து இந்தோ-ஆரிய இனத்தைச் சேர்ந்த பாளி மொழி பேசும் விஜயன் எனப்படும் அரச குமாரனும் அவனது தோழர்களும் ஈழத்தை வந்தடைந்தனர் என்றும், அதில் விஜயன் என்பவன் குவேனி எனப்படும் அரசியை மணம் முடித்து அரசனானான் என்றும், அதனைத் தொடர்ந்து ஆரியர் பலர் கூட்டம் கூட்டமாக வந்து குடியேறினார்கள் என்றும் மகாவம்சம் கூறுகின்றது. அத்துடன் “எலு” மொழி பேசிய சிங்கள மக்களின் மூதாதையர் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டதனால் அவர்களின் மொழியில் பாளி மொழியின் தாக்கம் அதிகமாயிற்று. இதனால் எலுமொழி மேலும் திரிபடைந்து தமிழ் மொழியில் இருந்து பெருமளவில் வேறுபட்டுவிட்டது. (கி.பி முதலாம் நூற்றாண்டளவில் இருந்துதான் சிங்களமொழி மக்களிடையே வழக்கத்திற்கு வந்தது என்பர்.) அத்துடன் வட இந்தியாவில் இருந்து வந்த பௌத்த மதக் கலாச்சாரமும், ஐதீகங்களும் சிங்கள மக்களைத் தமிழ்மக்களிலிருந்தும் மேலும் வேறுபடுத்தி மொழி, கலை, பண்பாடு என்பனவற்றால் வேறுபட்ட ஓர் இனமாக்கியது. இதனால் ஈழத்தில் இயக்கர் இனம் (இந்தோ ஆரிய) சிங்களக்கலப்படைய நாகர் இனம் தனித் தமிழ் இனமாக வாழ்ந்து வந்தது.



படிப்பகம்

கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னரேயே இந்தியாவின் வடமேற்குப் பகுதியாகிய சிந்துநதிக் கரையோரப் பகுதிகளில் இருந்தும், விஜயனின் வரவு எனக் குறிப்பிடப்படும் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் கங்கை நதிக்கரையோரப் பகுதியில் இருந்தும் கடல் மார்க்கமாக வந்த ஆரியர் ஈழத்தில் குடியேறினர். இவர்களுடன் கலப்படபடைந்த ஈழமக்கள் இனமே சிங்கள இனம் எனக்கருதும் வரலாற்று ஆசிரியர்களின் கருத்தே பொருத்தமுடையதாகும்.



ஈழவேந்தன் இராவணனின் ஆட்சியை நினைவூட்டும்
**இராவணன் வெட்டு**

padippakam



# 2
# தமிழர் சமூகம்

## சமயம்

ஆதியில் இருந்து தமிழர் சமயம் இயற்கை வழிபாட்டை ஒட்டியதோடு, புறவாழ்வில் தமிழன் மேலோங்கிச் சிறப்புடன் வாழவும், பண்பாடும் வலிமையும் மிக்க ஒரு இனமாக வாழவும் வழிகாட்டும் ஒரு முறையாக இருந்தது. அவற்றிடையே ஆரியரால் புகுத்தப்பட்ட பல சமய, சமுதாய பழக்க வழக்கங்கள் தமிழரைக் கூறுகூறாகப் பிரித்து தமிழருடைய எழுச்சியைத் தடுத்துத் திசைமாற்றியது.

ஆரியர் வரவின் முன்பே தமிழர் நீர்ப்பாசனம், பயிர்ச்செய்கை, கட்டிடம், நகர அமைப்பு என்பனவற்றில் மேம்பட்ட நாகரிகம் உடையோராக இருந்தனர். ஆரியர் வரவின் பின் புகுந்த புத்த மதம் ஈழத்தில் வாழ்ந்து வந்த ஒரு பகுதியினரை முற்றாகப் பிரித்தெடுத்துச் சென்றது. தொடர்ந்து வந்த இசுலாம் மதம், பல்வேறு அரசியல் காரணிகளால் மிகுதியாக இருந்த இன்னோர் பகுதித் தமிழர்களையும் பிரித்தெடுத்துவிட்டது. தொடர்ந்து வந்த கிறித்தவ சமயம் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்வரை கிறித்தவ மதத்தைத் தழுவிய மக்களில் ஒரு பகுதியினரை வர்க்கரீதியில் பிரித்தே வைத்திருந்தது. எனவே ஈழத்தில் புகுந்த சமயங்கள் அனைத்தும் தமிழர்களிடையே இடைத்தாக்கங்களை ஏற்படுத்திவிட்டன.

இடைக்காலத்தில் புகுந்த சமயங்களுக்கு அப்பால் நாம் அனைவரும் ஒரு குடிப்பிறந்த தமிழர்கள் என்பதை

படிப்பகம்

padippakam



இவர்கள் இன்றுவரை உணராது இருப்பது ஈழத்தமிழர்கள் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து கொண்டு போவதற்கு முக்கிய காரணமாகும். குறிப்பாகப் இசுலாம் மதத்தை தழுவிக் கொண்டோர் தமிழர்களாக இருந்தும் அவர்களிற் பெரும்பான்மையானோர், தமிழ்ச் சமுதாயத்திலிருந்து தம்மை விலக்கியே பார்க்கின்றனர்!!

## சைவசமயம்

பிறசமயங்கள் தமிழரிடையே புகுமுன்னர் ஆதிகாலந் தொட்டுத் தமிழர் பல்வேறு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வந்தனர். குறிப்பாகப் பெரும் பகுதியினர் பெண் தெய்வத்தையும் (கொற்றவை), மற்றும் லிங்க வழிபாட்டையும் கைக்கொண்டு இருந்தனர். சங்கத் தமிழ் இலக்கியங்களில் முருகன் போர்க்கடவுளாகச் சித்திரிக்கப்படுகின்றார். அத்தோடு கொற்றவையின் வீரப்புதல்வனாகவும் கூறப்பட்டுள்ளார். தமிழர் வீரத்தை கடவுள் நிலையில் வைத்து வீர வழிபாட்டை மேற்கொண்டு வந்தமையை இவ்வழிபாடு எமக்கு உணர்த்துகிறது.[5]

மேற்கூறிய வழிபாடுகளுடன் ஈழத்தில் வாழ்ந்த நாகர் இன மக்கள் நாகபாம்பு வழிபாட்டையும் மேற் கொண்டனர். மற்றைய தெய்வங்களின் வழிபாட்டுத் தலங்களிலும் நாகத்தின் உருவத்தையும் வைத்து வழிபட்டு வந்தனர். இவற்றிற்கு அநுராதபுரப் பகுதியிலுள்ள

---

5 ஆதித் தமிழர் வழிபாட்டு முறை பற்றி மேலதிகத் தகவல்களை பேராசிரியர் க.ப அறவாணன் எழுதிய தமிழர் சமுதாய வரலாறு என்னும் நூலிற் காணலாம்.



படிப்பகம்



சேதவனராம
விகாரையில்
உள்ள
நாக
வழிபாட்டுச்
சின்னங்கள்



padippakam



அபயகிரி, சேதவனராம விகாரைகளிலுள்ள சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். புத்தமதம் பரவமுன்னர் இவ் விகாரைகள் அமைக்கப்பட்ட இடம் நாகர்களது வழிபாட்டுத் தலங்களாக இருந்தன.

நாகர் இனத்தின் குலதெய்வமான நாக பாம்பின் வழிபாடு இயக்கர் இனத்திடையேயும் பரவி இருந்ததென நம்பலாம்.

நாகர் இனத்தோர் (தமிழர்) தமது திருமண நற்காரியங்களில் பெண்கள் தலையில் சடைநாகத்தை அணிவதும், ஆண்கள் நாக வடிவில் தலைப்பாகையை அணிவதும் இன்று வரை நிலவி வருகின்றன. அத்துடன் ஆண் பெண் இரு பாலார்க்கும் நாகபாம்பினைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்கள் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. உதாரணமாக நாகராசா, நாகமணி, நாகேந்திரன், நாகமுத்து, நாகம்மா, நாகேஸ்வரி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழரின் இவ் வழிபாட்டுச் சின்னங்கள் ஈழம் எங்கும் நிறைந்து இருக்கின்றன. லிங்க (சிவன்) வழிபாட்டுத் தலங்களாக முனிஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம், தொண்டேஸ்வரம், நகுலேஸ்வரம் என ஐந்து ஈஸ்வரங் களும் சந்திரமௌலிசுவரர் ஆலயமும் சிவனொளிபாத மலையும் பல நூற்றாண்டு காலங்களுக்கு முன் இருந்தே ஈழத்தில் உள்ளன. இதில் கோணேஸ்வரம் இராமாய ணத்திலும், கேதீஸ்வரம், கோணேஸ்வரம் என்பன பற்றி சமய குரவர்கள் தங்கள் தேவாரப் பதிகங்களிலும் பாடியுள்ளமை இவ் ஈஸ்வரங்களின் பழம் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றோடு முருக வழிபாட்டுத் தலங்களில் பழம் பெருமை வாய்ந்தது கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர்க்கந்தசாமி ஆகிய கோவில்




படிப்பகம்

padippakam



## தோற்றகாலம் அறியப்படாத தமிழர் வழிபாட்டுத் தலங்கள்






படிப்பகம்

padippakam



களாகும். கொற்றவை (அம்மன்) வழிபாட்டுத்தலத்தில் பழமைவாய்ந்தது நயினாதீவு அம்மன் கோவிலாகும். தமிழரது இவ் வழிபாட்டுத்தலங்கள் தோன்றிய கால எல்லை இன்றுவரை கணக்கிடமுடியாது இருப்பது ஈழவரலாற்றில் குறிப்பிடத் தக்கதாகும். தமிழரின் இவ்வழிபாட்டு முறை சைவசமயம் எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றது.

## புத்தமதம்

புத்தமதம் வருவதற்கு முன்பு இன்றைய தமிழீழத்தில் உள்ள தமிழர், ஸ்ரீலங்காவில் உள்ள சிங்களவர் சகலரும் பெரும்பாலும் ஒரேவித வழிபாட்டு முறைகளைக் கொண்ட மக்களாகவே இருந்தனர். தமிழர் சமுதாயத்தில் ஆரியர் புகுந்து தமது சமயக் கோட்பாடுகளை பரப்பியதன் விளைவாகத் தமிழரது வாழ்க்கைத் தத்துவங்கள் மாற்றம் பெற்றன. நில இயற்கையின் அடிப்படையில் (மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி, பாலை) அந்தந்த நிலத்தின் சூழலுக்கேற்பத் தொழில் புரிந்து கூட்டம் கூட்டமாக உயர்வு தாழ்வின்றி வாழ்ந்த தமிழ் மக்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதிமுறை புகுத்தப்பட்டது. தமிழ் மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் நோக்கோடு, இயல்பாகவே இயற்கைச் சக்தி மீது நம்பிக்கைகொண்ட தமிழர் மத்தியில் (வேதங்களின் மூலம்) பிறப்பால் சாதிகள் வகுக்கப்பட்டு, தமிழ் மக்களிடையே சாதியின் பெயரால் நிரந்தரப்பிரிவுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் ஏற்படுத்திவிட்டனர். "மனுஸ்மிருதி" என்னும் ஆரிய நீதி சாஸ்திரநூல் மனித குலத்தில் சாதிமுறைக்கேற்ப நீதிவழங்கும் கொள்கையையும் தமிழரிடையே புகுத்தியது.



படிப்பகம்

padippakam




கி.மு 274 இல் வட இந்தியாவில் ஆட்சிக்கு வந்த அசோகன் யுத்த வெறியனாக இருந்து புத்தரின் போதனையால் போரை வெறுத்துப் புத்தசமயத்தைத் தழுவி அதன் கொள்கைகளைப் பரப்ப முயற்சி செய்தான். இதனால் தென்கிழக்கு ஆசியாவின் பெரும்பகுதியில் பௌத்தசமயம் பரவியது. அக்காலக் கட்டங்களில் ஈழத்திலும் புத்தமதம் பரப்பப்பட்டது. ஆரியரால் புகுத்தப்பட்ட சாதி வேறுபாட்டால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என வேறுபட்டிருந்த ஈழமக்களிடையே "உன்னத மனிதகுலத்தில் உயர்வு, தாழ்வு இல்லை" என்ற போதனையோடு வந்த புத்தமதம் இலகுவில் புகுந்து கொண்டது.

கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியத் தமிழரிடையே நாயன்மார்மூலம் சைவசமய விழிப்புணர்ச்சி எழுச்சியுற்றது. சமய குரவர்கள் நால்வரும் தமிழ்மொழி மூலம் பல தேவார, திருவாசகங்களைப் பாடிச் சைவத்தைப் பிறமதங்களில் இருந்து பாதுகாத்து நிலைநாட்டினர். தமிழ் அரசர்கள் சைவசமயத்திற்கு மாறினர். தென்னிந்திய தமிழர் மத்தியில் தோன்றிய இம்மாற்றம் வழமை போலத் தமிழீழத்திலும் ஏற்பட்டது. தமிழ் மொழி மூலம் நாயன்மார் மேற்கொண்ட முயற்சி ஈழத்தில் ஈழத் தமிழர் இடையே சைவசமய புத்துணர்வை ஏற்படுத்தியது.[6] தீவின் தென் பகுதியில் வாழ்ந்த சிங்கள மக்கள் புத்தசமயிகளாகத் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் ஆதிகாலந் தொட்டுத் தீவின் தென்பகுதியில் இருந்து வந்த பல சிவாலயங்கள் அழிந்து போயின.

6 சமயகுரவர்கள் தமது தேவாரப்பாடல்களில் ஈழத் திருத்தலங்களையும் பாடியுள்ளது சைவ சமயப் பாதுகாப்பு ஈழத்திலும் தேவைப்பட்டது என்பதை நிலைநிறுத்தும்.



படிப்பகம்



நிற்கின்ற நிலையிலுள்ள புத்தர்சிலை

padippakam



சில விகாரைகளாக மாற்றப்பட்டன. இதற்கு அபயகிரி, இசுருமுனிய விகாரைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

அநுராதபுரம் மற்றும் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மக்களே வாழ்ந்தமையினால் இப்பகுதிகளிற் காணப்படும் ஆதிகாலத்துப் புத்தசிலைகள் தென்னிந்திய சிற்பக்கலையை ஒத்தவையாக (புத்தர் நிற்கின்ற நிலையில்) அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இசுலாம்

ஈழத்தில் தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினர் இசுலாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். ஈழம் இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமையால் அதற்குக் கிழக்கேயும் மேற்கேயும் அமைந்துள்ள நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் அங்கே வந்து தங்கித் தமது வர்த்தகத்தினை மேற்கொண் டனர். இதனால் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கரும், உரோமரும் பெருமளவிலும் உரோமப் பேரரசு வீழ்ச்சியின் பின் 6ஆம் நுற்றாண்டு வரை பாரசீகரும், அதனைத் தொடர்ந்து 9ஆம் நூற்றாண்ட-ளவில் அராபிய எழுச்சியுடன் அராபியரும் வர்த்தகத்தில் மேலோங்கி இருந்தனர்.

அராபியர் கையில் கடல்வாணிப ஆதிக்கமும் வர்த்தகமும் மேலோங்கி இருந்த 8ஆம், 9ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் அராபியரின் குடியேற்றம் பெருமளவில் நடைபெற்றது. வணிகத்தின் பொருட்டு வந்த அராபியர் குடும்பமாகக் குடியேறவில்லை. வணிகத்தின் பொருட்டுக் குடியேறிய ஆண்கள் தமிழ்ப் பெண்களை மணந்துகொண்டனர். இது கி.பி 13ஆம் நூற்றாண்டில் ஆரியச்சக்கரவர்த்திகள் அராபிய நாடுகளுடன்




படிப்பகம்

padippakam



பெருமளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டபோது அதிக அளவில் நடைபெற்றது. அத்துடன் தென்னிந்திய அரசுகளை முகமதியர்கள் கைப்பற்றிய தாலும், வணிக மேம்பாட்டாலும் பல தென்னிந்தியத் தமிழர்கள் மதம் மாறி இசுலாத்தைத் தழுவினர். இவர்களில் கணிசமான பகுதியினர் ஈழந்தில் குடியேறினர். இக்காலகட்டத்தில் தொழில்வாய்ப்பு, பொருளாதாரம் போன்ற காரணிகளாலும் பல தமிழர்கள் மதம் மாறினர். தமிழீழத்தின் துறைமுகங்கள் மேற்கிற்கும் கிழக்கிற்கும் சந்திப்பாக அமைந்ததால் மலேசியாவில் இருந்தும் பல இசுலாமியர் வர்த்தகத்தின் நிமித்தம் குடியேறினர். அராபிய, மலேசிய வணிகக் குடியேற்றங்கள் ஈழத்தின் துறைகளான யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், நீர்கொழும்பு, காலி ஆகிய இடங்களில் ஏற்பட்டன.




இந்துமகாசமுத்திர வணிகர் பாதை

இசுலாமியரின் மொழி தமிழ் மொழியாக இருப்பதுடன் அவர்களது கலை பண்பாடு, தமிழர் கலை, பண்பாடாக இன்று வரை இருக்கின்றது. அத்துடன் இன்றும் சிலாபம், புத்தளம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வாழும் இசுலாமியர் சிலர் தமது ஆதிகாலத் தமிழ்ப் பெயருடன் இசுலாமிய சமயப் பெயரையும் சேர்த்து வழங்கி



படிப்பகம்

padippakam



வருவது குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயர் ஆட்சியின் போது 1626இல் போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்தாந் தைன் போர்த்துக்கேய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலி ருந்த முஸ்லிம்களை அங்கிருந்து துரத்தினான். இது நான்காம் பிலிப்பு மன்னன் கட்டளைப்படியே நடைபெற் றது. (இதற்கு மத வேறுபாடும், கடல் வாணிபத்தில் எழுந்த போட்டியும், வாணிபத்தில் கண்டியரசிற்கு இசுலாமியர் துணை நின்றார்கள் என்பதும் காரணமாக இருக்கலாம்) இதனால் குடிபெயர்ந்த முஸ்லிம்கள் பலர் அதேகாலத்தில் சுதந்திரமாக இருந்ததும் தமிழ்பேசும் மன்னனை உடையதுமான கண்டி இராச்சியத்திலும் மட்டக்களப்புப் பகுதிகளிலும் சென்று குடியேறினர்.

## கிறித்தவம்

5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் மேற்காசிய வர்த்தகர்களின் குடியேற்றம் மிகச் சிறியளவில் ஈழத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. சீரிய இனத்தைச் சேர்ந்த கிறித்தவர் குடியேற்றம் காரணமாக அநுராதபுரப் பகுதிகளில் கிறித்தவ தேவாலயம் ஒன்று இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் போர்த்துக்கேயர் வருகையால் 16ஆம் நூற்றாண்டில் இருந்தே பெருமளவில் தமிழர் கிறித்தவர்களாக மாறினர். இம் மதமாற்றம் ஆங்கிலேயர் காலம்வரை வேலை வாய்ப்பு, கல்வி, பொருளாதாரம் என்பன கருதியே பெரும்பாலும் இடம் பெற்றது. கிறித்தவர்களாக மதம் மாறிய தமிழர் தமது சமயப் பெயருடன் தொடர்ந்தும் தமிழ்ப் பெயர்களை வைத்துக்கொண்டனர். அத்துடன் அவர்கள் தமது கலை, பண்பாடுகளில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்த வில்லை. இதனால் சைவ, கிறித்தவ மக்களிடையே திருமண உறவு தொடர்ந்தும் இருந்து வருகிறது.



படிப்பகம்

padippakam




# 3
# தமிழீழமும் அரசுகளும்

## ஆதிகால அரசுகள்

ஈழம் ஆதிகாலத்தில் சற்று வேறுபட்ட ஒரேமொழி பேசிய இயக்கர், நாகர் என்னும் இரு இனமக்களின் வசிப்பிடமாக இருந்தது. இம்மக்கள் கி.மு 1000ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பின் உபயோகத்தை நன்கறிந்தவர்களாக நிலையான இடங்களில் விவசாயம் செய்து வாழ்ந்தனர். இவற்றுக்கான சான்றுகள் இராமாயணம், மகாபாரதம், சங்கப்பாடல்கள் என்பனவற்றில் காணப்படுகின்றன. அதேபோன்று கல்வெட்டுகள், தொல்லியல் சான்றுகள், வெளிநாட்டு யாத்திரிகர்களின் குறிப்புகள் போன்ற சான்றுகளும் உள. பெருங் கற்கால மக்களாகிய திராவிட இன மக்கள் தீவின் வடபகுதியில் **நாகதீபத்திலும்,** கதம்பநதி (மல்வத்தை ஓயா) கலாஓயா ஆகிய நதிகளின் சாரலில் உள்ள **தாமிரபர்ணியிலும்,** கலியாணிநதி (களனிநதி) முகத்துவாரத்தில் அமைந்த **கலியாணியிலும்,** வளவகங்கை, மாணிக்க கங்கைக்கு இடைப்பட்ட பகுதியாகிய **மகா கமத்திலும்,** மட்டக்களப்பு பகுதியில் **தீகவாவியிலும்** நிரந்தரமாகக் குடியேறி அரசுகளும் அமைத்தனர். பிற்காலத்தில் தீவின் மத்திய மலைப்பகுதியில் மலையக அரசும் உருவானது.

இவர்கள் செயற்கையான நீர்ப்பாசன நாகரிகத்தை உடையவர்களாக இருந்துள்ளனர். இப் பிரதேசங்களிற் காணப்படும் கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் இவர்களின்

படிப்பகம்


6ஆம் நூற்றாண்டுக்கு
முற்பட்ட அரசுகளும்
● திராவிட
▲ ஆரிய
குடியிருப்புகளும்
சம்புத்துறை
கதிரமலை
சிங்கை நகர்
நாகர் கோயில்
ஈழவூர்
மாதோட்டம்
அரிப்பு
நாகதீபம்
ஸ்ரீபதிக் கிராமம்
திரிகூடம்
பொன்பரப்பு
மகாவில்லாச்சி
அநுராதபுரம்
நாகபொக்கணை
தாமிரபர்ணி
தீகவாவி
சிலாபம்
நாகன்சாலை
மலையக
அரசு
கல்யாணி
மகாகமம்
கதிர்காமம்
நாகதுமை

padippakam



நாகரிகத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அத்துடன் இப்பகுதிகளில் முதுமக்கள் தாழிகளில் இறந்தோரை அடக்கம் செய்துள்ளமையும் அவற்றோடு ஈம எச்சங்களாக உரோமக் காசுகளும் காணப்படுவதால் இவைகள் ஆதிகாலந் தொட்டு வாணிபத் தொடர்புகளைப் பிற உலகோடு வைத்திருந்த அரசுகள் என்பது புலனாகின்றன.

## கிரேக்க, உரோமர் குறிப்புகள்

கிறித்துவக்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் உரோமர் ஈழத்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டு இருந்ததைப் **பெரிப்ளூஸ்** என்னும் கிரேக்க கடல் பயணியின் குறிப்புகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அக் குறிப்புக்களில் இலங்கைத்தீவை "பாலசிமுண்டு"என்றும் "செய்லான்" என்றும் குறிப்பிடுவதுடன் இத்தீவு மிகப் பண்டைய மக்களால் "தாப்ரபனே" என்று அழைக்கப்பட்டது என்றும் கூறுகின்றது. மேலும் இக்குறிப்புகளில் முத்துக்கள், ஒளி பொருந்திய இரத்தினக்கற்கள், மஸ்லின்துணி,[7] ஆமை ஓடுகள் என்பன ஏற்றுமதி ஆகின என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிளினி (கி.பி 23-79) தனது நூலில் ஈழம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"....... மேற்கூறப்பட்ட குழுவினரிடமிருந்து பல

---

7 விஜயனும் தோழர்களும் ஈழத்தை வந்தடைந்திருந்த போது குவேனி தாமரை நூலில் ஆடை நெசவு செய்தாள் என்பதை மகாவம்சம் கூறும்.



படிப்பகம்

padippakam



செய்திகளைத் தெரிந்து கொண்டோம். அவற்றுள் தாப்ரபனே என்ற தீவில் ஐந்நூறு நகரங்கள் இருக்கின்றன என்றும், அத் தீவின் துறைமுகம் தெற்கு நோக்கித் தென்கடற்கரையில் உள்ளது என்றும், அந்நகரமே அரசர் தங்கும் இடமென்றும், அந் நகரத்தில் மாத்திரம் இரண்டு லட்சம் மக்கள் வசிக்கின்றனர் என்றும் பல செய்திகளை அறிந்தோம்."

தாப்ரபனே என்பது தாமிரபருணி என்ற சொல்லின் திரிபு என்றும் இலங்கைக்கு இப் பெயரைக் கொடுத்தவர் விஜயன் என்றும் சிங்கள நூல்கள் கூறுகின்றன. ஆனால் இச்சொல் "த்விப ராவண" (DVIPA RAVANA) என்றிருந்திருக்க வேண்டும் என்றும் (இராவணனுடைய தீவு) அதுவே கிரேக்க மக்களின் நாவில் புகுந்து "தாப்-ரபனே" "தாப்ரபனே" என மருவிற்று என்று **மாக்ரிண்டில்** என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.

வடக்கே நாகதீபத்தில் தோன்றிய அரசு காலத் துக்குக் காலம் சிறிது இடம் மாறியுள்ளது. பூநகரியில் இருந்து கதிரமலை (கந்தரோடை), செங்கடநகரி, சிங்கைநகர், நல்லூர் ஆகிய இடங்களுக்கு மாறியுள்ளது. அநுராதபுர அரசு பிற்காலத்தில் பொலநறுவைக்கு மாறியது.

இந்த அரசுகளுக்கெல்லாம் அநுராதபுர அரசு மத்திய அரசாக விளங்கியது. இக்காலம் போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் வேகம் குறைந்த காலம். ஆதலால் ஒவ்வோர் அரசின் கீழும் பல வன்னிமைகள் (சிற்றரசுகள்) தோன்றி இருந்தன. அசோகன்-தேவநம்பிய தீசன் உறவால் அநுராதபுர அரசு மேலும் முக்கியத்துவத்தைப்



படிப்பகம்

padippakam



பெற்றது. அநுராதபுர அரசுக்கும் மற்றைய அரசுகளுக்கும் இடையே தரை வழிப் போக்குவரத்துப் பாதைகள் இருந்ததை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்.

விஜயன் வரவு எனக் குறிப்பிட்ட காலத்திற்கோ, அன்றி புத்த மதம் (மகிந்தன்) வரவிற்கு முன்னரேயே இலங்கையிலுள்ள அரசுகள் அண்மித்துள்ள இந்திய நாட்டுடனும் மற்றும் அரேபிய இந்து சமுத்திர நாடுகளுடனும் வாணிபத்தில் ஈடுபட்டு இருந்தன. கி.மு 3ஆம் நுற்றாண்டுக்கு முன்னரேயே வாணிபத்தில் சிறந்து விளங்கியமைக்கு பிராமிக் கல்வெட்டுக்கள் சான்றாக உள்ளன. மாதோட்டம் (மன்னார்) தீவின் மிகப் பெரிய துறைமுகமாக விளங்கியது.

இலங்கைத்தீவில் ஆதிகாலத்தில் இருந்த அரசர்களைப் பற்றிய எந்த விபரத்தையும் அறிய முடியாது உள்ளது. மகிந்தன் புத்தமதத்தைப் பரப்ப தேவநம்பிய தீசன் காலத்தில் அநுராதபுரத்திற்கு வந்ததினால் அநுராதபுர அரசு தீவில் புத்த மதத்தின் ஆரம்ப இடமாயிற்று. அங்கேவந்து நிலை கொண்ட புத்த பிக்குகள் அரசர்களது வரலாற்றைக் குறித்துவைத்துக் கொண்டனர். இதனால் அநுராதபுர அரசர்களது காலமும் அவ்வப்போது அநுராதபுர அரசைக் கைப்பற்ற நடைபெற்ற யுத்தங்களும் மாத்திரம் இக் குறிப்புக்களில் மூலம் அறியக் கிடக்கின்றது.

தேவநம்பியதீசன் கி.மு 247 முதல் கி.மு 207 வரை ஆட்சி செய்தான். இவன் தனது தந்தை மூத்தசிவன் இறந்த பின் ஆட்சிக்கு வந்தான். தீசனின் பின் அவனது சகோதரன் சூரதீசன் ஆட்சிக் காலத்தில் சேனன், குத்திகன் என்னும் இரு தென்னிந்திய தமிழர்கள் அநுராதபுர அரசைக் கைப்பற்றி ஆண்டனர். இவர்களை



படிப்பகம்

தேவநம்பியதீசன் பரம்பரையில் வந்த அசேலன் என்பான் வெற்றி கொண்டான். அசேலனை எல்லாளன் வெற்றி கொண்டு 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். சரித்திரம் தெரிந்த காலம் முதற்கொண்டு தென்னிந்திய அரசுகள் இங்கு அரசுவாரிசு உரிமையினால் ஏற்பட்ட யுத்தங்களை அடக்குவதற்கே துணைசெய்யவந்தனர். காலத்துக்குக் காலம் ஆட்சியும் புரிந்தனர்.[8] இதனைச் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது போல் சிங்கள, தமிழ் அரச போட்டிகள் எனக் கொள்ள முடியாது. ஏனெனில் எலுமொழியில் இருந்து சிங்கள மொழி கி.பி. முதலாம் நூற்றாண்டளவில்தான் தோன்றியது. புத்தமத வருகை யோடு பல புத்தவிகாரைகள் அநுராதபுரத்தில் அமைக்கப்படலாயின. பௌத்த மதபீடத்தினர் பாளி மொழியில் புத்தரின் போதனைகளை முன்னெடுத்துச் சென்றதனால், பெருமளவு தமிழ்ச் சொற்களை உடைய எலுமொழி, சிங்கள மொழியாக மாற்றமடைந்தது. அத்துடன் அநுராதபுரத்தைச் சுற்றிப் பல சிவாலயங்கள் சிதைந்த நிலையில் உள்ளதைப் புதைபொருள் ஆய்வாளர் கண்டுள்ளனர்.

கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் அதற்குச் சற்றுப் பின்னரும் நடைபெற்ற அரச போட்டிகள், இலங்கை அந்நிய வர்த்தகத்திற்கு ஒரு சந்தையாகச் செயற்பட்டமையும் அவ்வப்போது அநுரதபுரத்தை ஆண்ட அரசர்களை அகற்ற ஈழத்தின் மற்றைய பகுதிகளில் இருந்த அரசர்கள் தென்னிந்திய

---

8 இத்தீவைக் கைப்பற்றி ஆளும் நோக்கோடு தென்னிந்தியரின் பெரும்பாலான படை எடுப்புகள் நடைபெறவில்லை, உள்நாட்டுக் குழப்பத்தை அகற்றி அரசுரிமைக்குரியவனை முடிசூட்டி வைத்துச் சிலகாலம் பாதுகாத்தபின் செல்வதே மூவேந்தர்களின் செயல்களாக இருந்தன.

padippakam



அரசுகளை நாடியதும் காரணமாகக் கொள்ளலாம். ஏனெனில் மொழி, சமய ரீதியில் மக்களுக் கிடையே வேறுபாடுகள் இருக்கவில்லை.

எல்லாளன் என்னும் தமிழ் அரசன் காலத்தில் தீவு முழுவதும் அவன் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. எல்லாளனை (கி.மு 145 -101) துட்டகைமுனு என்பவன் வெற்றிகொண்டதைச் சிங்களவர் இன்றும் முக்கிய நிகழ்வாகக் கருதுகின்றனர். படைகள் மோதாது நேருக்கு நேரான சண்டையின் போது எல்லாளன் யானையில் நின்றும் கீழே வீழ்ந்து இறந்தான். எல்லாளனின் பெருந் தன்மையையும், வீரத்தையும் மதித்து அவன் ஞாபகமாகத் துட்டகைமுனு ஆயிரங்கால்மண்டபம் ஒன்றைக் கட்டி னான். அத்துடன் அவ்வழியாற் செல்வோர் தரித்து வணங்கிச்செல்ல வேண்டும் எனவும் ஆணையிட்டான். இப்பழக்கம் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இருந்தமை, நடைபெற்ற போர், இனவாதப்போர் அல்ல என்பதையும், மக்கள் எல்லாளன் மேல் கொண்டிருந்த மரியாதையையும் எடுத்துக்காட்டுகின்றன.

அத்துடன் துட்டகைமுனுவின் படையில் இருந் தோரில் பலர் தமிழர்கள், எல்லாளன் படையில் இருந்த சிலர் சிங்களவர்கள் என்பதாலும் நடைபெற்ற யுத்தம் மகாவம்சம் கூறுவது போல் சிங்கள - தமிழ் யுத்தமாக இருக்கமுடியாது. அத்துடன் ஆங்கிலேயர் காலம்வரை கல்யாணி அரசு முதற் கொண்டு அநுராதபுர அரசு தீகவாவி அரசு மகாகமை அரசு வரையுள்ள கரையோரப் பகுதிகள் தமிழர் செறிந்து வாழ்ந்த பிரதேசமாக இருந்தமை வரலாற்று உண்மையாகும்.



படிப்பகம்

padippakam



## எல்லாளன் ஆட்சிப் பிரதேசம்






படிப்பகம்

padippakam



# சமயப் போட்டியும் - இனவாதமும்

கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் வைதீகம் (இந்து), சமணம், புத்தம் ஆகிய சமயங்களுக் கிடையே கடும்போட்டி தொடங்கியது. ஈழத்திலும் புத்தம், சைவம் என்பவற்றுக்கிடையே போட்டி தொடங்கியது. அரசர்களைத் தமது சமயங்களில் சேர்த்துக்கொள்ள அந்தந்தச் சமயத்தினர் முயன்றனர். அரசன் எந்தச் சமயத்திற்கு ஆதரவு நல்கினானோ அச்சமயத்திற்கு உயர்வு உண்டாயிற்று. இச்சமயப்போட்டியில் அநுராத புரத்தைச் சேர்ந்த புத்தமதத் துறவிகள் முன்னின்றனர். இப்புத்தமதத் துறவிகள் தமிழ்நாட்டிற்குச் சென்று சமயவாதம் செய்தனர்.வைதீக சமயங்களின் சார்பில் நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் சமயவாதத் தில் ஈடுபட்டுச் சைவத்தையும், வைணவத்தையும் நிலைநாட்டினர். மாணிக்கவாசகர் ஈழத்தில் இருந்து வந்த புத்தபிக்குகளை வாதில் வென்று சைவத்திற்கு வெற்றி யையும் எழுச்சியையும் தேடிக்கொடுத்தார் எனச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன.

3ஆம் நூற்றாண்டு முதல் ஆரம்பித்த இச்சமயப் போட்டிகளும் ஈழத்தில் குழப்பமான அரசியல் நிலை தோன்ற ஒரு காரணியாக இருந்தன. இச்சமயப் போட்டி களின் விளைவாக சைவசமயத்தைத் தழுவியோருக்கும், புத்த சமயத்தைத் தழுவியோருக்கும் இடையே வேற்று மனப் பான்மை வளர்ந்தது. ஈழத்தில் சைவ சமயத்தைச் சார்ந்தோர் தமிழர்களாகவும், புத்தசமயத்தைச் சார்ந்தோர் சிங்களவர்களாகவும் இருந்தனர். ஆதலால் சமய வெறுப்புணர்வு இன வெறுப்புணர்வாக மாறியது. சிங்கள மக்கள் தமிழ்மக்கள் மீது வெறுப்புணர்வு கொண்டவர் களாக வாழ புத்தமத அமைப்புகள் வழிவகுத்தன. எனவே



படிப்பகம்

***ஈழத்தின் வரலாற்றில் சிங்கள-தமிழ் இன எதிர்ப்புணர்வுகள் 3ஆம் நூற்றாண்டு முதல் துளிர்விடத் தொடங்கிப் புத்தமத அமைப்புக்களால் தொடர்ச்சியாக இன்றுவரை வளர்க்கப்பட்டு வருகின்றன. இதனால் இனவாதம் நிரந்தரமான ஒரு தன்மான உணர்வாகச் சிங்களமக்களிடையே உருப்பெற்று விட்டது.***

புத்தமதம் வருமுன்பே தீவின் எல்லாப் பகுதிகளிலும் சிவ வழிபாடு பெருமளவில் இருந்தது. பிராமணர்கள் அரச சபைகளில் செல்வாக்குடன் இருந்தனர்.[9] கி.மு 103இல் வட்டகாமினி (வாலகம்பாகு) அரசனாக இருந்த போது மகாகமை அரசின் (வளவகங்கைக்கு அருகே இருந்த அரசு) வேண்டுகோளுக்கு இணங்கப் பாண்டிய அரசு ஏழு தளபதிகளின் தலைமையில் அநுராதபுரத்தைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பி வைத்தது. மகாகமை அரசும் தீசன் என்பான் (இவனைப் பிராமணன் என மகாவம்சம் குறிப்பிடுகிறது) தலைமையில் ஓர் படையை அனுப்பிவைத்தது. பாண்டியப் படைகளும் மகாகமை படைகளும் அநுரதபுர அரசைச் சூழ்ந்து கொள்ள வட்டகாமினி மலையரட்டைக்கு ஓடி மறைந்தான். பாண்டியத் தளபதிகள் அரசராகினர். கி.மு 89 இல் தாட்டிகன் என்னும் பாண்டியத் தளபதி அரசனாக இருந்தபோது வட்டகாமினி மீண்டும் அரசைப் பெற்றுக் கொண்டான். வட்டகாமினியைத் தொடர்ந்து மகாசீலன், ஈழநாகன், சுப்பு என்போர் ஆண்டனர். சுப்புவைத் தொடர்ந்து வசபன் (கி.பி 127 - 171) ஆண்டான்.

---

9 கி.மு 6ம் நூற்றாண்டுக்கு முன்னரேயே ஆரியர் ஈழத்தில் (விஜயன் வரவு என குறிப்பிடப்பட்ட காலத்திற்குமுன்னரேயே) குடியேறி இருந்தனர்.

padippakam



இக் காலத்தே கி.பி 140 அளவில் கிரேக்க புவியியல் அறிஞர் தொலமி புகழ்பெற்ற உலகப் படத்தை வரைந்தார். இதில் இலங்கைத் தீவை "சாலிக்கே" என்று குறிப்பிட்டதுடன் அவரது படத்தில் குறிப்பிட்டுள்ள இடங்களின் பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. மத்திய மலைப் பிரதேசத்தை மலை (MALAE) என்றும் சிவனொளிபாதமலையை (OULIPADA) என்றும் தெற்கே தெய்வேந்திர முனையை (DONDURA - DOGNA) என்றும் குறிப்பிட்டுள்ளதுடன் தீவின் கரையோரப் பகுதிகளில் சிவாலயங்கள் உள்ளதையும் காட்டுகின்றார். எனவே புத்தமதம் இலங்கைக்கு வந்து நான்கு நூற்றாண்டுகளின் பின்னரும் இலங்கையை ஆண்ட அரசர்களின் பெயர்களும், இடங்களின் பெயர்களும், தமிழ்ப் பெயர்களாகக் காணப்படுவதுடன், சிவ வழிபாடு நாடு முழுவதும் அப்போது இருந்ததையும் அறியக் கூடியதாக உள்ளது.

வசபன் காலத்தில் பல நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. வசபனைத் தொடர்ந்து கோதஅபயன், மகேசன் இப்படியாகப் பல அரசர்கள் ஆண்டனர். கி.பி 435இல் மித்சென் என்பவன் மந்திரியின் உதவியோடு அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். இதனை ஏற்காத மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இதனால் பாண்டிய நாட்டிலிருந்து ஆறு தளபதிகள் தலைமையில் வந்த படை, அரசைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தது. இவர்கள் அநுராதபுர அரசை கி.பி 435-460 வரை ஆண்டனர். இவர்களின் பின் தாதுசேனன் ஆட்சிக்கு வந்தான். தாதுசேனனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். ஒருவன் காசியப்பன் இவன் தாழ்ந்த குலத் திலுள்ள ஒரு பெண்ணுக்குப் பிறந்தவன் என்ற காரணத்தால் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டான். பட்டத்தரசியின் மகன் முகிலன்.



படிப்பகம்




**தலமியின் இலங்கைப் படம்**

padippakam



காசியப்பன், தளபதியின் துணை கொண்டு தனது தந்தையை உயிருடன் வாவியின் அணைக்கட்டினுள் வைத்து மூடிக்கட்டிக், கொலைசெய்து அரசைக் கைப்பற்றினான். பாண்டிய நாட்டுக்கு ஓடிச் சென்ற முகிலன் பாண்டிய அரச உதவியை நாடினான். காசியப்பன் தனது அரண்மனையைச் சிகிரியாக் குன்றில் அமைத்தான். சிகிரியாக் குன்றின் அமைப்பை உளவறியப் பாண்டிய குலப்பெண் அல்லி என்பவள் அனுப்பப்பட்டாள். காசியப்பன் அல்லி மேற் காதல் கொண்டான். இவ்வேளை பாண்டியர் படையோடு வந்த முகிலன் அரசைக் கைப்பற்றினான். புகழ் பெற்ற சிகிரியாக் குன்றில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற ஓவியத்தில் இருப்பது பாண்டியப் பெண் அல்லியினுடையதும் அவளது தோழியினதும் சித்திரமே என்பது சரித்திர கதாசிரியர்களின் முடிவு.

முகிலனின் ஆட்சியின் பின் கி.பி 835 வரை தென்னிந்தியப் படை எடுப்புகள் நடைபெறவில்லை. தென்னிந்திய அரசில் களப்பிரரும், பல்லவரும் ஆட்சியினைப் பிடித்துக்கொண்டனர். பல்வேறு சமயப்பூசல்கள் இடம்பெற்றன. அதேபோன்று அநுராதபுர அரசிலும் பல குழப்பங்கள் நடைபெற்றன. ஈழத்தில் இருந்த அரசுகள் தமக்குள்ளே பூசலிட்டுக்கொண்டன. தத்தமது அரசுகளைக் காப்பாற்றிக்கொள்ளத் தென்னிந்தியத் தமிழர்களைப் படைகளில் கூலிக்கு அமர்த்திக் கொண்டனர்.

## சோழர் ஆட்சி

9ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் சோழப்பேரரசு உதயமாகிற்று. சோழர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றப் போரிட்டபோது, பாண்டியனுக்கு உதவியாக



படிப்பகம்

padippakam



அநுராதபுரப் படைகள் சென்றன. இருப்பினும் தோல்வி கண்ட பாண்டிய அரசன் மானவர்மன் இராசசிங்கன் இலங்கைக்கு வந்து தனது முடியையும், சிங்காசனத்தையும் 3ஆம் உதயன் (கி.பி 945-952) என்பவனிடம் அடைக்கலமாகக் கொடுத்தான். சோழர் அதனை ஒப்படைக்கும்படி கேட்டனர். உதயன் கொடுக்க மறுத்ததனால் கி.பி 949இல் முதலாம் பராந்தகச் சோழன் இலங்கையைத் தாக்கி அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். இருப்பினும் பாண்டிய முடியும், சிங்காசனமும் தெற்கு நோக்கி நகர்த்தப் பட்டன.

கி.பி 993இல் இராசராசன் படையுடன் வந்து தீவின் மேலும் பல பகுதிகளை கைப்பற்றிக் கொண்டான். தொடர்ந்து அவன் மகன் முதலாம் இராசேந்திரன் இலங்கை முழுவதையும் சோழர் ஆட்சியின் கீழே கொண்டு வந்ததுடன் பாண்டியரது முடியையும், அரியணையையும் மீட்டுச் சென்றான்.

அப்போது இருந்த ஈழ அரசுகள் அனைத்தும் சோழரின் ஆட்சியின் கீழ் வந்தன. சோழர் தமது தலைநகராக (சனநாதபுரம்) பொலநறுவையைத் தெரிவு செய்தனர்.[10] அதனால் பல காலமாக இராசரட்டையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் தனது முக்கியத்துவத்தை இழந்தது. சோழர் அரண்மனையை மகாவலி ஆற்றின் கரையோரத்தில் அமைத்தனர். இதனைச்சுற்றிப் பல

---

10 சோழர் பொலநறுவையைத் தலைநகராக மாற்றியதற்கு அநுராதபுர இராசதானியைச் சுற்றி விகாரைகளும் புத்த மடாலயங்களும் இருந்தமையால் தெய்வநம்பிக்கை கொண்ட சோழர் அவற்றிற்கு இடையூறு விளைவிக்காது பொலநறுவைக்கு இராசதானியை மாற்றிப் புதிய நகரை நிர்மாணித்ததுடன் தமது வழிபாட்டிற்கென சிவாலயங்களையும் கட்டிக் கொண்டனர் எனவும் எண்ண இடமுண்டு.



படிப்பகம்

padippakam



சிவாலயங்களைக் கட்டினர். பல அழகிய சிற்ப வேலைப் பாடுகளையுடைய கட்டிடங்கள் இவர்கள் காலத்திலே கட்டப்பட்டன. அரச மாளிகையை விட்டு வெளியேறும் வாசலில் முழுவதும் கற்களால் கட்டப்பட்ட அழகிய சிவாலயம் ஒன்று உள்ளது. அரச மாளிகை உள்மதில் வெளிமதில் கொண்டதாக மூன்று அடுக்கு மாளிகைகளை உடையதாக இருந்தது. அத்துடன் பாரிய கற்களால் கட்டப்பட்ட குமாரபொற் குளம் என்னும் அழகிய நீச்சல் தடாகம் ஒன்றும் உள்ளது. இவை அக்காலத்துத் தமிழர்களது கட்டிட சிற்ப வேலைப் பாடுகளை உலகிற்கு எடுத்துகாட்டுவனவாக உள்ளன. அரண்மனைக்கு வெளியே கல்லில் செதுக்கப்பட்ட கம்பீரத் தோற்றத்துடன் விளங்கும் அழகிய சிலை ஒன்று உள்ளது. இச் சிலை மகாமுனிவராகிய அகத்தியரைக் குறிக்கும் சிலை எனவும், இதனைச் சோழருக்குப் பின் பொலநறுவையை ஆட்சி செய்த பராக்கிரமபாகுவின் சிலை எனவும் கூறுவோர் உளர்.

சோழரின் ஆட்சியின் கீழ் தமிழீழப் பகுதிகளும் இருந்ததனால் சோழரின் ஆட்சிமுறை நிர்வாகம் தமிழீழத் திலும் புகுந்து கொண்டது. இக் காலத்தில் கிராமங்கள் தோறும் "குடஓலை"[11] மூலம் தெரிவு செய்யப்பட்ட பஞ்சாயத்துக் குழுக்கள், விவசாயக் குழுக்கள் என்பன

11 சோழர் காலத்தில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பொருட்டு, பிரதிநிதியாக இருக்கத் தகுதியுள்ளோரில் பிரதிநிதியாக வர விரும்புவோரின் பெயர்களைச் சிறிய ஓலைத்துண்டுகளில் எழுதி ஒரு குடத்தினுள் போட்டுக் குலுக்கி மக்கள் முன்னிலையில் எடுப்பார்கள். எனவே சோழர்காலத்திலோ அன்றி முன்னைய தமிழர் மத்தியிலோ கட்சி ரீதியில் மக்கள் பிளவு பட்டு இருக்கவில்லை. இன்றய சனநாயக முறையிலும் பார்க்க இம்முறை சிறந்தது எனக் கொள்ளலாம்.



படிப்பகம்

padippakam



அமைக்கப்பட்டன. சோழர் காலத்தில் விவசாயக் குழுக்கள் "சித்திரமேழி" என அழைக்கப்பட்டன. இன்றும் யாழ்ப்பாணத்தில் சித்திரமேழி எனும் மிகச் சிறிய விவசாயக் கிராமம் இருப்பதை நாம் அறியலாம். அத்தோடு ஈழத்தின் சகல சிவதலங்களும் திருத்தி அமைக்கப்பட்டன. இக்காலம் முதல் ஐரோப்பியர் ஆட்சிக்காலம் வரை தமிழர் எழுச்சிக்காலமாகவே கருதவேண்டும்.

கி.பி 1069இல் சோழப் பேரரசில் உள்நாட்டுக் கலகம் உண்டாக இலங்கையின் தென் முனையில் இருந்து படையுடன் வந்த கீர்த்தி என்பான் (விஜயபாகு) பொலநறுவை அரசைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால் கி.பி 1070 இல் பொலநறுவை அரசு சிங்களவர் கைக்கு மாறியது. விஜயபாகு ஆட்சிக் காலத்தில் பொலநறுவையில் புத்த விகாரைகள் கட்டப்பட்டுப் புத்தமதம் வளர்ச்சி பெற்றது. கி.பி 1070 முதல் 1186 வரை பொலநறுவையில் சிங்களவர் ஆட்சி மேலோங்கி இருந்தது. குறிப்பாக மகாபராக்கிரமபாகு காலத்தில் சிறப்புற்று விளங்கியது. கி.பி 1186 முதல் உள் நாட்டுக் கலவரங்கள் தொடங்கின. இதனால் கி.பி 1214 இல் பாண்டியரின் துணையுடன் மாகன் என்னும் கலிங்க அரசன் பொலநறுவை அரசைக் கைப்பற்றிக் கொண்டான்.

கி.பி 993இன் பின் முழு இலங்கைத்தீவும் சோழர் ஆட்சியின் கீழ் வந்தபோது அவர்களால் உருவாக்கப்பட்ட பொலநறுவை (சனநாதபுரம்) இராசதானி பல சிவாலயங்களைக் கொண்டு இருந்தது. இவை சிங்களவர் ஆட்சியின் போது (1070-1186) பராமரிக்கப்படாமல் இருந்தன. அத்துடன் சோழரின் பல கட்டிடங்கள் புத்தமத வளர்ச்சிக்காக விகாரைகளாகவும் மாற்றப்பட்டன. இக்



படிப்பகம்

padippakam







படிப்பகம்

padippakam



*56ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது, பொலநறு வையிலுள்ள அகத்தியர் சிலையாகும். இங்குள்ள சோழர்கால சிலைகள் கட்டிடங்கள் என்பன முழுக்கற்களால் கட்டப்பட்டவை. இக்கட்டிடங்களின் இடையே பின்னாளில் விஜயபாகு, பராக்கிரமபாகு ஆட்சிக் காலத்தின் போது விகாரைகளும், புத்தர் சிலைகளும் கட்டப்பட்டன. சிங்கள அரசர் காலத்துக் கட்டிடங்கள், சிலைகள் என்பன செங்கட்டிகளால் கட்டப்பட்டுள்ளமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும். (படம் பக்கம் 36)*

*எனவே பொலநறுவையில் காணப்படும் கம்பீர மான முழுக்கல்லில் செதுக்கிய சிலை அகத் தியருடையதென்றும், அவர் கையில் இருப்பது ஆதித் தமிழ் இலக்கண நூலாம் அகத்தியம் என்றும் கூறுவோரின் கூற்று பொருத்தமுடை யதாகும்.*


*58ஆம், 59ஆம் பக்கங்களில் உள்ள படங்கள் சோழர்காலத்து முதலாவது சிவாலயத்தையும், அரச மாளிகையினுள் அமைந்திருந்த குமார பொற்குளத்தையும் காட்டுகின்றன. இவை முழு முழுக்கற்களால் கட்டப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.*



படிப்பகம்

padippakam






முதலாவது சிவாலயம் - பொலநறுவை



படிப்பகம்

padippakam





குமார பொற்குளம்



படிப்பகம்

padippakam



கல்வெட்டுக் கூறுகின்றது. புத்தளத்து வன்னியர் ராஜவன்னியர் என அழைக்கப் பட்டனர். தமிழீழத்தில் பின்வரும் வன்னிமைகள் இருந்ததாக அறியப்படுகிறது.

1. பெரும் காற்றுப்பற்று 2. முசலிப்பற்று 3. மேற்குமூலை 4. சின்னச் செட்டிகுளம் 5. நடுச் செட்டிகுளம் 6. கிழக்கு மூலை தெற்கு 7. கிழக்குமூலை வடக்கு 8. மேல்பற்று வடக்கு 9. மேல்பற்று கிழக்கு 10. மேல்பற்று தெற்கு 11. பனங்காமம் 12. உடையாவூர் (உடையார்கட்டு) 13. துணுக்காய் 14. கரைச்சி 15. புதுக்குடியிருப்பு 16. முள்ளியவளை 17. கரிக்கட்டுமூலை வடக்கு 18. கரிக்கட்டுமூலை தெற்கு 19. மகாவன்னி 20. திருகோணமலை 21. கொட்டியாரம். 22. கட்டுக்குளம் 23. மட்டக்களப்பு 24. பழுகாமம் 25. மண்முனை 26. போரதீவு 27. பாணமை 28. யாலா 29. புத்தளம்.

இவ்வன்னிமைச் சிற்றரசுகள் யாழ்ப்பாண இராச் சியமாகிய தமிழீழத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய பின்னரும் ஆங்கிலேயர் காலம் வரை தத்தமது பிரதேசத்தை நிர்வகித்து வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாண அரசு 13ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் உலகில் இருந்த ஒரே ஒரு சுதந்திர தமிழ் அரசாகவும் (சேர, சோழ,பாண்டிய அரசுகள் முகம தியராலும் விஜய நகரப் பேரரசாலும் கைப்பற்றப்பட்டு விட்டன) வலிமை மிக்கதாகவும் இருந்தது. இந்து சமுத் திரத்தின் வாணிபம் இவர்கள் கையில் பெருமளவில் இருந்ததாக அறியப்படுகிறது.

உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று வந்த பயணி இபன் பற்றுற்றா டில்லி சுல்தானின் அவையில்



படிப்பகம்

padippakam



எட்டு வருடங்கள் தங்கி இருந்தார். அப்பொழுது அவர் (கி.பி 1344) தமிழீழத்திற்கு வந்தார். அவர் தனது பிரயாண நூலாம் "சாவர் நாமா" என்னும் உலகப் புகழ் பெற்ற நூலில் தமிழீழம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழீழம் வந்த இவர் தமிழீழ மன்னனது சுங்க அதிகாரி களுக்கு வரி செலுத்தியதாகவும் அதன் பின் தமிழீழ மன்னன் செகராசசேகரனைப் புத்தளத்தில் உள்ள அரண்மனையில் சந்தித்ததாகவும், மன்னன் ஒரு பெரும் கல்விமான் எனவும் பல மொழிகளில் வல்லுநன் எனவும் தன்னுடன் அரபு மொழியில் பேசினான் எனவும், தாம் ஈழம் நோக்கி வரும் போது இம் மன்னனின் நூறு கப்பல்கள் கூட்டாகச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு அரபு நாட்டிற்குச் செல்வதைத் தான் கண்டதாகவும், இலங்கை யின் மேற்குத் திசையில் கறுவா வளர்ந்து அதில் பெரும் வியாபாரம் நடைபெற்றது எனவும், பல முஸ்லிம் வியா பாரிகள் நாட்டின் கரையோரங்களில் குடியேறி இருந் ததைத் தான் கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண அரசு அப்போது இத்தீவில் இருந்த கோட்டை, கண்டி அரசுகளைவிடச் சகல வழிகளிலும் சிறப்புற்று வலிமை கொண்டதாக இருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். இவர் தமிழ் மன்னனின் உதவியுடன் சிவனொளிபாதமலை, தெய்வேந்திரமுனை முதலிய பகுதிகளுக்குப் பிரயாணஞ் செய்துள்ளார். தெய்வேந்திர முனையிலுள்ள சைவக் கோயிலில் ஆயிரம் பிராமணர்கள் பூசை செய்ததையும் ஐந்நூறிற்கும் மேற்பட்ட தேவதாசிப் பெண்கள் இறைவனைத் துதிபாடி ஆடியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் கோட்டை, கண்டி அரசுகள் யாழ்ப்பாண அரசின் ஆணையை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தின. இக்காலத் தமிழீழ நாணயங்கள்




படிப்பகம்

padippakam



# ஐரோப்பியர் வருகையின்போது இலங்கைத்தீவிலிருந்த அரசுகள்






படிப்பகம்

padippakam



# தமிழ் வன்னிமைகள்

1. பெரும் காற்றுப்பற்று
2. முசலிப்பற்று
3. மேற்குமூலை
4. சின்னச் செட்டிகுளம்
5. நடுச் செட்டிகுளம்
6. கிழக்கு மூலை தெற்கு
7. கிழக்குமூலை வடக்கு
8. மேல் பற்று வடக்கு
9. மேல்பற்று கிழக்கு
10. மேல்பற்று தெற்கு
11. பனங்காமம்
12. உடையாவூர்(உடையார்கட்டு)
13. துணுக்காய்
14. கரைச்சி
15. புதுக்குடியிருப்பு
16. முள்ளியவளை
17. கரிக்கட்டு மூலை வடக்கு
18. கரிக்கட்டுமூலை தெற்கு
19. மகாவன்னி
20. திருகோணமலை
21. கொட்டியாரம்
22. கட்டுக்குளம்
23. மட்டக்களப்பு
24. மண்முனை
25. பழுகாமம்
26. போரதீவு
27. பாணமை
28. யாலா
29. புத்தளம்



படிப்பகம்

padippakam



சேது நாணயங்கள் என அழைக்கப்பட்டன. இந் நாணயங்கள் செம்பு, பொன் என்பவற்றால் செய்யப்பட்டன.

## சேது நாணயங்கள்



(முன்புறம்) (பின்புறம்)



படிப்பகம்

padippakam



யாழ்ப்பாண அரசிற்குத் திறை செலுத்தி வந்த கோட்டை அரசன் 3ஆம் விக்கிரமபாகு (கி.பி 1356-1374) கம்பளையில் இருந்தான். யாழ்ப்பாண அரசு படையெடுத்து வந்து தமது கறுவாக் காணிகளைப் பறிமுதல் செய்யக்கூடும் என்ற பயத்தில் தனது தளபதி அழகக் கோனார் கையில் நிர்வாகம் முழுவதையும் ஒப்படைத்தான். (அழகக்கோனார் சேரநாட்டுத்தமிழர் எனக் கருதப் படுகின்றது) அழகக்கோனார் நன்கு பாதுகாப்பு உள்ளதும் நீராலும், சகதி நிலத்தாலும் சூழப்பட்டதுமான இடத்தைத் தெரிவு செய்து அங்கே வலிமை மிக்க கோட்டையைக் கட்டினார். இக்கோட்டையைக் கைப்பற்ற முற்பட்ட யாழ்ப்பாண அரசின் படைகள் தோல்வி கண்டது. தமிழர்களைத் தோற்கடிக்க உதவியாக இருந்த இக் கோட்டை "ஜயவாத்தனபுரக்கோட்டை" எனப்பெயர் பெற்றது.

இதன் பின்னர் கி.பி 1446இல் 6ஆம் பராக்கிரம பாகுவின் காலத்தில் இவன் தனது சுவீகாரப் புதல்வன் சம்புமால்குமாரனை (செண்பகப்பெருமாள்) அனுப்பி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றித் தனது மேலாணைக்குக் கீழே கொண்டு வந்தான். ஆனால் கி.பி 1467 இல் பராக்கிரமபாகு இறந்து போக (21 வருடங்களின் பின்) தமிழீழ அரசு மீண்டும் சுதந்திர அரசானது. எனவே தமிழீழமானது மாக.னின் ஆட்சி முதல் போர்துக்கேயர் (கி.பி1619) யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் வரை 400 வருடங்கள் செழிப்பு மிக்க சுதந்திர நாடாகத் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாண அரசுகளின் விபரங்களையும் அவற்றின் வரலாற்றையும் விரிவஞ்சி இங்கு குறிப்பிடாமல் விடுகின்றேன். [13]

13 யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விரிவான தகவல்களைப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் பதிப்பித்த **யாழ்ப்பாண இராச்சியம்** என்னும் நூலில் காணலாம்.



படிப்பகம்

padippakam



# கி.பி. 1215 இலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட அரசர்கள்

1. கலிங்கமாகன் - (1215 - 1240)
   (கூழங்கை சிங்கை ஆரியன்)
2. குலசேகர பரராசசேகரம் - (1240 - 1256)
3. குலோத்துங்கன் - (1256 - 1279)
4. விக்கிரமன் - (1279 - 1302)
5. வரோதயன் - (1302 - 1325)
6. செகராசசேகரன் - (1325 - 1348)
7. குணபூசணன் - (1348 - 1371)
8. வீரோதயன் - (1371 - 1380)
9. ஜயவீரன் - (1380 - 1410)
10. குணவீரன் - (1410 - 1446)
11. கனகசூரியன் - (1446 - 1478)
    (1450 முதல் 1467 வரை யாழ்ப்பாண இராச்சியம் கோட்டை இராச்சியத்தின் கீழ் இருந்தபோது மன்னன் இந்தியாவில் இருந்தான். பின்னர் படையுடன் வந்து தனது நாட்டை மீளப் பெற்றுக்கொண்டான்.))
12. பரராசசேகரன் - (1478 - 1519)
13. சங்கிலி செகராசசேகரன் - (1519 - 1564)
14. புவிராசபண்டாரம் - (1564 - 1565)
15. குஞ்சிநயினார் - (1565 - 1570)
16. பெரியபிள்ளை செகராசசேகரன்- (1570 - 1582)
17. புவிராசபண்டாரம் - (1582 - 1591)
18. எதிர்மன்னசிங்க பரராசசேகரன்- (1591 - 1615)
19. சங்கிலிகுமாரன் - (1615 - 1619)



படிப்பகம்

padippakam



# 4
# ஐரோப்பியர் வருகையும் விளைவுகளும்

## போர்த்துக்கேயர் காலம்

தமிழீழ அரசானது கடலோடிகளான போர்த்துக் கேயரிடம் 1619 யூன் 5இல் வீழ்ச்சியுற்றது. கி.பி 1505 முதல் போர்த்துக்கேயர் கோட்டை (கொழும்பு) இராச்சியத் தில் வந்திறங்கினர். 1518இல் கொழும்பில் ஓர் கோட்டை யைக் கட்டிக் கொண்டு தமது வியாபாரத்தைப் பலப்படுத் திக் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றித் தமது ஆணையின் கீழே கொண்டு வந்தனர். இக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு செகராசசேகரன் (முதலாவது சங்கிலி) மன்னனாக (1519-1561) இருந்தான். கோட்டை அரசைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றப் பலமுறை போரிட்டுத், தோல்வி கண்டனர்.

ஈற்றில் மன்னாரில் வியாபாரம் செய்யவென அனுமதி பெற்று, அவர்கள் அங்கு நிலை கொண்டனர். தமிழரிடையே இருந்த சாதிப்பாகுபாட்டை நன்கு பயன்படுத்தி ஒருபகுதித் தமிழர்களைத் தம்மோடு இணைத்துக் கொண்டு கலகம் விளைவித்தனர். அவற்றையெல்லாம் அப்போது இருந்த யாழ்ப்பாண அரசன் முதலாம் சங்கிலி அடக்கினான். மன்னாருக்குப் படையோடு சென்ற சங்கிலி அங்கு கலகம் விளைவித் தோரையும் போர்த்துக்கேயருக்குத் துணையாக இருந் தோரையும் சிரச்சேதம் செய்தான். இதனால் ஆத்திரம்

படிப்பகம்

padippakam



உற்ற போர்த்துக்கேய அரசு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றப் பல முறை முயற்சி செய்தது.

இறுதியாக இரண்டாம் சங்கிலி மன்னன் (1615-1619) காலத்தில் 1618இல் போர்த்துக்கேயர் உள் நாட்டுக் கலகத்தைத் தூண்டிவிட்டனர். இதற்குப் போர்த்துக்கேய பாதிரியார் பிதுறுபொட்டன்கொன் தலைமை தாங்கினார். எனவே சங்கிலி மன்னன் கலகங்களை அடக்க நடவடிக்கை எடுத்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகத் தனது படையைப் பலப்படுத்தினான். தமிழ் நாட்டில் இருந்து இரகுநாதநாயக்க மன்னனின் உதவியைக் கோரியதும் மன்னன் வர்ணகுலத்தான் என்னும் தளபதி தலைமையில் ஐயாயிரம் வீரர்களை அனுப்பி வைத்தான்.

அதேவேளை போர்த்துக்கேயர் பிலிப் டி ஒலிவேரா என்னும் தளபதி தலைமையில் கோட்டையில் இருந்து மன்னாரை நோக்கிக் கடல்வழியாக நூறு போர்த்துக்கேய வீரர்களும் சில நூறு சிங்களக் கூலிப் படைகளும், தரை மார்க்கமாக நூற்றிமுப்பது போர்த்துக்கேயரும் இரண்டா யிரத்துக்கு மேற்பட்ட சிங்களக் கூலிப்படைகளும் பூநகரி ஊடாக யாழப்பாணத்தை வந்தடைந்தனர். இங்கு நடைபெற்ற யுத்தத்தில் சங்கிலியன் கைது செய்யப் பட்டான். தமிழீழ அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சி யடைய சிங்கள கூலிப்படையினர் துணையாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட சங்கிலி மன்னனை மக்கள் அறியாதவாறு உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டு சென்று தென் இந்திய மேற்குக்கரையிலுள்ள கோவா நகரத்திற்கு அனுப்பினர். அங்கு சங்கிலி மன்னன் தூக்கிலிடப்பட்டான். **இதனால் ஈழத்தமிழர் இறைமை முதல் தடவையாகப் போர்த்துக்கேயரிடம் சென்றது.**



படிப்பகம்

padippakam



1619 முதல் 1658 வரை தமிழீழப் பகுதி போர்த்துக்கேயரால் ஆளப்பட்டது. இக்காலத்தில் போர்த்துக்கேயர் பல சைவ ஆலயங்களை அழித்தனர். பல கிறித்தவ தேவாலயங்களைக் கட்டினர். ஒருபகுதித் தமிழ் மக்கள் சைவசமயத்தில் இருந்து கிறித்தவ சமயத்திற்கு மாறினர். இதனால் தமிழீழமக்களில் ஒரு பகுதியினர் கிறித்தவ சமயத்தவர் ஆக உள்ளனர்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுற்ற போதும், தமிழீழத்தின் தென்பகுதியில் அமைந்திருந்த கொட்டியாற்றுப்பற்று வன்னிமை, பழு காமம் வன்னிமை, பாணமை வன்னிமை, யாலா வன்னி மை, மண்முனை வன்னிமை ஆகியன போர்த்துக்கேயரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளாது தமக்கு அண்மித் ததும் தமிழனை அரசனாகக் கொண்டிருந்த கண்டியரசின் மேலாண்மையையும், பாதுகாப்பையும் நாடி இருந்தன. ஆனால் அவை தன்னாட்சியுள்ள அரசுகளாகவே இருந் தன.

மேற்கூறிய நான்கு வன்னிமைகளையும் தவிர்ந்த யாழ் குடாநாட்டுக்குத் தெற்கே இருந்த ஏனைய தமிழ் வன்னி மைகள் போர்த்துக்கேயரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை கண்டி அரசிற் கும் திறை செலுத்தவில்லை. எந்த ஒரு அரசின் பாது காப்பையும் நாடாது, தம் ஆட்சியைச் செலுத்திவந்தன. இந்நிலைமை ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தின் தொடக்கம் வரை நீடித்தது. வன்னியில் இருந்த அரசுகள் காலத்திற் குக்காலம் போர்த்துக்கேய ஒல்லாந்த அரசுகளுக்குத் திறை செலுத்தி வந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை. இடையிடையே திறை செலுத்த மறுத்துக் கலகம் விளைவித்தனர். இவ்வாறான நிலமை ஆங்கிலேயர் காலம் வரையும் நீடித்திருந்தது.



படிப்பகம்

padippakam



# பண்டாரவன்னியன்

ஆங்கிலேயர் ஆட்சியின்போது வன்னி நாட்டின் இறுதி மன்னன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இவன் ஒல்லாந்தருக்கு திறை செலுத்த மறுத்து தன் பிரதேசத்தை ஆண்டுவந்தான். ஒல்லாந்தரிடம் இருந்து ஆட்சி ஆங்கிலேயருக்கு மாறியதும் ஆங்கிலேயர் பல முறை பண்டாரவன்னியனை வெற்றிகொள்ள முயற்சித்தனர். 1803 ஆகஸ்ட் 25ஆம் திகதி முல்லைத் தீவில் கப்டன் வொன்டிறிபேக் தலைமையில் வந்திருந்த படையை பண்டாரவன்னியன் தாக்கி அழித்தான். உயிர் பிழைத்தோர் தப்பியோடி விட்டனர்.

இதன் பின்னர் திருகோணமலையில் இருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் வந்த படை முல்லைத் தீவைக் கைப்பற்றியது. முல்லைத்தீவில் பண்டாரவன்னியனுக்குத் துணைபுரிந்த குற்றத்திற்காக குமரசேகரம் முதலியாரும் அவர் நண்பர்களும் தூக்கிலிடப்பட்டனர். அவ்விடம் இன்றும் "தூக்கு மரத்தடி" என அழைக்கப் படுகிறது.

எட்வேட் மெட்சின் தலைமையில் திருகோணமலையில் இருந்து வந்த இப்படை முல்லைத்தீவில் நிலை கொண்டது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து 19ஆம் றெஜிமென்டைச் சேர்ந்த படைப் பிரிவு ஒன்று ஜோன்யவெபின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி நாட்டுக்கு அனுப்பப்பட்டது. இவர்கள் பல வீடுகளைத் தீக்கிரையாக்கினர். இதே வேளை கப்டன் வொன் டிறிபேக்கின் தலைமையில் வந்த படை கற்சிலைமடுவில் எதிர்பாராதவிதமாகப் பண்டாரவன்னியன் படைகளைத் தாக்கியது. 1803 ஒக்டோபர் 31ஆம் நாள் அதிகாலை 5 மணி அளவில் இப் போர் நடைபெற்றது.



படிப்பகம்

padippakam



இதில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். கற்சிலை மடுவில் பொறிக்கப்பட்டு இருக்கும் ஆங்கில கல்வெட்டு இதனை உறுதிபடுத்துகிறது. அக்கல்வெட்டில் " HEREABOUTS CAPTAIN VON DRIBEREG DEFEATED PANDARA VANNIYAN 31st OCTOBER 1803" என எழுதப்பட்டுள்ளது. இவ்யுத்தத்தின் போது பண்டாரவன்னியன் வசமிருந்த கண்டி அரசின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்று ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பண்டார வன்னியனுக்கும் கண்டி அரசன் கண்ணுசாமிக்கும் (ஸ்ரீவிக்கிரமராஜ சிங்கன்) இடையே பரஸ்பரம் படையுதவி இருந்து வந்தமை அறியப்படுகிறது.

1803இல் தோல்வியுற்ற பண்டாரவன்னியன் மீண்டும் படைகளைத் திரட்டி 1810இல் கிழக்குமூலை தெற்கிலிருந்து தாக்கினான். இதைப் பிரித்தானிய அறிக்கைகள் சிறு கிளர்ச்சி எனக் கூறுகிறது. பின்னர் 1811இல் உடையா வூரில் நடைபெற்ற யுத்தத்தில் படுகாயமடைந்த பண்டார வன்னியனை அவனது வீரர்கள் பனங்காமம் வன்னி மைக்கு எடுத்துச்சென்றனர். அங்கே இந்த மாவீரனின் உயிர் பிரிந்தது. ஆங்கிலேயரின் குறிப்புகளில் மாவீரன் பண்டாரவன்னியன், கொள்ளைக்காரன் எனக் குறிப் பிடப்பட்டுள்ளான். பண்டாரவன்னியனின் நாட்டைக் கொள்ளையிட வந்தோர் உரிமையாளனையே கொள்ளைக்காரனெனக் குறிப்பிட்டுள்ளனர். உலகில் ஆக்கிரமிப்பாளர் வழமைபோல் விடுதலை வீரர்களுக்குச் சூட்டும் பட்டமே இது.

போர்த்துக்கேயர் காலத்தில் தமிழீழத்தின் வன்னிச் சிற்றரசுகள் தமது ஆட்சியைத் தாமே செய்து வந்த போதும் திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத் தீவு, மன்னார் போன்ற முக்கிய துறைமுகங்கள் போர்த்துக்கே யரின் கட்டுப்பாட்டில் இருந்தன.



படிப்பகம்

padippakam



# ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கேயருக்குப் போட்டியாக ஆசிய நாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டு இருந்தவர்கள் ஒல்லாந்தர் ஆவர். போர்த்துக்கேயரிடமிருந்து கண்டி அரசைப் பாதுகாத்துக் கொள்ளக் கண்டி அரசன் ஒல்லாந்தர் தயவை நாடி இருந்தான். எனவே ஒல்லாந்தரிடம் இருந்து தமது பகுதிகளைப் பாதுகாத்துக் கொள்ளப் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்தாந்தைன் திருகோணமலையில் இருந்த சிவ ஆலயத்தை இடித்துக் கோட்டையைக் கட்டினான். அதன் பின் மன்னார், மட்டக்களப்பு, காலி ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டப்பட்டன.

1638இல் ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து திருகோணமலை, கொழும்பு, மன்னார் என்பவற்றையும் இறுதியாக 1658இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். இதன் மூலம் தமிழீழத்தில் இருந்த போர்த்துக்கேயர் மேலாதிக்கம் ஒல்லாந்தரிடம் கைமாறியது.

கண்டி இராச்சியத்தின் அரசர்கள் ஒல்லாந்தருடன் ஒப்பந்தங்கள் செய்து சமாதானமாக வாழ்ந்தனர். தமது கறுவா, மிளகு போன்ற வாசனைத் திரவியங்களை அவர்களுக்குக் கொடுத்து மாற்றீடாக மட்டக்களப்பு, புத்தளம் போன்ற தமிழீழத் துறைமுகங்களைத் தமது வணிகத்திற்குப் பாவித்து வந்தனர். கண்டி மன்னனின் இவ்வணிகத்தில் முஸ்லிம்கள் பெரும்பாலும் ஈடுபட்டு இருந்தனர். தமது வருவாயைப் பெருக்கிக்கொள்ள எண்ணிய ஒல்லாந்தர் முஸ்லிம்களின் வாணிபத்தைத் தடைசெய்ய எண்ணினார்கள். இதனால் 1707 இல் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய



படிப்பகம்

padippakam



துறைமுகங்களை மூடிவிட்டனர்.

கண்டி அரசிற்கும் ஒல்லாந்தருக்கும் இருந்த ஒப்பந்த நிலைமை கண்டி அரசன் நரேந்திரசிங்கன் இறப்போடு (கி.பி 1739) முடிவுற்றது.[14] கண்டி அரசின் இராணி (நரேந்திரசிங்கனின் மனைவி) மதுரையைச் சேர்ந்தவள். எனவே தனது கணவன் இறந்ததும் தனது சகோதரனை மதுரையில் இருந்து வரவழைத்து அரசனாக்கினாள். இவனுக்கு ஸ்ரீ விஜய இராசசிங்கன் எனப் பெயர் சூட்டப்பட்டது. இவனும் இராமநாதபுர அரசபரம்பரையைச் சார்ந்த தமிழ்ப்பெண்ணையே மணந்து கொண்டான். அதனால் இராமநாதபுரத்திலுள்ள அவ்வரசியின் தந்தையும் அநேக தமிழ்ப் பரிவாரங்களும் கண்டியிற் குடியேறினர்.

இராஜசிங்கன் கண்டிக்கு அரசனானதும் ஒல்லாந்தருடன் இருந்த வியாபாரத்தை முற்றாக நிறுத்தினான். அத்தோடு புத்தளத்தில் இருந்த முஸ்லிம்கள் மூலம் கறுவா, மிளகு, பாக்கு போன்ற பொருட்களை இந்தியக் கரைக்கு அனுப்பி வியாபாரத்திலும் ஈடுபட்டான்.

இராஜசிங்கன் ஆட்சி தொடங்கிய காலத்தில் புத்தமதப் போதனை செய்யவே புத்தமதத் துறவிகள் இல்லாது இருந்தனர். இராஜசிங்கன் சைவத் தமிழனாக இருந்தபோதும் சீய நாட்டிலிருந்து புத்தபிக்குகளை வரவழைத்துப் புத்த மதத்திற்கு உயிர் ஊட்டினான்.

---

[14] மதுரையை ஆண்ட (1710-1732) நாயக்கன் விஜயரங்க சொக்க நாதனிடம் திருமணத் தொடர்பு கொள்ளும் விருப்பத்துடன் சிங்கள மன்னன் தூது அனுப்பினான். நாயக்கன் தான் உயர்குடி என்றும் சிங்களவர் தாழ் குடியென்றும் கூறி மறுத்தான் என டக்டர் கே.கே. பிள்ளை அவர்கள் தமது தமிழக வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார்.



படிப்பகம்

padippakam



அவன் இறந்ததும் அவனது மைத்துனன் தென் இந்தியாவிலிருந்து வந்து அரச பொறுப்பை ஏற்றுக்கொண்டான். இவன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் எனப்பெயர் மாற்றிக் கொண்டான். இவனும் தனது மைத்துனன் போல புத்தமத வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டான். பல விகாரைகள் புனரமைக்கப்பட்டன. இவன் காலத்திலேதான் கண்டியிலிருக்கும் புத்தமதபீடம் அமைக்கப்பட்டது. இத் தமிழ் மன்னர்களின் நடவடிக்கைகள் தமிழர்களது பரந்த மனப்பான்மைக்கும், பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன. அதேவேளை, புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் கண்டி இராச்சியத்தின் அழிவுக்கும் காரணியாக இருந்தார்கள் என்பதை வரலாறு காட்டுகின்றது.

என்றுமே தமிழர் புத்தமத வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டிலர். ஆனால் ராஜவலிய எனும் வரலாற்று இதிகாசத்தில் ஒருபடை எடுப்பு நடந்ததாகவும் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் புத்த பிக்குகளின் கண்களைத் தோண்டியும் கொன்றும் பௌத்த ஆலயங்களை அழித்தும் சென்றதாகக் கூறுகிறது. பதினான்கு நாட்கள் சிங்களவர் குடியிருப்புகள் யாவும் நெருப்பும் புகையுமாக இருந்தன என வர்ணிக்கின்றது. உண்மையில் இந்தக் கொடூரத்தைத் தமிழர்கள் செய்யவில்லை. தனது சகோதரி புத்தமதத்தைத் தழுவிப் புத்தபிக்குனியாகி இலங்கைக்கு சென்றதால் ஆத்திரங் கொண்ட கலிங்க மன்னனே இந்த மத ஒழிப்பு அக்கிரமத்தைச் செய்தான். ஆனால் கலிங்கர் செய்த இச் செயல் தமிழரால் செய்யப்பட்டது எனத்திரித்துக் கூறப்பட்டுள்ளது. இந்நூல் உயர்தர சிங்கள வகுப்புகளில் பாடநூலாகப் போதிக்கப்படுகிறது. இவ்வாறான கல்வி மூலம் இனவாதம் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசினால் வளர்க்கப்படுகிறது.



படிப்பகம்

padippakam



இராஜசிங்கன் காலத்துப் புத்தமத வளர்ச்சி பற்றியும் அவனது சேவை பற்றியும் திபோத்துவாவே சித்தார்த்த புத்தரசசித என்னும் புத்தபிக்கு மகாவம்சத்தில் (புவனேகபாகு தொடக்கம் உள்ள வரலாற்றை) எழுதிச் சேர்த்துள்ளார்.

ஒல்லாந்தர் சிறந்த நீதி நிர்வாகத்தை நடத்த முற்பட்டனர். சிறந்த சட்டங்களை ஆக்கும் பொருட்டு ஒல்லாந்திலும், பற்றேவியாவிலும் வெளியிடப்பட்ட சட்டங்களுடன், தமிழர்களது "தேசவழமை" என்னும் சட்டத்தையும் உள்ளடக்கித் தமிழ் மக்களுக்கான சட்டத்தை உருவாக்கினர்.

ஒல்லாந்தர் தமிழீழ இராச்சியத்தையும், சிங்கள கோட்டை இராச்சியத்தையும் ஒன்றிணையாது தனித்தயே நிர்வாகம் செய்து வந்தனர். இதற்குப் பல காரணங்கள் உள. அடிப்படையாகத் தமிழ், சிங்கள இனங்கள் மொழி, சமயம், பண்பாடு என்பவற்றால் வேறுபட்டிருந்தன. இவை மாத்திரம் அன்றி, இரு இனங்களும் வேறுபட்ட அரச நிர்வாக நீதி பரிபாலன முறைகளைக் கொண்டிருந் தமையும், ஒல்லாந்தரால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. எனவே ஒல்லாந்தர் தம்வசம் உள்ள பகுதிகளை இந் நூலின் 78ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நீதி - நிர்வாக மாவட்டங்களாகப் பிரித்து நிர்வாகம் செய்து வந்தனர்.

இவ்வாறாக நிர்வாகப் பிரிவுகளை ஒல்லாந்தர் அமைத்து நிர்வகித்து வந்தபோதும் வன்னிமைப் பிரதேசத் தின் நீதி, நிர்வாகத்தை அப் பிரதேசத்திலுள்ள வன்னிமை அரசுகளே செய்து வந்தன. ஒல்லாந்தர் சில காலங்களில் வன்னிமை அரசிடம் இருந்து யானைகளைத் திறையாகப் பெற்றுக் கொண்டனர்.



படிப்பகம்

padippakam





Coat-of-Arms, Jaffna

வளவகங்கையிலிருந்து மகா ஓயா வரையுள்ள யாழ்ப்பாண நீதி நிர்வாகப் பிரிவு.



Coat-of-Arms, Galle

பெந்தோட்டை கங்கையில் இருந்து வளவகங்கை வரையுள்ள காலி நீதி நிர்வாகப் பிரிவு.



Coat-of-Arms, Colombo

மகாஓயாவிலிருந்து பெந்தோட்டை கங்கை வரையுள்ள கொழும்பு நீதி நிர்வாகப் பிரிவு.



படிப்பகம்

padippakam



ஒல்லாந்தர் குறிப்பிடும் யாழ்ப்பாண நீதி, நிர்வாகப் பிரிவானது, ஐரோப்பியர் இலங்கைத்தீவுக்கு வருமுன்னர் தமிழர்களால் ஆட்சி செய்யப்பட்ட அவர்களது பாரம்பரிய பிரதேசத்தின் ஒரு பகுதியாகும்.

நீதி, நிர்வாகப் பிரிவுகளை மூன்று பிரிவுகளாக அமைத்துக் கொண்ட ஒல்லாந்தர் தாம் கைப்பற்றி இருந்த பகுதிகளை ஆறு ஆட்சி மாவட்டங்களாகப் பிரித்திருந்தனர்:

1. தெதுறு ஓயா தொடக்கம் மேதரகம்ஆறு வரை உள்ள புத்தளம் கற்பிட்டி ஆட்சி மாவட்டம்.

2. மேதரகம்ஆறு (அருவி ஆறு) தொடக்கம் வடக்கே யாழ் குடாநாடு வரை வன்னிப்பகுதி என்பவற்றை உள் அடக்கி, கிழக்குக் கரையில் கொக்கிளாய் வரை-யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம்.

3. கொக்கிளாய் தொடக்கம் கிழக்கு கரையோரமாகத் தெற்கே வெருகல்ஆறு வரை உள்ள-திருகோணமலை ஆட்சி மாவட்டம்.

4. வெருகல் ஆற்றில் இருந்து கரையோரமாகத் தெற்கே கும்புக்கன்ஆறு வரை உள்ள-மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம்.

இவை நான்கும் தமிழ் ஆட்சி மாவட்டங்களாகும். ஒல்லாந்தரின் இவ்வாறான பிரிவால் முதன் முதலாக கும்புக்கன் ஆறுதொடக்கம் தெற்கே வளவை கங்கை வரையிலான தமிழ்ப் பிரதேசம் காலி ஆட்சி (சிங்கள) மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இப்பிரதேசம் தமிழரின் ஆதிக்குடியிருப்பான மகாகமை பிரதேசம் ஆகும்.



படிப்பகம்

இப் பிரதேசத்திலேயே யாலா வன்னி சிற்றரசும் இருந்தது.

**இதே போன்று தெதுறு ஓயா தொடக்கம் மகாஓயா வரையான பகுதி கொழும்பு ஆட்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. தமிழீழத் தாயகத்தின் தெற்கு, மேற்கு எல்லைகள் முதல் தடவையாக சிங்களப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது.**

5. கும்புக்கன் ஆற்றில் இருந்து தெற்கேயும் மேற்கேயும் கரையோரமாகப் பெந்தோட்டை கங்கைகரை வரையுள்ள காலி மாவட்டம்.

6. பெந்தோட்டை கங்கை தொடக்கம் வடக்கே தெதுறு ஓயா வரை உள்ள கொழும்பு ஆட்சி மாவட்டம்.

இந் நீதிப் பிரிவுகளில் தமிழ் மக்கள் அவர்களது தேசவழமைச்சட்டத்திற்கு அமைவாகவே நீதி நிர்வாகத் திற்கு உட்படுத்தப்பட்டனர். மக்களிடம் இருந்து வரி வசூலிக்கும்போது தமிழ் அரசுகள் கையாண்ட வழி முறைகள் பின்பற்றப்பட்டன. தமிழ் மக்கள் தமது நிலங் களில் விளையும் பொருட்களில் ஒரு பாகத்தை இறையா கக் கொடுத்தார்கள் (தலைவரிமுறை). இதையே ஒல்லாந் தரும் வரி வசூலிக்கும் முறையாகப் பின்பற்றினர். ஆனால் சிங்கள ஆட்சி மாவட்டத்தில் இராசகாரிய நிலமானிய முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

**இவற்றின் மூலம், தமிழ் மக்கள் நிர்வாகம், நீதிபரி பாலனம், வரிசெலுத்தும் முறை, சொத்துரிமை என்பவற் றாலும்கூட சிங்களவரிடம் இருந்து வேறுபட்ட நாட்டினர் என்பதை அறிந்த ஒல்லாந்தர் அவற்றைப் பேணிப் பாதுகாத்தனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.**

padippakam



## ஒல்லாந்தர் காலத்து ஆட்சி மாவட்டங்கள்






படிப்பகம்

padippakam



மக்கள் தமிழ்மொழியைப் பேசுகிறார்கள். **நீர்கொழும்புக்குத் தெற்கே தொடக்கம் தெய்வேந்திர முனைவரையுள்ள கரையோரப் பகுதிகளில் சிங்களமொழி பேசப்படுகிறது**".

## சுவைட்சர் குறிப்புகள்

ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைத்தீவுக்கு வந்து சென்றவர்களுள் கிறிசுத்தோபர் சுவைட்சர் (CHRISTOPHER SCHEWITZER) என்பவர் விட்டுச் சென்ற குறிப்புகளும் மிக முக்கியமானவை. அவர் கூறியதாவது,

> "இந்தத் தீவின் மற்றக் குடிகளான தமிழர் காலியிலிருந்து, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், அரிப்பு, கற்பிட்டி, நீர்கொழும்பு வரையும் வாழ்கின்றனர். வன்னி நாட்டிலுள்ள தமிழரைத் தவிர ஏனைய தமிழர் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் உள்ளனர். வன்னி நாட்டிலுள்ள தமிழர் தமக்கென ஓர் அரசைக் கொண்டுள்ளனர்".

ஒல்லாந்தர் காலத்தில் அரோசிமித், சே.டு. பெரோனின் (1789) போன்ற பலராலும் வரையப்பட்டுள்ள இலங்கைத்தீவின் படங்களில் **ஒல்லாந்தரது ஆட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களைக் குறிப்பிட்டுக் காட்டி அவர்கள் ஆட்சிக்கு உட்படாத தமிழ் வன்னிமைகளையும் கண்டி அரசையும் ஒன்றாக இணைத்துக்காட்டியுள்ளனர்.** எனவே அக்காலத்துக் கண்டியரசு எனக்குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் முழுவதும் கண்டியரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை அல்ல என்பது கவனிக்கத்தக்கது. ஆனால் வன்னி, கண்டி அரசுகள்



படிப்பகம்

padippakam



தமக்குள் புரிந்துணர்வுடன் ஒன்றிணைந்து செயற்பட்டன. வாணிபம், படை, ஆயுத உதவிகள் ஆதியன பரிமாற்றப் பட்டதற்குச் சான்றுகள் உண்டு.

## ஆங்கிலேயர் காலம்

உலகில் ஒல்லாந்தர், பிரான்சியர் என்பவர் களோடு எழுந்த போட்டி காரணமாக இலங்கையைக் கைப்பற்றத் துணிந்த ஆங்கிலேயர் 1795 ஆவணி 18ஆம் நாள் திருகோணமலை துறைமுகத்தை முற்றுகையிட்டு எட்டுத் தினங்களில் கைப்பற்றிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து ஐப்பசி 5ஆம் திகதி வரையில் மட்டக்களப்பு முதல் மன்னார் வரையுள்ள தமிழீழத்தின் துறைமுகங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமாயின. இதனால் தமிழீழத்தின் மேலாதிக்கம் 1795 முதல் ஒல்லாந்தரிடம் இருந்து ஆங்கிலேயரிடம் கைமாறியது.

தொடர்ந்து கோட்டை இராச்சியத்தை 1796 மாசி மாதம் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர் தமிழீழம்; கோட்டை ஆகிய இரு அரச பகுதிகளைத் தமதாக்கிக் கொண்டனர்.

தாம் கைப்பற்றிய இவ்விரு பகுதிகளையும் ஆங்கிலேயர் சென்னையில் இருந்தே நிர்வகித்தனர். தமிழீழப் பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்களினால் 1798 ஒக்டோபர் 12 முதல் பிரடெரிக்நோர்த் (FREDRICK NORTH) இலங்கையில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் சென்னை ஆளுநர் மற்றும் கிழக்கிந்திய நிறுவனங்களின் ஆலோசனைப்படி நடக்கக் கட்டுப்பட்டவர். ஆனால் வன்னிப்பிரதேசச் சிற்றரசுகள் வரிகட்ட மறுத்துக் கலகம் விளைவித்ததன் காரணமாக 1802 ஆம் ஆண்டு முதல்



படிப்பகம்

padippakam



தனித்துவமாகவும் நேரடியாகவும் பிரித்தானிய அரசின் நேரடி ஆளுமையின் கீழ் இலங்கை ஒரு குடியேற்ற நாடாகக் கொண்டுவரப்பட்டது. இருப்பினும் கண்டி அரசு சுயாதீனமான ஒரு அரசாக இருந்தது.

## கண்டி அரசு

தமிழீழ அரசின் வரலாற்றை எழுத முற்படும் போது கண்டியரசின் இறுதிக் காலத்தைக் குறிப்பிடுவது மிக அவசியம். ஏனெனில் அது தமிழர்களுக்கு ஒரு படிப் பினையாக உள்ளது.

கண்டியின் அரசர்களாகத் தமிழ் அரசர்கள் வந்தபின் ஒல்லாந்தருக்கோ, ஆங்கிலேயருக்கோ திறை செலுத்தவில்லை. அத்துடன் ஆங்கிலேயரது கறுவா, மிளகு தோட்டங்களில் வேலை செய்தோரை அவர்களுக்கு வேலை செய்ய வேண்டாம் எனக் கூறித் தமது பிரதேசத்துக்கு அழைத்துக் கொண்டனர். அத்துடன் புத்தமதத்திற்கு உயிரூட்டினர் என்பதையும் முன்னர் குறிப்பிட்டு இருந்தோம். தமிழர்கள் தமது தெய்வங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்வது போன்று புத்தரின் தந்தத்தையும் ஊர்வலமாக எடுத்துச்செல்லும் "பெரகராவையும்" உருவாக்கியதும் தமிழ் மன்னனான இராஜசிங்கனே.

இருந்தபோதும் தமிழன் அரசனாக இருப்பதை இனவாதம் கொண்ட சிங்களப் பிரதானிகள் பலர் விரும்பவில்லை. இவர்களுக்குத் தலைவனாகப் பிலிமத்தலாவை என்னும் தலைமை அதிகாரியே செயற்பட்டான். இவன் பிரித்தானிய தேசாதிபதி நோர்த்துக்கு, கண்டியரசன் தமிழ்ப்பகுதி வன்னிச் சிற்றரசு



படிப்பகம்

padippakam



களுக்கு உதவி செய்வதாகக் கூறி, கண்டி அரசின் மீது போர் தொடுக்கத் தூண்டினான். 1803இல் நோர்த் போர்ப்பிரகடனம் செய்தார். கண்டியை நோக்கி வந்த ஆங்கிலேய படைகள் தோல்வியுற்றன.

இராஜசிங்கன் தன்னோடு இருந்த அதிகாரிகளே தனது எதிரிகள் என்பதைத் அறிந்து கொண்டான். எனவே அவர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தனக்கு நம்பிக்கையானவர்களுக்குப் பொறுப்புகளைக் கொடுத்தான். கலவரங்களைத் தூண்டிய பலர் தண்டிக்கப்பட்டனர். இதனால் பிலிமத்தலாவையின் செல்வாக்கு பெருமளவு குறைந்தது. அதனால் பிலிமத்தலாவை அரசனைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினான். இதனை அரசனுக்குச் சார்பானோர் கண்டு பிடித்து விட்டனர். எனவே அரசன் இவனைச் சிரச்சேதம் செய்வித்து, எகலப்பொலை என்பவனை முதல் அதிகாரியாக நியமித்தான். அரசன் தமிழனாக இருந்ததினால் தலைமை அதிகாரியாக எப்போதும் சிங்களவர் ஒருவரையே நியமித்தான்.

எகலப்பொலைவும், விக்கிரமராஜசிங்கனை அரசில் இருந்தும் அகற்ற வேண்டும் எனும் கருத்துடையவன் என்பதை அரசன் அறிந்திருக்கவில்லை. எகலப்பொலை அரச எதிர்ப்புக் குழுவுக்கு இரகசிய தலைமை தாங்கினான். அப்போது இலங்கைக்குப் (1812) புதிய தேசாதிபதியாக றொபட் பிரௌன்றிக் நியமிக்கப்பட்டார். இவர் கண்டியரசுடன் சிநேக பூர்வமாக இருக்கவேண்டும் எனக் கூறி அனுப்பப்பட்டவர். எனவே பிரௌன்றிக், இராஜசிங்கனுடன் நட்புக்கொண்டு வியாபார உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பி பல முயற்சிகள் செய்தார். ஆனால் இராஜசிங்கன் அந்நியர்க்கு இடமில்லை என்று எதற்கும் இடம் கொடுக்க மறுத்து விட்டான். எனவே கண்டி மீது படையெடுக்கப் பிரௌன்றிக் முடிவெடுத்தார்.



படிப்பகம்

கண்டியில் தனக்கு உதவி செய்யக் கூடியவர் களுடன் ஆங்கிலேயர் தொடர்பு கொண்டனர். இதனை அறிந்த இராஜசிங்கன் துரோகிகளைத் தண்டித்தான். எகலப்பொல தலைமறைவாகி உள்ளூரில் கலவரம் விளைவித்தான். கலவரம் விளைவித்தோரை அரசன் தண்டித்தான். பலரைச் சிரச்சேதம் செய்தான். கலவரக் காரருக்கு உதவியாக இருந்த பிக்குகளும் தண்டிக்கப் பட்டனர். கலவரம் விளைவித்தோர் பலர் ஆங்கிலேயப் பகுதிகளில் அடைக்கலம் புகுந்து கொண்டனர். அவர்க ளின் உதவியோடு ஆங்கிலேயப்படை கண்டியை நோக்கி விரைந்தது. உள்ளூர் கலகத்தால் பலம் குன்றியிருந்த கண்டி அரசின் படைகளை இலகுவில் வெற்றி கொண்ட ஆங்கிலேயப் படை கண்டியை வந்தடைந்தது. எதிர்த்துப் போராடப் போதிய படைப்பலம் இன்மையால் அரசன் தெல்தெனியாவுக்கு தலைமறைவானான். அங்கு காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டான். இதனால் கண்டி அரசும் ஆங்கிலேயர் வசமானது, இதேபோன்று **யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் வெற்றி கொள்ளவும் சிங்களவர் துணை நின்றார்கள் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.**

**1815ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி கண்டிப் பிரதானிகளுக்கும் ஆங்கிலேயருக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதில் ஆங்கிலேயரே கண்டிக்கும் அரசராக இருக்க வேண்டும் என்றும், நாயக்கர்கள் இனி அரசர்களாக வரக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது. இது கண்டி உடன்படிக்கை எனப்படும்.**

கைது செய்யப்பட்ட மன்னன் உடன்படிக்கை யின்படி தமிழ்நாட்டிலுள்ள வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டான். அங்கு 1836 ஜனவரி 30இல் கால மானான். அவன் பூதவுடல் பாலாற்றங்கரையில் அடக்கம்

padippakam



*செய்யப்பட்டது. இராஜசிங்கன் பரம்பரையினர் இன்றும் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்கள் 1948 வரை (இலங்கை சுதந்திரம் அடையும்வரை) பிரித்தானிய அரசால்* ***மன்னன் மானியம்*** *பெற்று வந்தனர். கண்டி மன்னனின் சரித்திரம் மாபெரும் படிப்பினையைத் தமிழருக்குத் தந்துள்ளது.*

**ஆங்கிலேயர் ஆட்சியைக் கைப்பற்றும் வரை இலங்கையில் இருந்த சகல அரசுகளும் நிர்வாக மொழியாகத் தமிழ் மொழியையே கையாண்டனர். கண்டி, கோட்டை அரச ஆவணங்கள் தமிழிலேயே எழுதப்பட்டன.**

## ஆங்கிலேயர் ஆட்சிமுறை

*1815 இல் செய்யப்பட்ட கண்டி ஒப்பந்தத்துடன் இலங்கைத் தீவு முழுவதும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வந்தது.*

*பிரித்தானியர் தாம் கைப்பற்றிய நாடுகளில் தமது அதிகாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தக் கூடியவாறு எவ்வாறு செயற்படல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டே ஆடசிமுறைகளை அமைத்தார்கள். அத்துடன் பிரித்தானிய ஆட்சிமுறையே உலகில் சிறந்த ஆட்சி முறை என எண்ணிய ஆங்கிலேயர் தமது முறையைத் தாம் கைப்பற்றிய நாடுகளிலும் திணித்தார்கள்.*

*இலங்கையில் பிரித்தானிய ஆட்சிமுறையை நடைமுறைப் படுத்தக்கூடிய வழிவகைகளை ஆராயவென ஜோர்ஜ் மன்னர் எம்.ஜீ கோல்புறுக் தலைமையில் ஓர்*



படிப்பகம்

padippakam



ஆணைக்குழுவை நியமித்தார். கோல்புறூக் ஆணைக் குழு 1832இல் நான்காம் வில்லியம் மன்னரிடம் தமது அறிக்கையினைச் சமர்ப்பித்தது.

**அவ்வறிக்கையின் சில முக்கிய சிபார்சுகள் :**

- நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்றே வித மான ஆட்சியைத் தொடர்வதில் பயன் இல்லை. நாட்டில் உள்ள பல்வேறு இனமக்களிடையே உள்ள வேறுபாடுகள் குறைக்கப்படவேண்டும். பிரித்தானிய ஆட்சிமுறை வழிகள் கையாளப்படவேண்டும்.

- கொழும்பு, காலி ஆகிய சிங்களக் கரையோர ஆட்சி மாவட்டங்களும், கண்டி ஆட்சி மாவட்ட மும், தமிழர்வாழும் பகுதிகளான புத்தளம் கற்பிட்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களும் தனித்தனி யாக, வெவ்வேறு ஆட்சி முறைகளால் ஆட்சி செய்யப்பட்டன. அங்கே வெவ்வேறு வழமைக ளும் மரபுரிமைகளும் செயற்பட்டன.

- அரசவரி முறையில், சிங்கள நாட்டினர் இராச காரிய முறையைப் பின்பற்றியவர்கள்; தமிழீழ நாட்டினர் தலைவரி முறையைப் பின்பற்றியவர் கள்.

- சிங்கள ஆட்சி மாவட்டங்கள் தனித் தனி யாகவும் தமிழ் ஆட்சி மாவட்டங்கள் தனித்தனி யாகவும் ஆட்சி செய்யப்பட்டன.



படிப்பகம்

padippakam



- நாடு ஒருமைப்படுத்தப்படல் வேண்டும். தனித் தனி ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டும், சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒரேமாதிரியான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும், பிரித்தானிய ஆட்சிமுறை புகுத்தப்படவேண்டும்.

**கோல்புறுக்கின் இத்தகைய சிபார்சுகளின் மூலம் இலங்கைத் தீவில் இருந்த மூன்று தனி நாடுகளும் மொழி, கலை, பண்பாடு, மதம், நிர்வாகம், நீதிபரிபாலனம் என்பவற்றால் வேறுபட்டிருந்த இரு இனங்களும் 1833ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதியிலிருந்து ஒன்றிணைக்கப்பட்டன. இலங்கைத்தீவின் சரித்திரத்தில் முதன்முதலாக ஒன்றிணைந்த ஓர் அரசநிர்வாகம் உருவானது.** எனவே தனித் தனி வேறுபட்ட மூன்று அரசுகள் ஒன்றிணைந்து கோல்புறுக்கின் சிபார்சின்படி வடமாகணம், கிழக்குமாகாணம், மேல் மாகாணம், தென்மாகாணம், மத்தியமாகாணம் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. முறையே யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, காலி, கண்டி என்பன இவற்றின் தலை நகரங்களாக்கப்பட்டு இவற்றின் நிர்வாகம் தொடங்கியது. தமிழ் மாகாணங்களான வடமாகாணம் - யாழ்ப்பாணம், நெடுந்தீவு, மன்னார், வன்னி, அனுராதபுரம் ஆகிய பகுதிகளையும், கிழக்கு மாகாணம் - திருகோணமலை, தமன்கடுவா (பொலநறுவை) மட்டக்களப்பு, விந்தன ஆகிய பகுதி களையும் உள்ளடக்கி இருந்தன.

தமிழ் சிங்கள அரசர்களால் மாறி மாறி ஆளப் பட்டு வந்த இராசரட்டையின் தலை நகரங்களான அநுரா தபுரம், பொலநறுவைப் பகுதிகள் பின்னாளில் திட்டமிடப் பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு முன்னர், ஆதிகாலம் முதல் தமிழர் வாழும் பிரதேசங்களாக விளங்கின.



படிப்பகம்

மாகாணங்களை உருவாக்கும் போது அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையை ஆங்கிலேயர் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை. இருப்பினும் புத்தளம், சிலாபம் பகுதிகள் மேல்மாகாணத்துடன் இணைக்கப்பட்டனவே தவிர, ஏனைய தமிழர் இடங்கள் ஒன்றாகவே இருந்தன.


இதனைத்தொடர்ந்து 1845இல் நிர்வாகத்தை இலகுவாக்கும் பொருட்டும் போக்குவரத்து வசதிகளைக் கவனத்திற் கொண்டும் சிலாபம், புத்தளம் என்பவற்றை மேல் மாகாணத்தில் இருந்து பிரித்து குருநாகல் பகுதியையும் இணைத்து வடமேல்மாகாணம் என ஒரு மாகாணத்தை உருவாக்கினர். அதேவேளை இவற்றிற்குப் பதிலாக இரத்தினபுரியை மேல்மாகாணத்துடன் இணைத்தனர். **1845இல் புதிதாக உருவாக்கப்பட்ட சிலாபம், புத்தளம், குருநாகல் என்பவற்றை உள்ளடக்கிய வடமேல்மாகாணத்தில் அப்போது 85 சதவீதத்திற்கு மேற்பட்டோராகத் தமிழரே வாழ்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

வடமாகாணம், கிழக்கு மாகாணம் என்பன மிகப் பெரிய மாகாணங்களாக இருந்ததனால் அவற்றைச் செவ்வனே கவனித்துப் பராமரிக்க முடியாது என்று அறிந்த அப்போதைய தேசாதிபதி கிரகரி அவர்கள் **1873இல் வடமாகாணத்தில் இருந்து அநுராதபுரத்தையும், கிழக்கு மாகாணத்தில் இருந்து தம்மங்கடவையும் பிரித்து எடுத்து அநுராதபுரம் தம்மங்கடவை இரண்டையும் உள்ளடக்கியதாக வடமத்திய மாகாணம் என்ற ஒரு மாகாணத்தை உருவாக்கினர்.**

இதே போன்று சிங்களப் பகுதிகளிலும் தேயிலை, கோப்பித் தோட்டங்கள் பெருகியதன் பயனாக அவற்றை

padippakam







கோல்புறுக் ஆணைக்குழுவின் இலங்கைப் படம்



படிப்பகம்


## 1833 இல் இலங்கையின் மாகாணங்கள்



padippakam



## 1889 இல் இலங்கையின் மாகாணங்கள்






படிப்பகம்

padippakam



இலகுவில் நிர்வகிக்கவென மத்திய மாகாணத்தில் இருந்த வதுளைப் பகுதியையும், தென்மாகாணத்தில் இருந்த புத்தல (Buttla) வெல்லவாய ஆகிய பகுதிகளையும் ஒன்றிணைத்து 1886இல் ஊவா மாகாணமாக உருவாக்கினர்.

இதேபோன்று 1889இல் கேகாலை, இரத்தினபுரி பகுதிகளை ஒன்றாக்கி சப்பிரகமுவா மாகாணத்தை உருவாக்கினர். இவ்வாறு ஆங்கிலேயரால் அவர்களது நிர்வாகப் போக்குவரத்து வசதிகளை மாத்திரம் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஒன்பது மாகாணங்களுமே இன்று வரை ஸ்ரீலங்கா அரசினால் குறிப்பிடப்படும் மாகாணங்களாக உள்ளன.

இம்மாகாணங்களை உருவாக்கும் போது, ஆங்கிலேயர் பாரம்பரியமான தமிழ் அரசின் பிரதேசம், சிங்கள அரசின் பிரதேசம் என்றோ, தமிழர் வாழும் பகுதிகள், சிங்களவர் வாழும் பகுதிகள் என்றோ கவனத்தில் எடுக்காது உருவாக்கினார்கள் என்பது கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

தமிழீழ அரசுகளும், சிங்கள கோட்டை, கண்டி அரசுகளும் இணைக்கப்பெற்று ஒரே நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்ட இத்தீவு சிலோன் (CEYLON) என ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது. **எனவே இலங்கை என்பதோ அல்லது பின்னால் ஸ்ரீலங்கா என அழைக்கப் பட்டதோ ஒரே நாடு அல்ல என்ற உண்மையை நாம் மறக்கலாகாது. அத்துடன் ஆங்கிலேயரின் இவ்விணைப் பினால் தமிழீழம் தனக்கே உரித்தான பிரதேசம், நிர்வாகம், நீதிபரிபாலனம் என்பவற்றை இழந்து விட்டது. மேற்கூறப்பட்டவை ஆங்கிலேயர் வருகையால் தமிழீழம் அடைந்த அடிப் படைத் தீமைகளாகும்.**



படிப்பகம்

padippakam



**தமிழீழம் என்பது வடமாகாணம், கிழக்கு ாகாணம், வடமத்திய மாகாணத்தின் பெரும்பகுதி, த்தளம், கற்பிட்டி (ஒல்லாந்தர் காலத்து) ஆட்சி ாவட்டத்தை உள்ளடக்கிய பிரதேசம் என்பது வரலாற்று ண்மை ஆகும்.**

இலங்கையானது பிரித்தானிய முடிக்குரிய நடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தி ஆட்சி செய்யப்பட்ட போதும் கோல்புறுக் ஆணைக்குழுவின் சிபாரிசின்படி இலங்கையின் தேவைகளை அரசிற்கு எடுத்துக்கூற 835இல் சட்டநிரூபணசபை உருவாக்கப்பட்டது. இதன்படி ஒன்பது உத்தியோக அங்கத்தவர்களும், ஆறு உத்தி யோகப்பற்றில்லா அங்கத்தவர்களுமாக பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட இச் சபையில் ஒரு தமிழரும் ஒரு சிங்களவரும் பிரதிநிதியாக இலங்கையில் வாழும் இனங்களின சார்பில் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு இன அடிப்படையில், இரு இனங்களிலும் சம எண்ணிக்கையை உடைய இனரீதியான பிரதிநிதிகள் நியமனமுறையுடன் இலங்கையின் அரசுநிர்வாகம் 910ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

மேற்குறிப்பிட்ட இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை எதிர்த்தும் அரசியல் மறுசீரமைப்புச் செய்ய வேண்டியும் தமிழ் பேசும், சிங்களம் பேசும் இரு இன மக்களும் வலியுறுத்தி வந்தனர். இதனால் பதினொரு உத்தியோக பூர்வமான ஆங்கிலேயர் உறுப்பினர்களையும் பத்து உத்தியோகப் பற்றற்ற தமிழ் சிங்கள உறுப்பினர்களையும் கொண்ட இருபத்தொரு பேரையுடைய சட்டநிரூபண சபை உருவாக்கப் பட்டது. இதிலும் தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் சிங்களம் பேசும் மக்கள் சார்பிலும் சமமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



படிப்பகம்

padippakam



**உணர்ந்து கொள்ள வேண்டும். திரு அருணாசலத்தின் வெளியேற்றம் ஒருபகுதித் தமிழர்களை மாத்திரம், சிங்களவர்களது இன அடிப்படையிலான கண்ணோட் டத்தை உணரவைத்தது.**

இலங்கை மக்களால் கேட்கப்பட்ட அரசியல் சீரமைப்புக்காக பிரித்தானிய அரசு 1920லும் பின்னர் 1924 லும் சிலமாற்றங்களைச் செய்தது. இதன் படி நாற்பத்தியாறு பேர் கொண்ட சபையில் 12 அரசாங்க பிரதிநிதிகளும் 34 தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் இருப்பர். இதில் 23 பேர் பிரதேசரீதியாகவும், 6பேர் ஐரோப்பியர், பறங்கியர், மேல் மாகாண தமிழர் (கொழும்பு) என்போரின் பிரதிநிதியாகவும், 5 பேர் மலை நாட்டுத் தமிழர், முஸ்லிம்களின் பிரதிநிதியாகவும் இருப்பர் எனச்சிபாரிசு செய்தது. இதனால் தொடர்ந்தும் அரசு அமைப்பில் தமிழ் பேசும், சிங்களம் பேசும் பிரதிநிதிகள் சமமாக இரு இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தாக இருந்தது.

## டொனமூர் அரசியல் அமைப்பு

1924 இல் ஏற்பட்ட திருத்தங்களை மீண்டும் ஆராய்ந்து சிபாரிசு செய்யவென 1927 நவம்பரில் டொனமூர் ஆணைக்குழுவை பிரித்தானிய அரசு நியமித்தது.

டொனமூர் ஆணைக்குழுவின் முன் தமிழர்கள் தமிழ் பேசும் இனத்திற்கும் சிங்களம் பேசும் இனத்திற்கும் சமமான அங்கத்துவ உரிமை வேண்டும் எனக் கேட்டனர் ஆனால் ஆணைக்குழு இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. **இதனால்**



படிப்பகம்

padippakam



**1833 வரை சுதந்திரமாகச் செயற்பட்ட தமிழ் பேசும் மக்கள் 1833 முதல் 1931வரை அரசசபையில் சம பங்களித் துவந்த தமிழ்பேசும் மக்களின் உரிமை, அவர்களது குரல் டொனமூர் ஆணைக்குழுவினால் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. இதுவே சிங்கள இனவாதம் தன்னை வளர்த்துக்கொள்ளப் படிகளாக அமைந்தது.**

1931இல் நடைமுறைக்கு வந்த இத்திட்டத்தால் 61 பேர் கொண்ட ஒரு அரசசபை அமைக்கப்பட்டது. இதில் 50 பேர் தேர்தல் மூலமும், 8 பேர் நியமன மூலமும், அரச அதிகாரிகளிலிருந்து 3 பேரும் தெரிவு செய்யப்பட இருந்தனர்.

இதில் தமிழ் பேசும் மக்களுக்கு இன அடிப் படையில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வில்லை என்பதைக் காரணம் காட்டி யாழ்ப்பாணத் தமிழர் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். இதனால் 1931ல் அமைக்கப்பட்ட அரசசபையில் 38 சிங்களவரும், 6 தமிழ்பேசும் உறுப்பினர்களும், 2 ஏனைய உறுப்பினர் களும் ஆக 46 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட, யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள 4 தொகுதிகளும் தமிழர்களின் பங்களிப்பின்றி வெற்றிடமாக இருந்தது.

டொனமூர் ஆணைக்குழு நாட்டில் இன அடிப் படையிலான பிரதிநிதித்துவம் இருக்கக் கூடாது என எண்ணினர். நாட்டிலுள்ள மக்களின் தேவை (பொருளா தாரரீதியில் மட்டும் பார்வை) ஒரே தன்மையுள்ளதாக இருப்பதால் சகல இனத்தவர்களையும் ஒன்று படுத்த வேண்டும் என எண்ணியது. எனவே பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம் மாத்திரமே இருக்கவேண்டும் எனச் சிபார்சு செய்தது. இச் சிபார்சை பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரி முழுமையாக ஏற்றுக் கொண்டார்.



படிப்பகம்

padippakam



தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் நன்மை ஏதும் இல்லை எனப் பிரச்சாரம் செய்தார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். 1936இல் நடை பெற்ற அரசசபைக்காக அவரது கட்சி போட்டி இட்டது. இதனால் 1936இல் 39 சிங்களவர் 10 தமிழ் பேசும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.

டொனமூரின் சிபார்சின்படி சபையிலுள்ள 61 உறுப்பினர்களில் 8 பேர் கொண்ட 7 உப குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு அதன் தலைவர்கள் அமைச்சர்களாக செயற்பட வழி வகுக்கப்பட்டது.

டொனமூர் அரசமைப்பின் உதவியினால் அரச அதிகாரத்தை முழுமையாகப் பெற்றுக் கொண்ட சிங்களவர் (1931-1947) தமிழ் ஈழப் பிரதேசங்களை சிங்கள மயமாக்குவதிலேயே கவனம் செலுத்தினர்.

1931இல் அமைக்கப்பட்ட முதலாவது மந்திரி சபையில் காணி அமைச்சராகப் பதவியேற்ற டி.எஸ். சேனநாயக்கா 1947 வரை அமைச்சராக இருந்தார். வரண்டபிரதேசக் குடியேற்ற திட்டக் கொள்கையைச் சட்ட சபைக்கு கொண்டு வந்து அதனைச் செயற்படுத்துவதில் மும்முரமாக உழைத்தார். மட்டக்களப்புக்கருகே கல்லோய (பட்டிபளையாறு) திட்டத்தையும், திருகோண மலையில் கந்தளாய் அல்லைக் குடியேற்றத் திட்டத்தையும் உரு வாக்கி கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டார்.

1815இல் கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் கைக ளுக்குப் போனதும் ஆங்கிலேயர் கண்டியிலிருந்த தேசிய பயிர் செய் காணிகளை சுவீகரித்துக் கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்களைப் பயிரிட முற்பட்டனர். ஆயிரக்



படிப்பகம்

padippakam



கணக்கான தென்னிந்தியத் தமிழர்களைக் கூலிகளாக கண்டிக்குக் கொண்டு வந்து குடி அமர்த்தினர். இதனால் கண்டி மண்ணைச் சொந்தமாக உடைய சிங்கள மக்கள் பெருமளவில் தமது காணிகளை இழந்து குடிபெயர்ந்த னர். குடிபெயர்ந்த இச் சிங்கள மக்கள் சிலாபம் முதல் அநுராதபுரம், பொலநறுவை, வளவை கங்கை வரையுள்ள தமிழீழத்தின் நிலப்பரப்புகளில் குடியேறினார்கள். **தமிழீழத் தாயகத்தில் ஆங்கிலேயர் காலத்தில் நடந்த முதலாவது சிங்களக் குடியேற்றம் இது ஆகும்.**

## றொபேட் நொக்ஸ் குறிப்பு

கண்டி அரசனால் 1660இல் சிறைவைக்கப் பட்டிருந்த ஆங்கிலேயரான நொக்ஸ் (ROBERT KNOX) என்பவர் 1679இல் சிறையிலிருந்து தப்பியோடியவர். அவர் தனது அனுபவத்தைப் புத்தகமாக வெளியிட்டுள் ளார். அதில் அவர் தமிழர்கள் இலங்கைத்தீவில் தனி நாட்டினமாக வாழ்வதையும், தாம் தப்பியோடும் வழியில் அநுராதாபுரத்தை அடைந்ததையும், அங்கு சிங்கள மொழி தெரிந்தவர்கள் இல்லாது இருந்ததையும் குறிப்பிட்டுள் ளார். அத்துடன் அநுராதபுர ஆட்சித் தலைவனாக இருந்தவருக்குச் சிங்கள மொழி தெரியாது இருந்த மையினால் அவருடன் உரையாடத் தமிழ்மொழி பெயர்ப் பாளர் ஒருவரின் உதவியைத்தான் நாடவேண்டி இருந்தது என்பதையும் குறிப்பிட்டுள்ளார். நொக்ஸின் குறிப்புகள் தமிழரின் வாழ்விடங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தைக் கைலாசவன்னியன் என்னும் அரசன் ஆட்சி செய்தான் என்றும், அவன் ஒல்லாந்தர் ஆட்சிக்கோ கண்டியரசன் ஆட்சிக்கோ கட்டுப்பட்டவன் அல்லன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



படிப்பகம்

padippakam



இதே கருத்தினை ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக்கு வந்து சென்ற கிறித்தோபர் சுவைட்சர் என்பவர் தனது குறிப்புகளிலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

**தமிழீழத்தில் இரண்டாவது தடவையாகத் தொடர்ச்சியானதும் திட்டமிடப்பட்டதுமான குடியேற்றங்கள் 1931ஆம் ஆண்டு முதல் 1943ஆம் ஆண்டுவரை நடைபெற்றன.** 1931- 1943க்கு இடைப்பட்டகாலத்தில் விவசாய அபிவிருத்திக்கென பெரும் குடியேற்றத்திட்டங்கள் பதின்னொன்றரை மில்லியன் ரூபா செலவிலும், சிறு குடியேற்றத் திட்டங்கள் 31/4 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டன. இத்திட்டங்களில் பெரும்பாலானவை வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களில் உருவாக்கப்பட்டுச் சிங்கள மக்கள் குடியேற்றபட்டனர். இதனால் இம்மாகாணங்களில் அமைந்திருந்த தமிழீழத்தின் நிலப்பரப்புகள் பறிக்கப்பட்டன. அங்கு வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டனர். மற்றைய தென்பகுதி சிங்கள மாகாணங்கள் முற்றாக நிதி ஒதுக்கப்படாமல் சிங்கள அரசினாலேயே புறக்கணிக்கப்பட்டன. இது சிங்கள இனத் தலைவர்கள் தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் எண்ணத்தோடு ஆங்கிலேயர் காலத்திலேயே செயற்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இலங்கைத் தீவின் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கு, அதாவது 19,000 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட காணிகள் அரசுக்குச் சொந்தமாக இருந்தன. இவற்றில் பெரும்பகுதி தமிழ் ஈழத்திற்குச் சொந்தமான பகுதிகள் (தமிழீழப் பகுதிகளில் இருந்த சிற்றரசுகளுக்குச் சொந்தமான காணிகள்) என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே சிங்கள அரசு திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம்



படிப்பகம்

padippakam



சிங்களப் பிரதேசமாக மாற்றச் சாதகமாகவும் இருந்தது.

திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு ஒரு சிறந்த எடுத்தக்காட்டாக கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தைக் கூறலாம். திருகோணமலை மாவட்டத்தின் தென் மேற்குப் பகுதியில், தம்பலகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பாரிய குளமே கந்தளாய்க் குளமாகும். குளக் கோட்டன் காலத்து தமிழர் நாகரிகத்தின் வெளிப்பாடாக இருந்த கந்தளாய் இன்று சிங்கள ஆதிக்கத்தின் பிடியில் உள்ளது. 1901ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது கந்தளாய் பிரதேசத்தின் மொத்தச் சனத்தொகை 156 பேராகும். இவர்களில் 79 பேர் தமிழர்களாகவும் 55 பேர் முசுலிம்களாகவும் 16 பேர் சிங்களவர்களாகவும் இருந்தனர். இச் சிங்களவர்கள் 16 பேரும் இப் பிரதேசத்தில் பாரம்பரியமாக இருந்தவர்கள் அல்லர். ஏனெனில் 1921ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் போது இங்கு ஒரே ஒரு சிங்களவர் மாத்திரம் இருந்தார். அவரும் ஆண். அதுவும் வியாபாரத்தின் பொருட்டு தங்கியிருந்தராவர்.

ஆனால் 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் போது கந்தளாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மொத்தச் சனத்தொகை 37,600 பேர். இதில் 31,206 பேர் சிங்களவராகவும், 4323 பேர் முசுலிம்களாகவும் 2001 பேர் மாத்திரம் தமிழர்களாகவும் காணப்பட்டனர்.

தமிழ் மன்னன் குளக்கோட்டனின் அரச பிரதேசமாகவும், 1949ஆம் ஆண்டுவரை முழுமையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசமுமாக விளங்கிய கந்தளாய்ப் பிரதேசத்தின் 1981ஆம் ஆண்டு நிலமையை பார்த்தால் (30வருடத்தில்) சிங்கள அரசு தமிழீழ மண்ணை எவ்வாறு அபகரித்துக் கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.




படிப்பகம்

padippakam



# 1931 இல் இருந்து தமிழீழத்தில் இடம்பெற்ற குடியேற்றத் திட்டங்கள்






படிப்பகம்

padippakam



# குடியேற்றத் திட்டங்கள்

1. கனகராயன் ஆறு
2. இரணைமடு
3. விசுவமடு
4. முத்தையன்கட்டு
5. தண்ணிமுறிப்பு
6. பதவியா
7. கட்டுக்கரைக்குளம்
8. பாவற்குளம்
9. சங்கிலி கந்தரா
10. பன்குளம்
11. கந்தளாய்
12. நுவர வாவி
13. பானியன் கடவலை
14. அல்லை
15. மின்னேரியா
16. கவுடுள்ள
17. ஹுறுளு வாவி
18. கிரிதலை
19. பராக்கிரம சமுத்திரம்
20. மதுரு ஓயா
21. கல் ஓயா
22. யோதவாவி
23. திசவாவி
24. பெரகம
25. உன்னிச்சை
26. தம்போல
27. கொட்டுகச்சி
28. ஊரியான்
29. ரிதிபந்தி
30. மகாஉஷ் வாவி

1931ஆம் ஆண்டுமுதல் தமிழர் வாழும் பிரதேசங்களில் நடைபெற்ற திட்டமிட்ட குடியேற்றத் திட்டப் பகுதிகளுக்குப் பெரும்பாலும் அரசினால் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.




படிப்பகம்

padippakam



# தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றம்







படிப்பகம்

padippakam



## இன்றைய தமிழீழம்





படிப்பகம்

padippakam



ஆங்கிலேயர் ஆட்சியில் 10 வருடங்களுக்கு ஒருமுறை எடுத்த குடிசன மதிப்பு விபரத்தையும், நில அடிப்படையாக இனங்கள் வாழ்ந்த கணிப்பையும் கவனித்தால் தமிழர் நிலப்பரப்பு எவ்வாறு சிங்களவர் கைகளில் சென்றடைந்தது என்பதையும் ஆங்கிலேயர்காலத்தில் இருந்த தமிழீழத்தின் நிலப்பரப்பையும் இலகுவாக அடையாளம் காணலாம்.

20ஆம் நூற்றாண்டில் தமிழீழ நிலப்பரப்பில் ஒரு பகுதி சிங்கள மயமாக்கப்பட்டதுடன் தமிழீழத்தின் எல்லைப்புறக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் பல்வேறு புறச்சூழற் காரணிகளால் சிங்கள மொழியைப் பயின்று சிங்களமொழி பேசும் மக்கள் ஆகிவிட்டனர். **இவை பெருமளவில் நீர்கொழும்பு, புத்தளம், அநுராதபுரம், அம்பாறை, வளவை ஆகிய இடங்களில் நடைபெற்று விட்டன. 20ஆம் நூற்றாண்டில் தமிழீழம் அடைந்த மிகப் பெரும் தீமைகளில் இதுவும் ஒன்று.**

இக்காலப்பகுதியில் (1931-1943) இடம்பெற்ற இனவாதத்தின் சில வெளிப்பாடுகளையும் குறிப்பிடலாம். மருத்துவமனை அமைப்புக்கென செலவிடப்பட்ட 12 மில்லியன் ரூபாவில் 1 மில்லியன் மாத்திரம் வடக்கு கிழக்கு மாகாணத்திற்குச் செலவிடப்பட்டது. நாடு முழுவதும் 4,000 பாடசாலைகள் கட்டப்பட்டன இதில் தமிழ்ப் பாடசாலைகள் 900 மட்டுமே.

அநுராதபுர நகரை புனித நகராக்குவதற்கான சட்ட மூலம் 1942இல் நிறைவேற்றப்பட்டது. அநுராதபுரத்தில் ஒரு பதிய நகரை உருவாக்கவும் பழைய நகரை புனித நகராக்கவும் அரசு செயற்பட்டது. புனிதநகர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டோராகத் தமிழரும் முஸ்லிம்களுமே வாழ்ந்ததோடு,



படிப்பகம்

padippakam



தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமான காணிகளே அங்கு இருந்தன. அப்போது அநுராதபுர உள்ளூராட்சியில் தமிழர்களே பிரதிநிதிகளாக இருந்தனர். இச்சட்ட மூலத்தைக் கொண்டுவந்ததன் மூலம் அரசு தமிழ் பேசும் மக்களை அவர்கள் காலம் காலமாக வசித்து வந்த நகரில் நின்றும் வெளியேறச் செய்தது. அத்துடன் இத் திட்டத்தின் மூலம் அரச நிதியைப் புத்தமத அபிவிருத் திக்கு மாத்திரம் செலவு செய்ததுடன் ஆங்கிலேயர் காலத்திலேயே சிங்களத் தலைவர்களால் மற்றைய மதங்கள் புறக்கணிக்கப்பட்டு புத்த மதத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

டொனமூர் அரசமைப்பின் திட்டப்படி அமைக்கப் பெற்ற அரசில், தமிழீழ நாட்டினர் சிறுபான்மையாக்கப் பட்டு, மற்றைய நாட்டினரால் நசுக்கப்படுவதை உணர்ந்து கொண்ட பிரித்தானிய அரசு அக்குறைபாடுகளை நீக்க வெனக் குறிப்பாக சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக அமையக்கூடிய வழிவகைகளை ஆராய என சோல்பரி ஆணைக்குழுவை நியமித்தது. தமிழரின் நலன்களைப் பாதுகாக்கவே இவ் ஆணைக்குழு வருகின்றது என்ற காரணத்தைக் கூறி அன்றைய மந்திரிசபைத் தலைவர் டி.எஸ். சேனநாயக்காவும் அவரது மந்திரி சபை உறுப்பினர்களும் சோல்பரிக் குழுவைப் பகிஷ்கரித்தனர்.

## சோல்பரி ஆணைக்குழு

பிரித்தானிய ஆட்சியின்கீழ் எவ்வாறு முழு மையான ஓர் அரசை அமைக்கலாம் என்பதையும், இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பேணமுடியம் என்பதையும் ஆராயச் சோல்பரி ஆணைக்குழு 1944இல் நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு



படிப்பகம்

padippakam



முன் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் சிங்களம் பேசும் மக்களுக்கு 50 சதவீதம் பிரதிநிதித்துவம் வழங்கும் அதே வேளை தமிழ் பேசும் மக்களுக்கும் 50 சதவீதம் பிரதி நிதித்துவம் வழங்கப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. தமிழர்களின் இக்கோரிக்கை அக்காலத்தில் தமிழர் மத்தியில் பிரபல்யம் பெற்று இருந்தது. நாட்டின் நிர்வாகத்தில் சமபங்கு வேண்டும் எனக் கேட்ட தமிழர் பிரதிநிதி திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அதற்குரிய காரணத்தை 1944 நவம்பர் 27இல் கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு முன் வைத்தார்.

> **“..... தமிழர்கள் தான் இத்தீவின் ஆதிக்குடிகள். இதை எமது நண்பர்கள் (சிங்கள) தெரிந்து கொள்ள வேண்டும். பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரை ஆட்சி செய்த அரசை நாம் பெற்றிருந்தோம். இதனை இலங்கையின் வரலாற்றில் காணலாம். ஐரோப்பிய கடலோடிகள் வரும்வரை நாம் (தமிழர்கள்) அந்நியரால் ஆட்சி செய்யப் படவில்லை. எம்மை நாமே ஆட்சி செய்தோம்.......”**

இவ்வாறே டொனமூர் ஆணைக்குழுவின் அரசமைப்பால் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1942 மே தினத்தன்று தனது கொள்கை வெளியீட்டில் தமிழர் சார்பாக பின்வருமாறு கூறியது:

> **“தமிழர் தனித்துவம் பெற்ற தேசிய இனம். அவர்களின் பாரம்பரிய தாயகம் வடக்கு கிழக்கு பகுதிகள் இதைத் தமிழர்கள் ஆள ஏற்ற**



படிப்பகம்

padippakam



**அரசை அமைத்துக் கொள்ள லெனினிசக் கோட்பாட்டின்படி, சுய நிர்ணய உரிமையை அனுபவிக்க, தமிழ் இனம் உரிமை உடையது. அவசியமானால் அவர்கள் பிரிந்து தனித் துவமான அரசை உருவாக்க உரிமை பெற்றவர்கள்."**

இதே வேளை கண்டிச் சிங்களவர் சமஷ்டி ஆட்சி முறை வேண்டும் எனக் கூறினர். இலங்கைத் தீவு மூன்று பெரும் அரசுகளைக் கொண்டு இருந்ததாலும் மூன்று நாட்டினரும் வேறு வேறு பண்பாடு பழக்கவழக்கத்தை கொண்டிருப்பதாலும். இம் மூன்று நாட்டினருக்கும் தனி த்தனி மாகாண அரசுகளும் பொதுவான மத்திய அரசும் கொண்ட ஓர் அரசமைப்பு வேண்டும் எனக் கோரி நின்ற னர். இக்கருத்தினை 1927இல் திரு.S.W.R.D. பண்டாரநா யக்கா முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களதும் கண்டிச்சிங்களவரதும் கோரிக்கை கள் இவ்வாறு இருந்ததை ஆணைக்குழு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டமை தமிழீழத்தை மேலும் நலிவுறச் செய்தது. ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்க டி. எஸ். சேனநாயக்கா மறுத்தமை சோல்பரி ஆணைக் குழுவின் இவ்வாறான செயற்பாட்டிற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால் சோல்பரி ஆணைக் குழு 65வீத பிரதி நிதித்துவம் சிங்களவருக்கும் 35வீத பிரதிநிதித்துவம் தமிழ் பேசும் மக்களுக்கும் கிடைக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புட னும் அரசியல் அமைப்பில் சகல இனங்களின் பாது காப்பை நன்கு பாதுகாக்கக் கூடியதாகவும் ஒரு குறிப் பிட்ட இனத்திற்கோ அன்றி மதத்திற்கோ கூடுதல் சலுகை வழங்கக் கூடாதவாறு அரசியல் அமைப்பில் 29ஆவது



படிப்பகம்

padippakam



சரத்தை இயற்றி இலங்கைக்கான அரசியல் அமைப் பைத் தேசிய சபையில் வாக்கெடுப்புக்கு விட்டது. அப்போது தேசிய சபையின் தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா,

> "நீங்கள் இலண்டனில் இருந்து ஆட்சி செய்யப்படுவதை விரும்புகிறீர்களா? அல்லது இலங்கையர்கள் ஆட்சி செய்வதை விரும்புகிறீர் களா? எனக் கேட்டதுடன் சிறுபான்மை இன மக் களுக்கு நான் ஒரு உறுதி மொழியை வழங்கு கின்றேன் எம்மிடம் நீங்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாவீர்கள் என அஞ்சத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டார்."

தேசிய சபையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஜி.ஜி தலைமையில் உள்ள தமிழ் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை (நாலு உறுப்பி னர்கள்) மிகுதி 54 பேரில் 51 சாதகமாகவும் 1கண்டி சிங்களவர் உள்பட 3 பேர் எதிர்த்தும் வாக்களிக்கச் சபை ஏற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 1948ஆம் ஆண்டு பெப்பிரவரி 4ஆம் திகதி இலங்கை தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது.

சுதந்திர இலங்கையின் தேசியக் கொடி சிங்கத் தைச் சின்னமாகக் கொண்டு இருக்க வேண்டும் என டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் உள்ள அரசு தீர்மானித்தது. ஆனால் இலங்கையில் தமிழ், சிங்கள மொழி பேசும் இரு இன மக்களும், பௌத்த, சைவ, இஸ்லாமிய, கிறித்தவ சமயங்களைக் கொண்ட மக்களும் வசிக்கின்றனர். இவர்கள் சகலரதும் வழிபாட்டுத் தலமான சிவனொளிபாதமலையே தேசிய சின்னமாக இருக்க வேண்டும் எனத் தமிழ்த் தலைவர்களால் விடப்பட்ட



படிப்பகம்

padippakam



கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதில் இருந்து அன்றே சிங்களவர் இலங்கையைச் சிங்கள பௌத்த நாடாக மாத்திரம் பார்த்து, அதனை உருவாக்கச் செயற்பட்டனர் என்பது தெளிவாயிற்று.



படிப்பகம்

padippakam



# 5
# இலங்கைப் பாராளுமன்றமும் சிங்கள மேலாதிக்கமும்

## இலங்கைப் பாராளுமன்றம்

முதலாவது இலங்கைப் பாராளுமன்றத்தில் 101 பேர் உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இதில் 95 பேர் தேர்தல் மூலமும், 6 பேர் நியமனமூலமும் தெரிவு செய்யப்பட்டனர். 95 ஆசனங்களை உடைய பாராளு மன்றத்தில் 24 ஆசனங்களைத் தமிழ்ப் பிரதிநிதிகள் பெற்றுக்கொண்டனர். அது மாத்திரம் அன்று. இடது சாரிகட்சிகள் 24 இடங்களைப் பெற்றுக்கொண்டனர். இவ் இடது சாரிகளின் வெற்றிக்கு அவர்கள் போட்டியிட்ட பிரதேசங்களில் இருந்த தமிழ் மக்களின் வாக்குகள் பெரிதும் உதவின. குறிப்பாக மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குகள் இடது சாரிகளுக்கே கிடைத்தன. 24 தமிழ் உறுப்பினர்களில் 8 பேர் மலை நாட்டுத் தமிழர்கள் ஆவர்.

இடதுசாரிக் கட்சி, தமிழ் பிரதிநிதிகளுடன் சேர்ந் ததால் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு இருந்தது. அதையே ஆரம்பத்தில் தமிழர் பிரதிநிதிகள் விரும்பினர். ஆனால் இடது சாரிகளின் தலைவர் என். எம். பெரேரா அதனை மறுக்கவும் தந்திர சாலியான D.S. சேனநாயக்கா சுயேட் சையாக வெற்றி பெற்ற இரு தமிழ் உறுப்பினர்களான திரு. சி. சுந்தரலிங்கம், திரு.சி. சிற்றம்பலம் ஆகியோருக்கு

படிப்பகம்

padippakam



மந்திரி பதவி வழங்கி அரசுடன் இணைத்துக்கொண்டார்.

இலங்கை அரசு, பாராளுமன்றத்தில் தமிழ் பிரதி நிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடன் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து ஒரு வருடம் முடியும் முன்னரே இலங்கைப் பிராஜா உரிமைச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவந்தது. இந்திய வம்சாவளியினர் எனக் காரணம் காட்டி 1827ஆம் ஆண்டுகளுக்கு சற்று முன்னர் தொடக்கம் அப்போதைய பிரித்தானிய ஆட்சியினரால் குடியமர்த்தப் பட்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு தம் வியர்வையைச் சிந்தி உழைத்து வரும் ஏழைமக் களான 10 இலட்சம் மலை நாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக் கியது. இதன் பயனாகச் சிங்கள இனத்திற்கு எவ்விதத்தி லும் போட்டியாக அமையாது வாழ்ந்து வந்த இம்மக் களின் குடியுரிமையை பறித்ததன் மூலம், சிங்கள அரசு பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை 50 சதவீதத்தால் குறைத்துக் கொண்டது.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத (1948ம் ஆண்டின் 18ஆம் இலக்க) சட்டம், இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து அவர்களைப் பிரிவு படுத்தும் நோக்கோடு கொண்டுவரப்பட்டது. இதனால் 1931, 1936, 1941, 1947 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வாக்களித்தவர்களும் 120 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவர்களுமான இந்தியத் தமிழ் மக்கள் எந்த நாட்டுக்கும் உரிமையற்றவர்களாக, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். தமது வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி நாட்டுக்காக உழைத்த இம்மக்கள், சிங்கள மக்களுக்கு எவ்விதத்திலும் போட்டியாக அமை யாத இம்மக்கள் **தமிழர்கள்** என்ற ஒரே காரணத்தால் எவ்வித அரச உரிமைகளும் அற்றவர்களாக்கப்பட்டனர்.



படிப்பகம்

padippakam



**1948ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களது குடியுரிமையை 120 வருடங்களுக்கு முன்னர்தான் இந்த மண்ணில் குடியேறியவர்கள் என்று கூறிப் பறித்துக் கொண்ட சிங்கள அரசு, ஆங்கிலேயரால் 115 வருடங்களுக்கு முன்னர் சிங்களத்துடன் வலிந்து இணைக்கப்பட்ட தமிழீழ மண்ணைத் தனதாக்கி ஆட்சி செய்ய முற்பட்டது எவ்விதத்திலும் பொருத்தமற்றது.**

இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததனால் நாட்டில் தமிழர்களால் குழப்பம் ஏற்படாது பார்த்துக்கொள்ளவும், இந்திய அரசின் எதிர்ப்போ, பிரித்தானிய அரசின் எதிர்ப்போ ஏற்படாதிருக்கவும் தமிழ்த் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலத்தை அரசில் இணைத்துக்கொள்ள டி.எஸ். சேனநாயக்கா முயற்சி செய்து இறுதியில் 1949இல் வெற்றி பெற்றார். திரு. ஜி.ஜி பொன்னம்பலம் கைத் தொழில் அமைச்சரானார். ஆனால் இந்தியத் தமிழர் வாக்குரிமை விவகாரம் தமிழ்க் காங்கிரசைப் பிளவுபடுத்தியது. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு.சி. வன்னியசிங்கம் என்போர் தமிழ்க் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டதுடன் இலங்கை சமஷ்டிக்கட்சியினை ஆரம்பித்தனர்.

இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து 1948-1949 தேர்தல் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்து சிங்களப் பிரதிநிதிகள் அதிக அளவில் தெரிவு செய்யப்படக்கூடியவாறு செய்து கொண்டது.

இச்சட்டங்கள் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோதுதான் தமிழீழ மக்கள் தம் தவறை உணர்ந்தனர். இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் ஆங்கிலேயருக்குப் பின் தமக்குச் சம வாய்ப்பினைத் தருவார்கள் எனத் தமிழர் எதிர்பார்த்தனர். சிங்களத் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமுன் தமிழர்களுக்கு அளித்த உறுதி



படிப்பகம்

padippakam



மொழிகளை நம்பியது வீண் என்பதனை உணர்ந்து கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பைச் சிங்களவரிடம் கையளிக்கும் போது தமிழ் மக்கள் தம்மிடம் இருந்து பெற்ற தமிழ் நாட்டைத் தம்மிடமே திரும்பித் தரும்படி கேட்கத் தவறி விட்டனர். தம்முடைய தனி நாடாம் தமிழீழத்தின் ஆட்சி உரிமையைச் சிங்களத்தில் இருந்து பிரித்துத் தம்மிடம் தந்து விட்டுச் செல்லும்படி கேட்கத் தவறிவிட்டனர். தமக்கு அருகே இந்திய உபகண்டத்தில் திரு.ஜின்னா முஸ்லிம்களுக்கெனத் தனிநாடாம் பாகிஸ்தானை உருவாக்கிக் கொண்டது கூட அப்போதைய தமிழ்த் தலைமைகளின் கண்களைத் திறக்கவில்லை. அதுமாத்திரம் அன்றி, கண்டிச் சிங்கள மக்கள் ஆங்கிலேயரிடம் சமஷ்டி ஆட்சி முறையைக் கேட்டபோது கூடத், தமிழர் அதைக் கேட்கத் தவறிவிட்டனர்.

**ஆயினும் இலங்கை ஓர் அமைப்பாக இருக்க முடியும்; சிங்களவருடன் ஒத்து வாழமுடியும். ஆனால் நாம் தனி ஒரு நாட்டினர் என்பதால் எமக்கு ஆட்சியில் 50 சதவீத பங்கு வேண்டும் என்ற கோரிக்கை சோல்பரி ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டது. ஆனால் இக் கோரிக்கை பிரித்தானிய அரசியல் கோட்பாட்டிற்கு முரண்பட்டிருந்தமையால் இது நிராகரிக்கப்பட்டது. இதனால் ஈழத்தமிழ் மக்களின் நாட்டுரிமையும், அரசுரிமையும் சிங்களவர் கைக்குச் சென்றன.**

இலங்கையின் அரசியல் அமைப்பும் சிங்கள அரசின் இனவாதக் கொள்கையும் தமிழ் இனத்தை அழித் தொழிக்கும் எனக் கண்ட திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் **இலங்கைக்குப் பிராந்திய சுயாட்சிமுறை வேண்டும் எனவும், அதில் தமிழர்களுக்**



படிப்பகம்

padippakam



**காக, தமிழ்மக்களை, தமிழ் மக்களே ஆளக்கூடியதாக தமிழ்மக்களை உள்ளடக்கிய ஒரு சுயாட்சி அமைப்பு வேண்டும் எனவும் கேட்டுத் தமது கட்சியை 1949 மார்கழி 10 இல் ஆரம்பித்து. அதற்காகப் போராடி வந்தார்.**

இலங்கையின் சிங்கள அரசு தனது இன வாதக் கொள்கையின் ஓர் அங்கமாகச் சிங்களக் குடியேற்றங் களை மிக வேகமாகத் தொடர்ந்து உருவாக்கி வந்ததன் மூலம் புதிது புதிதாகப் பல சிங்களப் பாராளுமன்ற ஆசனங்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்திக் கொண்டது. அத்துடன் காலத்துக்குக் காலம் தேர்தல் தொகுதிகளை மாற்றி அமைத்துப் பாராளுமன்ற ஆசனங் களைக் கூட்டியதன் மூலமும் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவ விகிதத்தை 1947 முதல் இன்றுவரை குறைத்துக் கொண்டே வருகிறது. இது ஓர் இனம் தனது கருத்தைத் தெரிவிக்கும் உரிமையை ஒடுக்கும் மிகப் பெரும் ஜனநாயக விரோத செயலாகும்.

## சிங்கள மேலாதிக்கத்தின் திட்டங்கள்

இலங்கையில் இருந்த மூன்று நாடுகளையும் 1833இல் ஒன்றிணைத்த காலம் தொட்டுச் சிங்களத் தலைவர்கள் முழு இலங்கையும் ஒரு பௌத்த சிங்கள நாடாகக் வேண்டும் எனச் செயற்பட்டு வந்தனர். இத னால் அவர்கள் தமது மேலாதிக்கத்தை வலுப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். **அந்த நடவடிக்கை களை நிறைவேற்றத் தந்திரமான முறையில் தமிழர்களில் ஒரு பகுதியினரை எப்போதும் பயன் படுத்தி வந்தனர் என்பது வரலாறு.** சிங்கள இனவாதம் தமது மேலாதிக் கத்தை வலுப்படுத்தப் பின்வரும் நான்கு முக்கிய நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகக் கையாண்டது:



படிப்பகம்

padippakam



**1. தமிழீழப் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றித் தமிழீழ மண்ணை ஆக்கிரமிப்பது:**

(அ) இதன் முதல்திட்டம் (முன்பு குறிப்பிட்டது போல) 1930ஆம் ஆண்டு மின்னேரியாக் குடியேற்றத் திட்டத்துடன் தொடங்கி இன்றுவரை நடைபெறுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கோப்பி, தேயிலை, றப்பர் போன்றவற்றை ஊக்குவித்ததனால், தமிழ் ஈழத்தின் முக்கிய பயிரான நெற்செய்கை கவனிக்கப்படாது நீர்ப்பாசன நிலைகள் அழிந்து போயின. இதனால் வன்னிச் சிற்றரசுகளுக்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அரசு உடமை ஆயின (இது சிங்களக் குடியேற்றத்துக்குதவியது). டொனமூர் திட்டத்தின் கீழ் விவசாய மந்திரியாக வந்த டி.எஸ். சேனநாயக்க இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

(ஆ) கல்லோயாத் திட்டம் முதல் மகாவலித்திட்டம் வரையிலான குடியேற்றத்திட்டங்களைத் துரிதப் படுத்தி சிங்களவர்களை மாத்திரம் அங்கு குடியேற்றியமை.

(இ) காலத்துக்குக் காலம் இனக்கலவரங்களால் பல தமிழர்களின் காணிகளை அபகரித்தமை. (குறிப்பாகக் கிழக்கு மாகாணம்).

(ஈ) 1972இல் காணி உச்சவரம்புசசட்டத்தின் மூலம் பல தமிழர்களின் காணிகள் பறிக்கப்பட்டு, சிங்கள மக்களிடம் கொடுக்கப்பட்டன. இதனால் தமிழீழத்தின் எல்லையோரங்களும், மன்னார் மற்றும் கிழக்கு மாகாணம் என்பனவும் பாதிக்கப்



படிப்பகம்

padippakam



பட்டதுடன் பல தேயிலை, றப்பர், தென்னந் தோட்டங்கள் சிங்களவர் மயமாகி சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. இவ்வாறு தமிழரிடம் பெறப்பட்ட காணிகள் தமிழர்களுக்குப் பகிர்ந் தளிக்கப் படவில்லை.

**2. பாராளுமன்றத்தில் தமிழர்களை மிகச் சிறுபான்மை யினராக ஆக்கும் உள் நோக்கமுடைய திட்டங்கள்.**

*(அ) பிரதேசவாரி நியமனம் 1931இல் டொனமூர் திட்டத்துடன் ஆரம்பமாகியது.*

*(ஆ) 1937இல் "உள்ளூராட்சித் தேர்தல் வாக்குரிமைச் சட்டம்" உருவாக்கப்பட்டதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தல்களில் தோட்டத் தொழிலாளர் பங்கேற்காதவாறு செய்தமை.*

*(இ) 1940இல் "வாழ்விடத் தெரிவு பிரசைகளைப் பதிவு செய்தல்" சட்டத்தின் மூலம் 1939இல் இருந்ததை விட கிட்டத்தட்ட 57,000 பேர் வாக் காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டமை.*

*(ஈ) 1948இல் "குடியுரிமைச்சட்டம்". இச்சட்டத்தின் படி 10லட்சம் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்துக்கொண்டமை.*

*(உ) 1949இல் "இந்திய பாகிஸ்தான் குடியிருப் புச் சட்டம்". இதனால் தொடர்ச்சியாக நாட்டில் 10ஆண்டுகள் வசித்ததை ஒருவர் நிரூபிப்பதில் மிகக் கடுமையாக அரசு நடந்து கொண்டமை.*

*(ஊ) 1948-49 "தேர்தல் திருத்தச்சட்டம்". இதன்*



படிப்பகம்

padippakam



மூலம் சிங்களவருக்குக் கூடுதலான தொகுதி களை காலத்திற்குக் காலம் சிங்கள அரசுகள் அதிகரித்துக் கொண்டே சென்றமை.

எ) தமிழீழப் பிரதேசங்களுக்கு இடையே உள்ள நில அடிப்படையிலான தொடர்பினை துண் டாடக்கூடிய வகையில் சிங்களக் குடியேற்றங் களை உருவாக்கிப் புதிய சிங்கள பாராளு மன்றத் தொகுதிகளை அமைத்துக் கொண்டமை.

**3. தமிழ் பேசும் மக்களின் பொருளாதார மேம்பாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்.**

(அ) இதன் ஆரம்ப நடவடிக்கையாக இந்திய பாகிஸ்தான் வம்சாவளியினரிடம் இருந்த வர்த்த கம் தொழிற்சாலைகள், சொத்துக்கள் இந்திய பாகிஸ்தான் குடியிருப்புச் சட்டத்தின் மூலம் 1949இல் அரசால் தடுக்கப்பட்டன.

(ஆ) 1956இல் "சிங்களம் மட்டும் சட்டம்". இதன் மூலம் சிங்களத்தை ஆட்சி மொழியாக் கினர். இதன் மூலம் அரச தமிழ் ஊழியர்களின் உயர்ச்சி தடுக்கப்பட்டது.

(இ) 1960-1961 வரை "கல்வித்துறை தேசிய மயமாக்கல்". மேலெழுந்த வாரியாக இது முற்போக்கான சட்டம் என எடுத்துக் கொண்டா லும் இதனால் படித்த சிங்களவர்களை அரசு வலிந்து உருவாக்குவதும், நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் அரசகட்டுப் பாட்டில் வருவதனால், தமிழர்கள் சுயாதீனமாகப் பாடசாலைகளை நடத்தி அதன் மூலம்



படிப்பகம்

padippakam



அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கியதைத் தடுப்பதும், மலையகத்தில் இருக்கும் பல தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைக-ளாக்குவதும் அரசின் நோக்கங்களாக இருந்தன. அத்துடன் கல்விக்கான பாடத்திட்டங்களை அரசே பொறுப்பேற்று, தம் அரசியல் நோக்கங் களுக்கு ஏற்ப எழுதுவித்து வெளியிடும் பொறுப் பையும் மேற்கொண்டது. இதனால் நாட்டின் **உண்மையான வரலாறுகளைத் திரிபுபடுத்திப் பாடப் புத்தகங்களை அரசு வெளியிட்டது. அதன் மூலம் சிங்கள சந்ததியினர் மனதில் சிங்கள இனம் மட்டும்தான் இலங்கையின் சொந்தக்காரர் என்ற எழுச்சியை ஏற்படுத்தியதுடன், தமிழர் வந்தேறு குடிகள் என்ற அபிப்பிராயத்தையும் புகுத்திப் பேரினவாத எழுச்சிக்கு வழிவகுத்தது, அதேவேளை தமிழர் தமது வரலாற்றை அறிய முடியாதவாறு இருட்டடிப்பும் செய்யப்பட்டது.**

(ஈ) 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட உயர்கல்வி தரப்படுத்தல் கொள்கையினால் தமிழ் மக்களிடையே உயர்கல்வி கற்றோர் தொகை யைக் குறைத்ததுடன், உயர் பதவிகளில் தமிழர்களை மட்டுப் படுத்தியது. தமிழர் உயர் கல்வி மிகப்பெரிய அளவில் தடுக்கப்பட்டது.

(உ) சிங்களப் பிரதேசங்களில் மாத்திரம் தொழிற் சாலைகளை தொடக்கியமை; தமிழ் ஈழப்பகுதி யின் மூலவளங்களை முற்றிலும் புறக்கணித் தமை; இவற்றின்மூலம் பல சிங்கள முதலாளி களை-வர்த்தகர்களையும் அரசு உருவாக்கியது. அத்துடன் இது, சிங்களப் பிரதேசத்தின் மூலவளங்களோ, உதவியோ இன்றித் தனித்துத்



படிப்பகம்

padippakam



தாம் வாழமுடியாது என்ற எண்ணத்தை தமிழர் மத்தியில் உருவாக்கி விட்டது.

**4. தமிழ் பேசும் மக்களிடையே பிரிவினையை உண்டாக்குதல்.**

(அ) தமிழ் பேசும் மக்களை முஸ்லிம்கள், மலை நாட்டுத் தமிழர், இலங்கைத் தமிழர் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துத் தனது அரச அதிகாரம் சலுகைகள் என்பனவற்றை உபயோகித்து எக்காலத்திலும் இப்பிரிவினர் ஒன்று சேராதவாறு தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தனர். தேவை ஏற்படும் பொழுது காலத்துக்குக் காலம் இப் பிரிவினரிடையே கலவரங்களைத் தோற்றுவித்து விடுகின்றமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

(ஆ) 1948இல் பிராஜாவுரிமைச் சட்டத்திற்கு அடுத்ததாகச் சிங்களமொழி இலங்கையின் அரச கரும மொழியாக (உத்தியோகபூர்வ) இருக்கும் என்ற சட்ட மூலத்தை 1956 ஜூன் 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் சிங்கள அரசு நிறை வேற்றியது. இதனைப் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்களும் லங்கா சமசமாஜக்கட்சி உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். **இச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அதனை எதிர்த்துப் பேசிய திரு. கொல்வின். ஆர்.டி. சில்வா "இச்சட்டம் நிறைவேற்றப்படுமானால் இன்னும் 25 வருடத்தில் தமிழர்கள் தனி நாடு கோருவார்கள்" எனக் கூறினார்.**

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் இதனை



படிப்பகம்

padippakam



எதிர்த்துப் பாராளுமன்றத்தின் முன் காலிமுகத்திடலில் தமிழ் உறுப்பினர்களும் மற்றும் தமிழ்ப் பிரமுகர்கள் 300 பேரும் சாத்வீகமான முறையில் சத்தியாக்கிரகம் இருந் தனர். இந்த ஜனநாயக வழிச் சாத்வீகப்போராட்டத்தை, அடக்கும் நோக்கோடு இனத்துவேசக் கோசத்துடன் ஊர்வலமாக வந்த சிங்களவர் சத்தியாக்கிரகிகள் மீது பாய்ந்து சென்று தாக்குதலை மேற்கொண்டனர். பலர் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர்; பல தமிழ்ப் பாரளுமன்ற உறுப்பினர்களினது மண்டை உடைக்கப்பட்டது; பலர் அருகே இருந்த ஏரியில் தூக்கி எறியப் பட்டனர். இதனை அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா பாரளுமன்ற சன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டு நின்றார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய சிங்களப் பொலிசார் கலகத்தை அடக்க முற்படாது பார்த்துக்கொண்டு நின்றனர். **இதனைத் தொடர்ந்து நாடுமுழுவதும் உள்ள தமிழர்கள் தாக்கப் பட்டனர். தமிழர்களது வீடுகள், சொத்துக்கள் பலவும் தீக்கிரையாயின. இதுவே இலங்கையில் சிங்கள மேலாதிக்க அரசின் காலத்தில் இடம் பெற்ற முதலாவது இனக்கலவரமாகும். இதில் 150 தமிழர்கள் கொல்லப் பட்டார்கள்.**

## தமிழர் தம் ஜனநாயக, சாத்வீகப் போராட்டம்

இலங்கையில் உள்ள சிங்களக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றத் தமக்குள்ளே போட்டி போட்ட போதும், எவ்வித கட்சி பேதமும் இன்றி மேற் கூறப்பட்ட நான்கு திட்டங்களையும் செயற் படுத்தி வந்தன.

இனக்கலவரத்தை தொடர்ந்து 1956 ஆகஸ்ட்



படிப்பகம்

மாதம் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழ்ப் பிரதிநிதிகள் கூடி இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சி முறையை நிறைவேற்றித் தமிழ்மக்களைத் தமிழ்மக்களே ஆளக்கூடிய ஒரு சுய நிர்ணய அமைப்பை அரசாங்கம் உருவாக்காவிடின் தாம் தொடர்ச்சியாக மகாத்மாகாந்தி யின் வழியில் சத்தியாக்கிரகப்போரை நடத்தப்போவதா கவும் மேலும் அரசுக்கு ஒருவருட அவகாசம் கொடுப்ப தாகவும் அறிவித்தனர்.

**இதனைத் தொடர்ந்து 1957 ஜூலை மாதம் 27ஆம் திகதி இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா தமிழ்த் தலைவர் திரு.எஸ் ஜே.வி. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்.** இவ்வொப்பந் தத்தில் இலங்கையில் பிராந்திய சபைகள் அமைப்பது எனவும் தமிழர்களுக்கு என ஒரு பிராந்திய சபை அமைக்கவும் அச் சபை தமிழ் மொழிமூலம் நிர்வாகம் நடத்தவும், குடியேற்றம், விவசாயம், கல்வி என்பன போன்ற அதிகாரங்கள் பிராந்திய சபைகளிடமே இருக்குமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இந்த ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியும் எக்ஸத் பிக்கு பெரமுனையும் மற்றும் பல அரசாங்க உறுப்பினர்களும் எதிர்த்ததுடன் இவ் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யாவிடின் தாம் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அறிவித்தனர். இவ் ஒப்பந்தத்தை எதிர்த்து 1957 ஒக்டோபர் 4ஆம் திகதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் காலி முகத்திடலில் இருந்து கண்டி நோக்கி பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாகச் சிங்கள மக்கள் இவ் வொப்பந்தத்தை இரத்துச் செய்யும்படி நிர்ப்பந்தித்தனர். அத்துடன் 1958இல் செப்டம்பர் 9ஆம் திகதி திரு.பண்டாரநாயக்கா அரசின் அமைச்சர் விமலா விஜயவர்த்தனா

padippakam



தலைமையில் பெருந் தொகையான பிக்குகள் பிரதமரின் இல்லத்தின் முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். உடனே திரு. பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை இரத்துச் செய்வ தாக எழுத்து மூலம் உறுதி அளித்தார்.

**இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் இனக் கலவரம் மூண்டது. பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.** தமிழர்களது வீடுகள், வியாபார, தொழில் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பில் மாத்திரம் 10,000க்கு மேல் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுக் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பபட்டனர்.

இக்கலவரத்தைத் தொடர்ந்து பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் உட்பட 150 தமிழர்கள் கைது செய்யப் பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். தமிழ் மக்களின் எதிர்ப்பு உணர்வைத் தணிக்கும் நோக்கோடும், தடுப்புக் காவலிலுள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தடுப் புக்காவலினின்றும் வெளியே வந்தால் மீண்டும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவார்கள் என்பதையும் மனதில் கொண்டு, தமிழ் மொழி விசேட விதிகள் சட்டத்தை பாராளுமன்றத்தில் திரு.பண்டாரநாயக்கா கொண்டு வந்தார். தமிழ்ப் பிரதிநிதிகள் தடுப்புக் காவலில் உள்ள போது இச்சட்டம் கொண்டுவரத் தேவையில்லை எனக் கூறி எதிர்கட்சியினர் பகிஷ்கரித்தனர். இச்சட்டம் தமிழ்ப் பிரதேசத்தில் கல்வி, அரச நிர்வாகங்களுக்குத் தமிழை உபயோகிக்கலாம் எனக் கூறியது.

இதனால் மீண்டும் திரு. பண்டாரநாயக்கா தமிழுக்கு உரிமை கொடுக்கின்றார் எனக்கூறி 1959 செப்டம்பர் 25ஆம் திகதி சோமராமதேரோ என்ற பிக்குவால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இதைத்



படிப்பகம்

தொடர்ந்து தற்காலிகப் பிரதமராக திரு. தகநாயக்கா பதவியை ஏற்றார்.

1959 டிசம்பரில் பாராளுமன்றம் கலைக்கப் பட்டு 1960 மார்ச்சில் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ற போதும் பெரும்பான்மை பெற்று இருக்கவில்லை. "சிங்களம் மட்டும் சட்டத்தை" தீவிரமாக அமுல் செய்வோம் எனக் கூறியே தேர்தலில் போட்டி இட்டனர். இச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழரசுக்கட்சியுடன் பேச்சுவார்த்தை செய்து கொண்டது. ஆட்சியிலுள்ள அரசை வீழ்த்த உதவினால் தாம் பதவிக்கு வந்ததும் தமிழர்களது நியாயமான கோரிக் கைகளை நிறை வேற்றுவதாக உறுதி கூறினர்.

தமிழ் உறுப்பினர்களின் உதவியுடன் பாராளு மன்றம் கலைக்கப்பட்டு 1960 ஜுலையில் தேர்தல் நடைபெற்றது. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பெரும் பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. பெரும்பான் மைப் பலம் பாராளுமன்றத்தில் உள்ளதால் தமிழரசுக் கட்சிக்கு வழங்கிய வாக்குறுதியைக் கைவிட்டுச் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வதில் கவனம் செலுத்தியது.

இதனால் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் சத்தியாக்கிரகபோராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்த ஜனநாயக வழி சாத்வீகப் போராட்டமானது 1961 பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலும் ஆரம்பமானது. தமிழீழம் முழுவதுமுள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுவரை நடைபெற்ற அகிம்சை வழிப்போராட்டங்களில் மிகப்பெரு

padippakam



தமிழ் இனம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, தமிழன் தான் இழந்த நாடாம் தமிழ் ஈழத்தை மீண்டும் பெறுவது தான் ஒரே வழி எனக் கூறி 1959ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி "ஈழம் எங்கள் தெய்வம்"என்னும் ஓர் பிரசுரத்தை வெளியிட்டுத் தனது பாரளுமன்ற பதவியையும் துறந்தார். அவர் தனது பதவித் துறப்பின் போது தமிழ் ஈழமக்கள் தமது தாயகத்தை மீண்டும் பெற அகிம்சை வழிப்போராட்ட மூலமோ அல்லது அது வெற்றி அளிக்ககூடிய வேறு வழிப் போராட்டங்களையோ கையாள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

திரு .சி சுந்தரலிங்கத்தின் கோரிக்கையிலும் பார்க்க அக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் அகிம்சை வழிப் போராட்டத்திலேயே கூடிய அக்கறை கொண்டு அவரின் தலைமையின் கீழ் அணி திரண்டனர். 1961ஆம் ஆண்டு ஒக்டோபரில் சிறையில் இருந்து வெளியே வந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1962ஆம் ஆண்டு மே மாதம் ஒத்துழையாமைப் போராட்டத்தை அரசுக்கெதிராக ஆரம்பித்தனர். 1961இன் சத்தியாக்கிரக போராட்டத்துடன் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்த இராணுவம் தொடர்ந்தும் தமிழ்ப்பகுதிகளிலேயே நிலை கொண்டதுடன் தமிழ் பகுதிகளில் ரோந்து வருவதும் வழமையாகிவிட்டது. இதன் மூலம் பயம் கொண்ட மக்கள் தமது வெளிப்படையான ஆதரவை 1962இல் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்திற்கு முன் போன்று பெருமளவில் கொடுக்க வில்லை. எனவே இராணுவ அச்சுறுத்தல்கள், அரச வன்முறைகளின் முன்னால் அரச எதிர்ப்புச் சாத்வீகப் போராட்டம் எழுச்சி பெற இயலாது, என எண்ணிய தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்துவதைக் கைவிட்டனர்.



படிப்பகம்

padippakam



இந்நிலையில் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் களுடன் தமிழரசுக்கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தினர். தமிழர் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் விளக்கிக் கூறிவந்தனர். எதிர்க்கட்சியினர் தாம் பதவிக்கு வந்தால் தாம் நல்ல தீர்வினைத்தருவதாக வழமை போல் உறுதி அளித்து இருந்தனர். 1965ம் ஆண்டு நடை பெற்ற தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி 66 இடங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டணி 55 இடங்களையும் பெற்றது, தமிழரசு மற்றம் தமிழ்க் காங்கிரசு 17 இடங்களைப் பெற்றது. எனவே தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன்தான் எக்கட்சியும் அரசை அமைக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. இருபக்க சிங்களக் கட்சிகளும் தமிழரசுக்கட்சியின் ஆதரவை நாடினர்.

**ஐக்கியதேசியக்கட்சியுடன் இணக்கம் காணப் பட்டு 'டட்லி- செல்வா" ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது. இவ் ஒப்பந்தமும் "பண்டா செல்வா" ஒப்பந்தத்தை ஒத்ததாகவே அமைந்திருந்தது.** தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கி, தமிழீழப் பகுதிக்கென ஒரு பிராந்திய சபை அமைப்பது அதற்கு குடியேற்றம், கல்வி, மொழி நிர்வாகம் என்ற அதிகாரங்களை வழங்குவது போன்றன அடங்கியிருந் தன. இப் பிராந்திய சபைகள் மாவட்ட சபைகள் எனக் குறிப்பிடப்பட்டு இருந்தன. அத்துடன் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த திரு.மு.திருச் செல்வம் செனட்சபை உறுப்பினராகி உள்ளூராட்சி மந்திரிப்பதவியை பெற்றிருந்தார். தமிழர்களின் உரிமைக ளைப் பெறும்வரை இலங்கை அரச நிர்வாகத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு கொள்வதில்லை என தமிழரசுக் கட்சி தீர்மானித்து இருந்ததால் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் மந்திரிப் பதவியை ஏற்கவில்லை.



படிப்பகம்

**ஒப்பந்தத்தை அமுல் செய்யவும், சிங்கள-தமிழ் மக்களின் பிரச்சினையை இணக்கமான ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும் என உத்தியோகப் பற்றற்ற அமைச்சரவையாக ஓர் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது. 10 பேர் கொண்ட இந்தச் சபையில் தமிழர்களின் முக்கிய தலைவர்களான திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு.ஜி.ஜி பொன்னம்பலம், திரு. எஸ்.தொண்டமான் மற்றும் அரசு சார்பில் திரு.ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆகியோர் அங்கம் வகித்தனர்.**

தமிழர்கள் சிங்களவருடன் ஐக்கியமாகத் தாமும் சுதந்திரமாக வாழ நிச்சயமாக ஒரு தீர்வு வரப்போகின்றது எனப் பூரணமாக நம்பினர். அத்துடன் சிங்கள மக்களுக்குத் தமது நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்தும் நோக்கோடு தமிழீழம் முழுவதும் பிரதமர் டட்லி மற்றும் ஜே.ஆர் உட்பட சக அமைச்சர்களுக்கும் பிரமாண்டமான வரவேற்புகள் கொடுத்து பிரசாரக் கூட்டங்களை வைத்தனர்.

தமிழ் மக்கள் இதன் மூலம் சிங்கள மக்கள் தங்களை இலங்கையின் சம உரிமைகளைக் கொண்ட பிரஜைகளாகச் சகோதரத்துவத்துடன் நடத்தவேண்டும் என்ற நல்லெண்ணத்தை நன்கு வெளிப்படுத்தினர்.

இந்த நல்லெண்ணத்தின் முதற்படியாக டட்லி-செல்வா ஒப்பந்தத்தின்படி தமிழ் மக்கள் தமிழ் மொழியை அரசுடனான நிர்வாகத் தேவைகளுக்கு உபயோகிக்கக் கூடியதாக வழிசெய்யக் கூடிய தமிழ்மொழி விசேட விதிகள் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்க்கட்சியினரான சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி தலைமையில் புத்தபிக்குகளும் சிங்கள மக்களும் எதிர்ப்பு ஊர்வலங்களில் ஈடுபட்டனர்.

padippakam



(இச்சட்டத்தை 1958இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி ஏற்றுக்கொண்டனர் என்பது இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.) இந்த ஊர்வலம் கலவரத்தில் முடிந்தது. துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒரு புத்தபிக்கு இறந்தார். பல எதிர்ப்புக்களிடையேயும் தமிழ் மொழி விசேட விதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. இவ்விதியை நிறைவேற்றியதனால் அரசிற்குச் சிங்கள மக்கள் மற்றும் பிக்குகள் மத்தியில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. இதைக்கண்ட பல ஆளும் கட்சி உறுப்பினாகளும் தமது எதிர்ப்பைப் பிரதமரிடம் தெரியப் படுத்தினர். இதனால் பிரதமர் டட்லி 1968 ஜூலையில் "டட்லி-செல்வா" ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக அறிவித் தார். இதனால் பாராளுமன்ற ஜனநாயக முறையில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுக்காது, தமிழர்களது உரிமைக் கோரிக்கைகள் தட்டிக் கழிக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் தொடக்கம் சம உரிமை பெற்ற இனமாக ஓர் அமைப்பின்கீழ் வாழ, தமிழ் மக்கள் எடுத்துக்கொண்ட பல முயற்சிகள் தோல்வி கண்ட போதும், "டட்லி- செல்வா" ஒப்பந்தம் மூலம் முழுமையான ஒரு தீர்வு ஏற்படும் என நம்பியிருந்தனர்.

இத் தோல்வியினால் 1833ஆம் ஆண்டு சிங்களத் துடன் இணைக்கப்பட்ட தமிழீழம் தொடர்ந்தும் இணைந்து இருக்க முடியாது என்ற நம்பிக்கை சகல தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டது. சிங்கள மக்கள் தமிழரை ஒருபோதும் சகோதர சம உரிமை கொண்ட இனமாக ஏற்க மாட்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திரு. மு. திருச்செல்வம் மந்திரிசபையில் இருந்து விலகிக்கொண்டார். தமிழ் மொழி விசேடவிதிகள் நிறைவேற்றப்பட்டபோதும் அமுல் நடத்தப்படவில்லை.



படிப்பகம்

padippakam



1967இல் அடையாள அட்டை மசோதா சபைக்கு வந்தபோது தமிழ்அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. நவரத்தினம் அவர்கள் அதனை எதிர்த்து அரசிலும், தமிழரசுக்கட்சியிலும் இருந்து வெளியேறினார். (இச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை உபயோகித்து அரச படைகளும் அரச அதிகாரிகளும் தமிழ் பேசும் மக்களை இனம் கண்டு துன்புறுத்துவதைக் காணலாம்.) வெளியேறிய அவர் தமிழ் மக்கள் தாம் இழந்த நாட்டை மீண்டும் பெறுவதே தமிழர்கள் சுதந்திரமாக வாழ வழி எனக்கூறித் தமிழர் சுயாட்சிக் கழகத்தைத் தொடங்கினார்.



படிப்பகம்

padippakam



# 6
# இலங்கை அரசுகளின் இறைமை

## குடியரசாக்குதல்

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த போதும் அது பிரித்தானியர் ஆட்சிப் பிடியில் இருந்து பூரணமாக விடுபடவில்லை. இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு மாத்திரம் இலங்கையரிடம் விடப்பட்டு இருந்தது. தேவை ஏற்படின் இலங்கைக்கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் பிரித்தானிய அரசிடம் இருந்தது. அத்துடன் இலங்கை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் ஒருவர் தனது இறுதித் தீர்ப்பிற்காகப் பிரித்தானி யாவிலுள்ள மேன்மை தங்கிய அரசரின் அரசவைக்கு முறையீடு செய்யலாம். அரசவையின் தீர்ப்பை அறுதியான தீர்ப்பாக இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டது.

1948ஆம் ஆண்டு சோல்பரிப் பிரபுவினால் இயற்றப்பட்ட இலங்கைக்கான **அரசமைப்பு விதிகளில் 29ஆம் பிரிவு இலங்கைப் பாராளுமன்றத்திற்கு நாட்டிற் கான சட்டங்களை இயற்றும் அதிகாரங்களை வழங்கும்; அதே வேளை 29(2)ஆம் பிரிவுக்கமையவே சட்டங்களை இயற்றுதல் வேண்டும் என வரையறுத்துக் கூறியுள்ளது.**

படிப்பகம்

padippakam



**29ஆம் விதியானது,**

*29 (1) இத்தீவின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் நல்லாட்சிக்குமாகப் பாராளுமன்றமானது, இந்தக் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கு அமையச் சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.*

*29 (2) இச் சட்டங்கள் எதுவும்,*

*(அ) எந்த மதத்தைக் கடைப்பிடிப்பதைக் கட்டுப் படுத்தவும் தடை செய்யவும் கூடாது.*

*(ஆ) ஏனைய சமூகங்களையோ, மதங்களையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படாத கட்டுப்பாடு களையும், குறை பாடுகளையும் ஏதாவது ஒரு சமூகத்தையோ, மதத்தையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படக் கூடாது.*

*(இ) ஏனைய சமூகங்களுக்கோ, மதங்களுக்கோ வழங்கப்படாத முன்னுரிமைகளையும் சிறப்புக் களையும் ஏதும் ஒரு சமூகத்திற்கோ, மதத் திற்கோ வழங்கக்கூடாது.*

*(ஈ) எந்த மத நிறுவனத்தின் அமைப்பு விதிகளை யும் அந்த நிறுவனத்தின் ஆட்சி அதிகாரத்தின் ஒப்புதல் இன்றி மாற்றக்கூடாது. எனவே, இப்படி இருப்பினும் சட்டத்தின்மூலம் இணைந்தமைக் கப்பட்ட மத நிறுவனமாயின் அந்த நிறுவனத் தின் ஆட்சி அதிகாரத்தின் வேண்டுதலின் பெயரில் அன்றி எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.*



படிப்பகம்

padippakam



*29 (3) இந்தப்பகுதியின் 2-ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கு முரண்பாடுடைய எந்தச்சட்டமும் முரண்பாடு அடைகின்ற அளவு எல்லை வரை செல்லுபடியாகாது.*

**எனவே 1948ஆம் ஆண்டு முதல் தமிழர்களுக் கெதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் எல்லாம் அரசியல் அமைப்புக்கு முரணானவை; செல்லுபடியாகாதவை. இப்படி இருந்தபோதும் சிங்கள அரசு தமிழ் பேசும் இனத்திற்கு எதிராகச் சட்டம் இயற்றித் தனது ஆட்சி அதிகாரத்தினால் நடைமுறைப்படுத்தி வந்தது.**

1956இல் தனிச் சிங்கள சட்டத்தைப் பண்டார நாயக்கா கொண்டுவரும்போது அச் சட்டம் அரசியல் அமைப்புக்கு முரணானது என்பதை நன்கு அறிந்திருந் தார். எனவே அன்றே அவர் இலங்கையைக் குடியரசாக்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். தொடர்ந்து 1965இல் டட்லி சேனநாயக்காவின் அரசும் இலங்கையைக் குடியரசாக்க முயன்றது. குடியரசாக்கு வதற்குப் பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லை என எதிர்கட்சியினர் ஆலோசனை கூறியதால் அவரும் கைவிட்டார்.

இதனிடையே சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து திரு.செல்லையா கோடீஸ்வரன் என்னும் தமிழ் அரச ஊழியர் வழக்குத் தொடர்ந்தார். 1964 ஏப்பிரல் 24இல் வெற்றியும் பெற்றார்.

**தமிழர்கள் தமது உரிமை கோரி நடாத்தும் எவ்வித போராட்டத்தையும் இராணுவத்தின் உதவி கொண்டு அடக்கிவிடமுடியும் என்ற நம்பிக்கை சிங்களத் தலைவர் களிடம் இருந்தது.** அவர்களின் இந்த நம்பிக்கைக்குப்



படிப்பகம்

padippakam



பின்வரும் செயல்கள் காரணமாக அமைந்தன. 1962இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டமும் அதனைத் தொடர்ந்து தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்களும் இராணுவ வன்செயல்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டன. அரச வன்முறைமுன் தோல்வி கண்டன, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டபோதோ, காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக் கலவரங்களினால் தமிழ் மக்களின் உயிர்கள், உடைமைகள் அழிக்கப்பட்ட போதோ தமிழ் மக்கள் எவ்வித ஆர்பாட்டங்களிலோ அரச எதிர்ப்பு நடவடிக்கைகளிலோ ஈடுபடாது வழமை போன்று தமது கடமைகளில் ஈடுபட்டு, தமது வாழ்வினைத் தொடர்ந்தமை போன்றன ஆகும்.

ஆனால் சட்ட அடிப்படையில் வரும் தடைகளை நீக்க, இலங்கையைப் பிரித்தானிய அரசபிடியில் இருந்து விடுவிக்க வேண்டும் எனக் கருதினர். இதன் அடிப்படையில் எழுந்ததுதான் இலங்கையைக் குடியரசாக்கும் திட்டம். இத்திட்டத்திற்கு 1970ஆம் ஆண்டுத் தேர்தல் பயன் படுத்தப்பட்டது.

## 1970 பொதுத் தேர்தல்

1970ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் போது அரசியல் அமைப்பு ஆக்கசபை ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையை தன்னாட்சியும் இறைமையும் உடைய குடியரசாக்க மாற்றுவோம் எனக் கூறித் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டணி (ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்மியூனிஸ்ட் கட்சி) நாடு முழுவதும் போட்டியிட்டு, சிங்களப் பகுதிகளில் மாத்திரம் வெற்றி



படிப்பகம்

padippakam



பெற்றது. 157 இடங்களுள்ள பாராளுமன்றத்தில் 116 இடங்களைப் பெற்றது.

தமிழர்களுக்குத் தனி மாநிலஆட்சி, சிங்களவருக் குத் தனி மாநிலஆட்சி இரண்டும் இணைந்த மத்திய அரசு என்ற கோரிக்கையை முன் வைத்துத் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பிரதேசங்களில் மாத்திரம் போட்டியிட்டது. தமிழ் காங்கிரசும் தமிழ்ப் பிரதேசங்களில் மாத்திரம் போட்டியிட்டது.

இரண்டு கட்சிகளும் சேர்ந்து தமிழ்ப் பிரதே சத்திலுள்ள 20 இடங்களில் 16இல் வெற்றி பெற்றன.

எனவே இத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் இலங்கையைக் குடியரசாக மாற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டு முன்னணியின் கொள்கையை முற்றாக நிராகரித்துள்ளனர். அது மாத்திரமன்று இத்தேர்தலைப் பொதுசன வாக்கெடுப்பாகக் கருதினாலும் இலங்கையில் 4,949,616 பேர் வாக்களித்திருந்தனர். அவர்களில் கூட்டு முன்னனிக்கு 2,415,302 பேர் வாக்களித்திருந்தனர். எதிர்க் கட்சிகள் மொத்தமாக 2,534,314 வாக்குகளைப் பெற்றிருந் தனர். எனவே பொதுமக்களில் பெரும்பாலானோரின் அங்கிகாரத்தைக் கூடப் பெற்றதெனக் கூறமுடியாது.

இலங்கை இதுவரை காலமும் பிரித்தானிய அரசின் ஒரு சுதந்திரம் பெற்ற நாடாக இருந்ததே ஒழியப் பிரித்தானியாவின் மேலாணையில் நின்றும் விடுபட்ட குடியரசாக இருக்கவில்லை . எனவே ஸ்ரீலங்கா கூட்டணி யினர் (சிங்களவர்) தம்மைத்தாமே பிரித்தானியாவில் இருந்து விடுவித்துக்கொண்டு தமக்குத் தாமே சட்டம் இயற்றிக் கொள்ளும் ஒரு குடியரசாகப் பிரகடனப் படுத் திக்கொள்ள 1970 யூன் 19ஆம் திகதி நவரங்காலாவில்



படிப்பகம்

padippakam



(பாராளுமன்றத்தில் கூடாது) கூடியது. இச் சம்பிரதாய நிகழ்ச்சியில் நாட்டின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் முதற் கொண்டு பாராளுமன்ற பிரதிநிதிகள் வரையாக 1700 பேர் கலந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அரசியல் ஆக்கசபையில் கலந்து கொள்ளாது புறக் கணிக்கவே விரும்பினர். ஏனெனில் கடந்த கால நடவடிக் கைகள் மூலம் சிங்கள அரசுகள் தமிழர்களுக்குரிய அந்தஸ்தைத் தரமாட்டார்கள் என்பதுடன், தமிழ் மக்கள் இலங்கை குடியரசாவதற்கு தேர்தல் மூலம் ஒப்புதல் வழங்கவும் இல்லை. எனினும் ஒன்றாக வாழ்வதற்குரிய இறுதிச் சந்தர்ப்பமாகக் கலந்து கொண்டனர்.

கூட்டத்தைத் தொடங்கிய திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இது சனப்பிரதிநிதிகள் சபைக்கூட்ட மில்லை, சனப்பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் கூடும் கூட்டம் என்றார். அத்துடன் இச்சபை, இலங்கை மக்களின் அரசியலமைப்பு ஆக்க அவை. இந்த அரசியல் அமைப்பு இலங்கை மக்களின் வலிமையிலும், உரிமையி லும் ஆக்கப்படவுள்ள அரசியல் அமைப்பு ஆகும். இது இலங்கை மக்களின் அடிப்படைச்சட்டமாக விளங்கப் போகின்ற அரசியல் அமைப்பு என்றெல்லாம் கூறப்பட்டது.

சபைக் கூட்டத்தைக் கூட்டிய திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில்,

> "எம்மிடையே பல இனக்குழுக்கள் வாழ்கின்றார் கள். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாய்க்காரர் என்போர். பல மதக் குழுக்கள் வாழ்கின்றார்கள். நாங்கள் ஒன்றாகச் செயற்படவேண்டும் ஒரு நாடாகச் செயற்பட



படிப்பகம்

padippakam



*வேண்டும்” என்று கூறினார்.*

*இது 1947இல் சோல்பரிக் ஆணைக்குழுவின் திட்டத்தை நிறைவேற்றி இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் போது டி.எஸ். சேனநாயக்கா கூறியதைப் போன்று பேச்சளவில் மாத்திரம் நின்று விட்டது.*

*1970 ஜுலை 20ஆம் திகதி தமிழ் மக்களின் சார்பில் திரு. சி. கதிரவேற்பிள்ளை அரசியலமைப்பு ஆக்க அவையில் நீண்ட சொற் பொழிவை ஆற்றினார் அதில் சில குறிப்புகள்:*

> *“.......இன்றைய நடவடிக்கைக்கு (குடியரசு ஆக்க) மக்களுடைய அதிகாரம் உண்டு எனக் கூறுகின்றீர்கள். மக்களுடைய அரசுரிமையின் அடிப்படையில் இருந்து இயங்குவதாகக் கூறுகின்றீர்கள். நாட்டில் எத்தனை வீதம் மக்கள் இதற்கு வாக்களித்தார்கள்? ............” தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இத்தகைய நடவடிக்கைக்கு எந்தப் பிரதிநிதிக்கும் தமிழ் மக்கள் அதிகாரம் கொடுக்க வில்லை.* **உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப் படையில் எந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை.** *இதற்கு மாறாக உங்கள் தமிழ் வேட்பாளர்கள் அத்தனை பேரும் தோல்வியுற்றனர் .......ஜனாப் முகமதலி ஜின்னாவைப் போல் நாமும், எமது தமிழ் இனமும், தமக்கென தமது இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் அரசுரிமையையும் நிலை நாட்ட வேறு ஓர் அரசியல் நிர்ணய சபையை நிறுவி நடவடிக்கை எடுத்து இருக் கலாம் அல்லவா?....... நீங்கள் உருவாக்கும்*



படிப்பகம்

padippakam



*புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழ் இனத்தை உங்களோடு ஒற்றுமையாகச் சேர்த்து வைத்திருக்க அவர்களை உங்களோடு சரிசம மான சுதந்திர இனமாக வைத்திருக்க வழி செய்ய வேண்டும்.......”*

*பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.கதிரவேற் பிள்ளை அவர்களின் இப்பேச்சு, தமிழ் மக்களின் அப்போதைய மன நிலையை முழுமையாக எடுத்துக் காட்டியது. இதே போன்று 1970 ஜுலை 21ல் திரு.க.பொ. இரத்தினம் அவர்களும் அரசியல் அமைப்பு ஆக்க அவையில் பேசுகையில்,*

***“.....இந்த நேரத்தில் இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்களிடமிருந்து நாங்கள் இணைப்பாட்சி பெறுவதற்கு, தமிழரசு பெறுவதற்குப் பெற்றுக் கொண்ட அதிகாரத்தை நீங்கள் மதிக்க வேண்டும். நீங்கள் சிங்கள மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை நாங்கள் மதித்ததுபோல நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற அதிகா ரத்தை மதிப்பீர்கள் என்பதில் சந்தேக மில்லை. எனவே சிங்கள மக்களின் தலைவர்களும் தமிழ் மக்களின் தலைவர்களும் மக்களுக்கிடையே இருந்து பெற்ற அதிகாரத்திற்குப் பங்கம் உண்டாகாமலும், ஓரினத்தை ஓரினம் அடக்கி ஆளாமலும், அரசியல் யாப்பு ஆக்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கின்றோம்.....”***

*இவற்றின் பின்னர் 1971 மார்ச் 15ஆம் நாள் புதிய அரசியல் யாப்புக்கான முதலாவது அடிப்படைத் தீர்மானம் பிரதமரால் முன் மொழியப்பட்டது.*



படிப்பகம்

padippakam



*"சிறிலங்கா, சுதந்திரமான உரிமைகொண்ட தன்னாதிக்கமுள்ள ஒரு குடியரசாதல் வேண்டும்."*

*இதனை சிங்கள தமிழ் உறுப்பினர்கள் ஏகோபித்து ஆதரித்தனர். இதனைத் தொடர்ந்து இரண்டாவது தீர்மானம்*

***"சிறிலங்காக் குடியரசு ஒற்றையாட்சி அரசு ஒன்றாதல் வேண்டும்."***

*என முன்மொழியப்பட்டவுடன் திரு. வி. தருமலிங்கம் **"ஒற்றையாட்சி"** என்ற சொல்லை அகற்றி, **"கூட்டாட்சி"** (சமஷ்டி) என்ற சொல் இடப்படவேண்டுமெனத் திருத்தமொன்றை முன்மொழிந்தார். திரு.க. ஜெயக்கொடி வழிமொழிந்தார். ஆனால் **இவர்களது திருத்தத்தைச் சபை ஏற்றுக்கொள்ளவில்லை.** தீர்மானம் திருத்தமின்றி நிறைவேற்றப்பட்டது. இதேபோன்று அரசினால்,*

***"சிறிலங்காக் குடியரசிலே பெரும்பான்மை மக்களின் சமயமாகிய பெளத்த மதத்திற்கு அதற்குரிய இடம் வழங்கப்படல் வேண்டும். 5(4)ஆம் அடிப்படைத் தீர்மானத்தினால் வழங்கப்பட்ட உரிமைகள் எல்லா மதங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில், பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்".***

*எனக்கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்குத் தமிழர் பின்வரும் திருத்தத்தைக் கொண்டு வந்தனர்.*

***"சிறிலங்காக் குடியரசு ஒரு மதசார்பற்ற அரசாதல் வேண்டும். ஆனால் பௌத்த, இந்து,***



படிப்பகம்

padippakam



**கிறித்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாக்கவும் பேணி வளர்க்கவும் வேண்டும்.”**

*வழமைபோல தமிழர்களது இத் திருத்தமும் நிராகரிக்கப்பட்டது.*

*தொடர்ந்தும் தமிழர்களின் நலன்களுக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதுடன், தமிழ்த் தலைவர்களது எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படாது புறக்கணிக்கப்படுவதனால் அச்சபையில் இருப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை எனக்கூறி திரு, எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட சகல தமிழரசுக் கட்சியினரும் சபையைவிட்டு நிரந்தரமாக வெளியேறினார்கள்.*

*1972 மே மாதம் 22ஆம் நாள் புதிய அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே இலங்கைத் தீவு பூரணமாகப் பிரித்தானிய அரசின் பிடியிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக்கொண்டது. அதாவது, 1833ஆம் ஆண்டு வலிந்து சிங்களத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட தமிழீழம் சுதந்திர நாடாகியது. இதனை திரு. மு. திருச்செல்வம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

**“இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ் நாட்டினத்தின் இறைமை அவர்களுடையதாயுள்ளது. எனினும் அந்த இறைமையைப் பயன்படுத்தும் ஆட்சியுரிமை அவர்களுடையதாகவில்லை** *இது புதுமை. தமிழரது ஆட்சியுரிமையைச் சிங்கள அரசு இராணுவ அடக்கு முறை மூலம் எடுத்துக்கொண்டுள்ளது”.*

*இலங்கைத்தீவு குடியரசாகிய சம்பவத்தை சட்டரீதியில் உற்று நோக்கினால் பிரித்தானிய அரசால் 1948ஆம்*



படிப்பகம்

padippakam



ஆண்டு வழங்கப்பட்ட இலங்கைகான அரசியல் அமைப் புக்கு அமைவாகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அந்த அரசியல் அமைப்பைப் புறக்க ணித்து, புதிதாக ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க அதிகாரம் அற்றவர்களாவார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசு தமக்கு மக்கள்(சிங்கள) அங்கிகாரம் வழங்கி உள்ளார்கள் எனக் கூறி, பிரித்தானிய அரசின் அனுமதியின்றி தமது இறைமையைத் தாமே எடுத்துக் கொண்டனர். எனவே இதே போன்று தமிழரும் தமது இறைமையைத் தாமே எடுத்துக் கொள்ள உரிமை உடையவர்கள். இந்த அடிப்படை உண்மையை ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட சிங்கள அரசுகளும் தலைவர்களும் வெளிக்காட்டாது மறைத்துச் செயற்பட்டனர்.

சிங்கள அரசின் இச்செய்கையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை மக்கள் வாக்கெடுப் பின் மூலம் அரசிற்கு எடுத்துக் காட்டும் நோக்கோடு 1972 ஒக்டோபர் 3ஆம் நாள் திரு. எஸ.ஜே.வி. செல்வநாயகம் தனது தேசியப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தார். தமிழ் மக்கள் சிங்கள அரசை ஏற்றுக் கொள்ள வில்லை. அரசாங்கம் என்னோடு போட்டியிட்டு தமிழர்க ளின் மன நிலையைத் அறிந்து கொள்ளட்டும் என்று கூறினார்.

1975 பெப்ரவரி 6இல் இடைத் தேர்தல் நடைபெற்றது. **திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம்** பெரும் பான்மையால் வெற்றி பெற்றுத் தமிழ்மக்கள் சிங்கள அரச ஆதிக்கத்தை ஏற்கவில்லை என்பதை நிரூபித்தார். தேசிய பேரவைக்குச் சென்ற அவர் **பின்வரும் தீர்மானத்தை 1976ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாள் தேசிய பேரவையில் (பாராளுமன்றத்தில்) கொண்டுவந்தார்.**



படிப்பகம்

padippakam



இலங்கையின் இருவேறு நாட்டினர்களான சிங்களவரும் தமிழரும் சுயநிர்ணய உரிமை உடையவர் களாதலால்,

"அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் இன்றுவரை பிணைக்கப் பட்டுள்ளமையால், சுதந்திர இலங் கையின் அரசுகள் அனைத்தும் சிங்கள நாட்டி னத்தினை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்கு வித்து வளர்த்ததன் பயனாக, இப்போதுள்ள அரசியல் யாப்பு ஒருதலைப்பட்சமாகத் தீர்மானி க்கப்பட்டு, தமிழ் நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக ஆக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை இடைத்தேர்தல் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற இறை மையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றலுரிமை யாக ஏற்றுக் கொள்வதென இப்பேரவை தீர்மா னிக்கிறது."

இத்தீர்மானம் சகல தமிழர் கூட்டணி உறுப்பி னர்களாலும் முன் மொழியப்பட்டு பேரவைப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இலங்கையின் சிங்கள இனம் ஸ்ரீலங்கா என்ற பெயருடன் நாட்டைக் குடியரசாக்கியதுடன், தமிழீழத்தின் இறைமையையும் தன் கையில் எடுத்துக் கொண்டு, தமிழீழப்பிரதேசத்தின் அரசநிர்வாகத்தைத் தானே நடத்தத் தொடங்கியது. இதை எதிர்த்துத் தமிழர்கள், தமது இறை மையை மீட்டெடுக்க, தமது நாட்டை அமைத்துக்கொள்ள, தமது நாட்டுக்கான அரசை அமைக்க முயன்றனர்.



படிப்பகம்

padippakam



# தோல்வி கண்ட சனநாயகம்

*தமிழர்கள் தமது இறைமையை மீட்டுத் தமக்கான தனி அரசை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று திரு. சி. சுந்தரலிங்கமும் அவரது கட்சியும் 1960ஆம் ஆண்டு முதல் தேர்தலில் (1970 இல் திரு. வ. நவரத்தினமும்) நின்றார்கள். ஆனால் கூட்டாட்சியில் நம்பிக்கை கொண்ட தமிழ் இனம் இக்கோரிக்கைக்கு* **ஒப்புதல் வழங்காது** *1952, 1956, 1960, 1961, 1965 1970 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் (இலங்கை சுதந்திரம் அடைந்தபின் நடைபெற்ற சகல பொதுத் தேர்தல்களின்) மூலம்* ***தம்மைத் தாமே ஆழக்கூடிய ஒரு சுயாட்சியும், மத்திய கூட்டாட்சியும் கொண்ட அரசாட்சிமுறையே வேண்டுமெனச் சனநாயக அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட தமிழருடைய தீர்ப்பைச் சிங்கள அரசுகள் உதாசீனம் செய்தே வந்தன,***

***1970 பொதுத் தேர்தலின்பின் சிங்கள அரசு இலங் கைத் தீவைக் குடியரசாக்கி, அதனைச் தனிச் சிங்கள பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்திய நாள்முதலாக, தமிழர் தமது சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கு இருந்த ஒரேவழி தமது இறைமையைத் தாமே பெற்று தமக்கான அரசைத் தாமே அமைப்பதுதான் தீர்வு என்பதனால், அனைத்துத் தமிழீழ மக்களும் தமக்கான தமிழீழ அரசை அமைக்க முயன்றனர்.***

*கடந்த காலங்களின் அனுபவத்தையும், சிங்கள ஆட்சியாளர்களினதும், சிங்கள மக்களைப் பிரதி நிதித் துவப்படுத்தும் புத்தமத பீடங்களினதும் மனோநிலையை நன்கு உணர்ந்து கொண்ட தமிழ் இளைஞர்கள் சாத்வீகப் போராட்டத்தின் மூலம் தமிழர் தமது இறைமையை மீட்டெடுக்க முடியாது என்பதை உறுதியாக நம்பினர்.*



படிப்பகம்

சாத்வீகப் போராட்டத்தை முன் எடுக்கும்போது மக்களுக் கெதிராக அரசு, இராணுவ வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் என்பதையும், அது தமிழ் மக்களின் மனோ நிலையைப் பாதிப்படையச் செய்து, அவர்களைச் சிங்கள இனத்தின் நிரந்தர அடிமைகளாக்கி விடும் என்பதையும் கருத்திற்கொண்டு, ஆயுதப் போராட்டத்திற்குத் தமிழ் இனத்தைத் தயார் படுத்திக்கொள்ள **புதிய தமிழ் புலிகள்** என்னும் அமைப்பு செயற்படத் தொடங்கிது.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கை

தமிழீழக் குடியரசை அமைக்கும் நோக்குடன் தமிழர் கூட்டணியானது, தமிழ்த் தலைவர்கள், இளைஞர் தலைவர்கள் சகலரையும் வட்டுக்கோட்டையில் 1976 மே மாதம் 14இல் ஒன்று கூட்டியது. -இது 1970 யூன் நவரங்காலில் (கொழும்பில்) சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சிங்களத் தலைவர்கள் கூடி இலங்கையைக் குடியரசாக்கியதற்கு ஒப்பானது எனக் கொள்ளலாம்.

இந் நிகழ்ச்சிக்குத் தமிழ்த் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமை வகித்தார். தமிழர் கூட்டணித் தலைவர்களாக திரு. எஸ். ஜே. வி. செல்வ நாயகம், திரு. ஜி.ஜி. பொன்னம்பலம், திரு. செள. தொண்டமான் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இம் மகாநாடு தமிழீழத்திற்கான பல தீர்மானங் களை நிறைவேற்றிக்கொண்டது. இத்தீர்மானங்கள் **"வட்டுக்கோட்டைத் தீர்மானங்கள்"** என அழைக்கப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமான மூன்று தீர்மானங்களை மாத்திரம் தருகின்றோம்:

*1. தமிழீழக் குடியரசு:*

*"ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ள சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பாக அமையும்."*

*2, தமிழீழ நிலப்பரப்பு:*

*"தமிழீழத்தின் நிலப்பரப்பாக வடக்கு, கிழக்கு மாகாணமும், புத்தள மாவட்டமும் இருக்கும்."*

*3. தமிழீழக் குடிகள்:*

*பின்வருவோர் தமிழீழத்தின் குடிகளாக இருப்பர்:*
*(அ) தமிழீழ பிராந்தியத்திற்குள் வசிக்கும் அனைவரும்.*

*(ஆ) இலங்கையின் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தமிழீழத்தில் குடி உரிமை கோரலாம்.*

*(இ) இலங்கை மூதாதையர்களைக் கொண்ட உலகின் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசுவோர் தமிழீழத்தின் குடி உரிமையைக் கோரலாம்.*

*தமிழீழத்திற்கான இக் கோரிக்கையை வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்னும் பெயரில் நிறைவேற்றிக்*

padippakam



கொண்ட தமிழர் கூட்டணி, தமிழீழத்திற்கான அரசை அமைக்கும்போது ஸ்ரீலங்கா அரசினால் இராணுவ, அரசியல் அழுத்தங்கள் ஏற்படும் என்பதைக் கவனத்தில் கொண்டு, அதனை எதிர்த்துப் போராட வேண்டி ஏற்படும் என்பதனால் தமிழர் கூட்டணி என்ற பெயரை தமிழர் விடுதலைக் கூட்டணி (T.U.L.F) என அம் மகாநாட்டில் மாற்றிக் கொண்டது.

## தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை

1972இல் ஸ்ரீலங்கா குடியரசாக்கப்பட்டுத் தமிழீழத் தின் இறைமையையும் ஸ்ரீலங்கா தனது கையில் வலிந்து எடுத்துக் கொண்டதை அறிந்தோம். இழந்த அந்த இறை மையை ஆயுதப்போராட்டத்தின் மூலமே மீளப் பெறமுடியு மென்ற நடைமுறை அனுபவத்தை மனதில் கொண்டோர் இறைமையை மீட்டெடுக்கும் பணியில் தமிழ் மக்கள் பல இழப்புகளை எதிர்கொள்வர். அந்த இழப்புகளிலிருந்தும் தமிழ் மக்களைப் பாதுகாத்துத் தமிழர் தம் உரிமையை மீட்டெடுக்கவென 1972இல் **புதிய தமிழ்ப் புலிகள்** என்ற அமைப்பு உருவானது. இந்த அமைப்பு தமிழீழ இராணுவத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டு அதற்குக் குறுக்கே நின்ற சக்திகளை அழித்து மேலோங்கிச் சென்றது. இவ்வமைப்புக்கு திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமை தாங்கினார். இவ் வமைப்பு 1976ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி தமது பெயரை **"தமிழீழ விடுதலைப் புலிகள்"** என மாற்றிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது செயற் பாட்டைத் தொடங்கப் பின்வரும் முக்கிய விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டி இருந்தது.



படிப்பகம்

padippakam



> அவை, தமிழீழ இராணுவத்திற்குத் தேவையான இளைஞர்களை ஒன்றிணைத்தல், பயிற்சி கொடுத்தல், இராணுவத்திற்குத் தேவையான உபகரணங்களைப் பெறுதல் போன்றன ஆகும்.

எந்த ஒரு நாட்டின் உதவி இன்றியும், இராணுவ, ஆயுத அனுபவம் இன்றியும், போதிய நிதி வசதியின்றியும் இவ்வாறான ஓர் அமைப்பை உருவாக்க முடியும் என்று கற்பனையில் கூட எண்ண முடியாதிருந்த அவ் வேளையில், அவற்றை மெல்ல மெல்லப் பல சிரமங்களின் மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடை முறையாக்கிச் சென்றனர். முதற்கட்டமாகக் கொரில்லாப் போர் முறையைத் தமிழீழவிடுதலைப் போரில் திரு. வே. பிரபாகரன் அவர்கள் பயன்படுத்தினார். இப்போர் முறையே தமிழீழ மக்களின் ஆரம்ப ஆயுதம் தாங்கிய மக்கள் போராட்டமாகத் திகழ்ந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக் கோட்டைத் தீர்மானமும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் தமிழ் மக்கள் தமது நாட்டின் இறை மையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைக-ளை முன் எடுத்துச் சென்றதனால், ஸ்ரீலங்கா அரசு பல இராணுவ நடவடிக்கைகளைத் தமிழீழப் பிரதேசத்தில் முடுக்கிவிட்டது. அரச இராணுவ வன்செயல்கள் அதிகமா யின. இதனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேவையின், முக்கியத்துவத்தைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து கொண்டனர்.

இதே வேளை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர் தமிழீழத்தை அமைக்கக் கோரும் துண்டுப் பிரசுரத்தை மக்களுக்கு வழங்கியதற்காகவும் அதனை வைத்திருந்தமைக்காகவும் திரு. அ. அமிர்தலிங்கம், திரு



படிப்பகம்

padippakam



வ. ந. நவரத்தினம், திரு .க. பொ.இரத்தினம், திரு. க. துரைரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் வழக்கு விசாரணையின் போது திரு.மு. திருச்செல்வம் Q.C. அவர்கள் தமிழீழத்தின் இறைமையைப் பற்றியும், ஸ்ரீலங்கா குடியரசின் அரசமைப்பு செல்லுபடியற்றது என்பதைப் பற்றியும் வாதிட்டார்.

திரு. ஜி.ஜி பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் ஆகிய தமிழ்த் தலைவர்கள் சட்டத் தரணிகள் ஆனபடியால் இவர்களோடு இன்னும் பல சட்டத்தரணிகளும் இணைந்து நீதிமன்றத்தில் வாதிட்டனர். இவ்வழக்கு தமிழ் மக்கள் சட்டரீதியில் தமது நாட்டினை மீளப் பெற உரிமையுடையவர்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியது. வழக்கின் போக்கை அறிந்த அரசு 1976 செப்டம்பர் முதலாம் திகதி குற்றம் சாட்டப்பட்டோர் மேலுள்ள குற்றச்சாட்டுகளை மீளப்பெற்றுக் கொண்டது. இதனால் குற்றம் சாட்டப்பட்டோர் விடுதலை செய்யப் பட்டனர்.

## தமிழீழ அரசுக்கான பொதுசன வாக்கெடுப்பு

இந்நிலையில் ஸ்ரீலங்கா அரசு 1977 யூலை 21ஆம் திகதி தேசியப் பேரவைக்கான பொதுத் தேர்தல் இடம் பெறும் என அறிவித்துத் தேர்தலை நடத்தியது. **இத்தேர்லின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வட்டுக் கோட்டை தீர்மானத்திற்குத் தமிழ் மக்களின் அங்கீகாரத்தைக் கோரினர். தமிழீழ அரசை அமைக்க தமிழ் மக்களும் தமிழ் மக்கள் பூரண ஆதரவை வழங்கியிருந்தார்கள்.**



படிப்பகம்

padippakam



இலங்கைத் தீவுக்கு ஸ்ரீலங்கா எனப் பெயர் சூட்டி குடியரசாக்கிய நாள் தொடக்கம், தமிழீழ நாட்டின் இறைமையை மீளப் பெற வேண்டும் என்ற கருத்து, தமிழ் மக்களிடையே வேகமாக பரவத் தொடங்கியது. 1972 முதல் இளைய தலைமுறையினர் இதிற் பூரணமாகச் செயற் பட்டனர். திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் பாராளுமன்றப் பதவியைத் துறந்த நாள் முதல் தமிழர் கூட்டணியினரும் தீவிரமாகச் செயற் பட்டனர்.

அகில இலங்கை அடிப்படையில் அமைக்கப்பட்ட கட்சிகளில் அங்கம் வகித்த பல தமிழ்த் தலைவர்களும் தமது கட்சிகளினுள் தமிழர் பிரச்சனைக்கு தாம் மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியைக் கண்டதும் அக் கட்சிகளை விட்டு வெளியேறினர். குறிப்பாக மூத்த இடது சாரித் தமிழ் உறுப்பினரான திரு. வ.பொன்னம்பலம் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு வெளியேறி செந்தமிழர் என்னும் அமைப்பை உருவாக்கித் தமிழர் கூட்டணியுடன் இணைந்து கொண்டார்.

இவ்வாறாக தமிழ் மக்கள் 1948ஆம் ஆண்டு முதல் தேர்தல் மூலம் தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து பாராளுமன்ற சனநாயக முறை மூலம் தமது உரிமை களைப் பெற மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வி மேல் தோல்வி கண்டன. அதேபோன்று தமிழ் மக்களிடையே இருந்த இடதுசாரித் தலைவர்கள் தமது கட்சிகளின் மூலம், கட்சிகளுக்குள் தமிழர்களது நிலையை எடுத்துக்கூறி அவர்களது உரிமைகளை பெற்றுக் கொள்ள எடுத்த முயற்சிகளும் தோல்வி மேல் தோல்வி கண்டன. எனவே எந்தச் சிங்கள அரசியற் கட்சிகளும் தமிழர்களது உரிமையைக் கொடுப்பதற்குத் தயாரில்லை என்ற நிலையில் சகல தமிழ் மக்களும் ஏகோபித்துத் தமிழீழத்தின் இறைமையை மீளப்



படிப்பகம்

பெறுவதே ஒரே வழி என முடிவெடுத்த நிலையில், தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவினால் வடக்குக் கிழக்கில் இருந்து 18 தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

**உத்தேச தமிழீழ தேசிய சபையின் பிரதிநிதிகள் என்ற அடிப்படை நோக்கத்துடனேயே தமிழ் மக்கள் இவர்களைத் தெரிவு செய்தனர். இந்த வெற்றியின் மூலம் தமிழீழத்தை அமைப்பதற்கான ஆணையை மக்கள் வழங்கியிருந்தனர். சுதந்திர தமிழீழத்திற்கான அரசை அமைப்பது தான் எமது முடிவு என்பதைத் தமிழ்மக்கள் பொது வாக்களிப்பு மூலம் சனநாயக முறையில் ஸ்ரீலங்காவுக்கும், உலகுக்கும் வெளிப்படுத்தினர்.**

## மக்கள் ஆணை மீறப்பட்டமை

1977 யூலை தேர்தலுக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் தமிழ்த் தலைவர்களான எஸ். ஜே.வி. செல்வநாயகம், திரு ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. மு. திருச்செல்வம் ஆகியோர் இறந்து விட்டனர். இந்நிலையில் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக இருந்தார். 1977 யூலைத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் கொடுத்த ஆணையின் படி சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான அரசசபை ஒன்றினை அமைப்பதற்குப் பதிலாக, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஸ்ரீலங்கா தேசியப் பேரவைக்குச் சென்று எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டனர். அத்துடன் 1977இன் மூலம் பிரதமரான திரு. ஜே.ஆர் ஜயவர்த்தனாவினால் வழங்கப்பட்ட பிரதேச சபை அமைப்பையும் ஏற்றுக் கொண்டனர். இது தமிழீழ மக்கள் சனநாயக முறையில் தெரிவித்த அவர்களது கருத்துக்கும், ஆணைக்கும் முரண்பாடான செயற் பாடாகும்.

padippakam



# மக்கள் ஆணையை ஏற்ற விடுதலைப் புலிகள்

1977 யூலை 21ஆம் திகதி சுதந்திர தமிழீழத்தை அமைக்கத் தமிழ்ஈழ மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று தமிழீழ விடுதலைப்புலிகள் செயற்பட்டு வருகின்றனர். தமிழீழப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தின் நிலைகளிற் பெரும் பகுதியைத் துரத்தி, அப்பகுதியில் சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலை நாட்டியதுடன், தமிழ் ஈழத்தின் இறைமையை ஏற்றுக் கொண்ட ஒரு அரசாகவும் செயற் படுகின்றனர்.

தமிழீழத்தின் நிர்வாகம், நீதிபரிபாலனம் என்பனவற்றையும் நடைமுறைப்படுத்தும் ஓர் அரச அமைப்பாக, 1977ஆம் ஆண்டு தேர்தல் மூலம் மக்கள் வழங்கிய ஆணையைத் தாமேற்றுச் செயற்பட்டு வருகின்றனர். எனவே தமிழீழத்தின் அரசாக, தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பல ஆண்டு காலமாகச் சிங்கள அரசுகளுடனும், தலைவர்களுடனும் நடைபெற்ற பல பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் என்பனவற்றால் ஏமாற்றப்பட்ட தமிழீழமக்கள், தமிழீழத்தின் இறைமையை மீளப் பெறுவதே சுதந்திரமாகவாழ ஒரே வழியென்ற முடிவுக்கு வந்தனர். இவர்கள் தமது சுதந்திரத்தை மீளப்பெற ஆயுதப் போராட்டம்தான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தபோதும் ஆயுதப் போராட்டம் வெற்றி அளிக்குமா! என ஐயப்பட்டனர். மக்களின் இச் சந்தேகத்தை விடுதலைப்புலிகள் இன்று நீக்கியுள்ளனர். தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசுக்கு உதவியாக அந்நிய நாடுகள் வந்தால் எம்மால் தாக்குப்பிடிக்க முடியமா! எனச் சந்தேகித்தனர். இந்த ஐயத்தையும் விடுதலைப்புலிகள் நீக்கினர்.



படிப்பகம்

padippakam


மேலும் இந்திய நாட்டைப் புறக்கணித்து, உலக நாடுகள் எமது பிரச்சனையில் ஈடுபடமாட்டாது. எனவே தமிழர்கள் இந்திய அரசின் முடிவுக்கு மாறாக செயற்படக் கூடாது எனப் பல தமிழ் அரசியல் தலைவர்கள் உட்படப் பல தமிழ் மக்கள் எண்ணினர். அதேவேளை விடுதலைப் புலிகள் நாம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய அரசின் நிலைப்பாட்டையும், இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டையும் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, எம் மக்கள் தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பேணிப்பாது காக்க முடியாத எந்தத் திட்டத்தையும் யார் சமர்பித்த போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றனர்.


இன்று பல உலக நாடுகள் எமது பிரச்சனையில் அக்கறை கொள்ளவும் அதனைத் தீர்த்து வைக்கவும் முன்வரக் கூடியவாறு தமது நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் முன்னெடுத்து மாபெரும் அரசியல் வெற்றியை நிலை நாட்டிவிட்டனர். இவற்றின் மூலம் தமிழ் மக்கள் தன்னம்பிக்கையும், தற்றுணிவும் கொண்ட மக்களாக மாற்றப்பட்டு விட்டனர்.

இத்தகைய செயல் திட்டங்களைத் தமிழீழ அரசின் தலைவரான திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனே திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றார். தமிழீழ அரசுகளும், தமிழீழ மக்களும் காலம் காலமாக இழந்து வந்த இறைமையை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்தும் பல நூற்றாண்டுகளாகச் சிதைவுற்று, திரிபுற்று, நலிவுற்றுப் போய்விட்ட தமிழர்களுக்கே உரித்தான நிர்வாகம், கலை, பண்பாடு, வாழ்க்கை முறை என்பனவற்றை மீளக் கொண்டுவந்து அவற்றை இன்றைய உலகிற்கு ஏற்றவாறு அமைத்து வருகின்றார். இத்தகைய அளப்பரிய சாதனைகளின் மூலம் இவர் தமிழ் ஈழத்தின் தேசியத் தலைவராகப் போற்றப்படுகின்றார்.


படிப்பகம்

padippakam





**தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன்**

தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் தலைமையில் தமிழீழத்தில் இடம்பெற்று வரும் மாற்றங்களையும் தமிழீழத்தின் 1977ஆம் வருடத்திற்கு பிற்பட்ட வரலாற்றையும் வேறு ஒரு பகுதியாக எழுதிக் கொள்ளலாம் என்ற நினைப்போடு இச் சிறிய நூலை நிறைவாக்குகின்றோம்.



படிப்பகம்

padippakam



# முடிவுரை

இச் சிறிய நூலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும், அதற்கான தமிழீழமக்களின் பங்களிப்பையும் பற்றிய எந்த விபரத்தையும் எழுத வில்லை. ஏனெனில், **ஈழத் தமிழர் ஆயுதம் ஏந்தித் தமது இழந்த இறைமையை, சுதந்திரத்தை மீட்டெடுக்க நடாத்தும் விடுதலைப் போரானது ஒரு மாபெரும் மகத்தான காவியம்.** தனது உயிரை அர்ப்பணித்த மாவீரன் சாள்ஸ் அன்ரனி முதற் கொண்டு ஆயிரம் ஆயிரம் தியாகிகள் தமது உயிரை அர்ப்பணித்த சம்பவங்களையும், அரசியல் திருப்பங்களையும் எழுதினால் இப்புத்தகம் இன்னும் பல பக்கங்களைத் தாண்டி விடும் என்பதால் 1977 உடன் நிறுத்திக் கொள்கிறோம்.

ஈழத் தமிழர் வரலாற்றில் இரண்டு விடயங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

முதலாவது, 1910இல் அமைக்கப்பட்ட சட்ட நிரூபணசபைக் காலம் முதற் கொண்டு, இலங்கைத் தீவில், தமிழர் தாம் தனியான ஒரு நாட்டினம் என்பதால், சிங்கள இனத்தோடு சம உரிமை கொண்டு ஒற்றுமை யாக வாழலாம் என எடுத்துக் கொண்ட சகல முயற்சி களையும், சிங்கள இனம் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தி, தன்னை ஆளும் இனமாகவும், தமிழரை ஆளப் படும் இனமாகவும் மாற்றிக்கொண்டது என்பது ஆகும்.

> 1910இல் இன அடிப்படையில் பிரதிநிதித்துவம்
> வேண்டாம் எனத் தமிழ் மக்களே கேட்டனர் -
> அந்த நல்ல நோக்கம் ஏமாற்றத்திற்கு வழிகோலியது.



படிப்பகம்

padippakam



சோல்பரி ஆணைக்குழு முன் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டனர்; புறக்கணிக்கப்பட்டனர்.

பல ஒப்பந்தங்கள் செய்தனர்; ஏமாற்றப்பட்டனர்.

குடியரசாகும்போது தமது உரிமைகளைக் கேட்டனர் ; உதாசீனம் செய்யப்பட்டனர்.

இரண்டாவதாக, ஆங்கிலேயர் காலம் முதற் கொண்டு தமிழர்கள் தாங்கள் தனித்தொரு நாட்டினர் என்ற அடிப்படையிலேயே தீர்வை எதிர்பார்க்கின்றனர் என்பது மற்ற உண்மையாகும்.

சுருங்கக்கூறின், ஆதிகாலந் தொட்டு இலங்கைத் தீவானது இரு இனங்களையும் - இரண்டிற்கு மேற்பட்ட அரசுகளையும் கொண்டிருந்தது.

14ஆம் நூற்றாண்டில் இருந்து இரு இனங்கள் - மூன்று அரசுகள் (யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை) இருந்தன.

ஆங்கிலேயர் காலத்தில் இரு இனங்கள் - ஒரு அரசாக மாற்றப்பட்டது.

1972இன் பின் இரு நாட்டினம் - இரு அரசுகள் (குறிப்பாக 1977இன் பின்) ஆக இயங்கி வருகின்றன.

எனவே இலங்கையை நிரந்தர அமைதி கொண்ட ஓர் அழகான நாடாகக் காண விரும்புவோர், அங்கு இரு நாட்டினத்தைக் கொண்ட இரு அரசுகள் இருக்கின்றன



படிப்பகம்

padippakam


என்ற அடிப்படையில் உற்று நோக்கித், தீர்வுகளைக் காண்பதே இலங்கைத் தீவில் வாழும் இரு இனங்களும் சகோதரர்கள் போல வாழ வழிவகுக்கும் செயலாகும்.

உட்புண்ணை மாற்றாது வெளிப்புண்ணை மாற்ற முனையும் தீர்வுகள் ஒரு போதும் சமாதான சக வாழ்வை நல்காது. தமிழீழ மக்கள் தமது இறைமையை மீண்டும் பெற்றுக் கொள்ளவே போராடி வந்தனர், வருகின்றனர். இதுவே அவர்களது அடிப்படைப் பிரச்சனை. இப் பிரச்சனைக்குத் தீர்வு காணாது தமிழரின் பாதுகாப்புச் சக்தியான விடுதலைப்புலிகளை ஒடுக்கி விடுவதன் மூலமோ அல்லது பூரணப்படுத்தப்படாத (அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்காத) தீர்வுத்திட்டங்களை திணிப்பதன் மூலமோ தற்காலிகமாக அடிப்படைபிரச் சனைக்கான மக்கள் எழுச்சியின் சக்தியையோ அல்லது அவர்களின் வேகத்தையோ குறைக்கலாமே ஒழிய அது அடிப்படை பிரச்சனைக்கான நிரந்தரத்தீர்வு கண்டது ஆகாது. எனவே அடிப்படை பிரச்சனைக்கான தீர்வினைக் காணும் வரை ஈழத்தில் நிரந்தர சமாதானமோ அமைதியோ ஏற்படப் போவதில்லை.

சுருங்கக் கூறின் ஈழத்தில் புகுந்த புத்தமதத் ததையும், புகுந்த மொழியாகிய பாளிமொழிச் சேர்க்கை யால் உருவான சிங்கள மொழியையும் ஏற்றுக் கொண்டு வாழும் ஒரு பகுதி மக்கள் சிங்களவர்.

ஈழ மண்ணிலே உருவான தமிழ் மொழி, கலை, பண்பாடு என்பனவற்றை இன்று வரை பாதுகாத்து வருபவர்கள் தமிழர்கள்.

அந்நிய அரசுகள் இலங்கைத்தீவில் புகுந்த போதெல் லாம் அவர்களுக்குத் துணைநின்றவர்கள் சிங்களவர்கள்.



படிப்பகம்

padippakam



ஆனால் அதே அந்நியரை இறுதிவரை எதிர்த்துப் போராடியவர்கள் தமிழர்கள்.

எனவே நாட்டுப்பற்றும் சுய நிர்ணய உரிமை உணர்வும் உடைய தமிழர்களை சிங்கள அரசு அடக்கி ஒடுக்க மிக நீண்ட காலமாக எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் ஒரு போதும் இந்நாட்டில் அமைதிக்கு வழி வகுக்க மாட்டா.

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு சனநாயக, சாத்வீக முறையில் எடுத்த நடவடிக்கைகள், பேச்சுவார்தைதைகள், ஒப்பந்தங்கள், நடாத்திய போராட்டங்கள் தோல்வி கண்டதோடு சிங்கள இனத்தின் வன் செயல்களுக்கும் ஆளானார்கள். தமிழர்களின் இத்தகைய சனநாயக வழி முயற்சிகள் தோல்வி கண்டதற்கான அடிப்படைக்காரணம் சிங்கள இனமும் அரசும் இலங்கையைச் சிங்கள பௌத்த நாடாக எண்ணி நோக்கும் பார்வையே. சிங்கள அரசின் இப் பார்வையில் மாற்றம் ஏற்படவேண்டுமாயின் மனித நேயத்தை மதிக்கும் உலக நாடுகள், இஸ்ரேலை, பலஸ்தீனத்தை அங்கீகரித்தது போல் தமிழீழத்தையும் அங்கீகரிப்பதே ஒரே வழி.

**அதேவேளை மலேசியாவானது சிங்கப்பூருக்கு சுதந்திரம் வழங்கியதைப் போன்று, ஸ்ரீலங்கா அரசும், தமிழீழத்தின் மீதான தனது மேலாதிக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு தமிழீழத்தைச் சுதந்திர நாடாக இயங்க விடுவதன் மூலம் இலங்கைத்தீவில் சிங்கள, தமிழ் இனங்கள் ஒற்றுமையான இனங்களாக வாழ்வதுடன் பொருளாதார மேம்பாடுமிக்க இரு நேச நாடுகளாக உலகில் திகழ வாய்ப்பு உண்டு.**



படிப்பகம்

padippakam



# துணை நூல்கள்


1. அறவாணன், க.ப. தமிழ்ச் சமூதாய வரலாறு - சபாநாயகம் அச்சகம், சிதம்பரம்.

2. இராகவன், வி.எஸ்.வி பெரிப்ளூஸ் - மாணிக்கவாசகர் நூலகம், சென்னை.

3 குணராசா, கந்தையா., புவியியல் தேசப்படத் தொகுதி கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

4. கொறஸ் பெறெறா, L.H. மூலாதாரச் சரித்திர நூல் - வாகிட் அன் பிரதர்ஸ், கொழும்பு.

5 சச்சிதானந்தன், க., சின்னத்தம்பி., து.சு., தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள் - காந்தளகம் வெளியீடு, சென்னை.

6 சிற்றம்பலம், சி.க., (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

7 திருச்செல்வம், மு., ஈழத்தமிழர் இறைமை, காந்தளகம், சென்னை.

8 தேவநேயப்பாவாணர், தமிழர் வரலாறு, கழக வெளியிடு, சென்னை.

9 நடராசா, வே.க., பண்டைய ஈழம், சேது நூலகம், யாழ்ப்பாணம்.




படிப்பகம்

padippakam



10 பாவை சந்திரன், இலங்கைத் தமிழர் போராட்ட வரலாறு
பாரதி பதிப்பகம், சென்னை.

11 பிள்ளை, கே.கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்,
தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் - சென்னை.

12 பிள்ளை, கே.கே., தென்னிந்திய வரலாறு,
தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் - சென்னை.

13 மென்டிஸ், G.C., நம் முன்னோரளித்த அருஞ் செல்வம்
கொழும்பு அப்போதிக்கரிஸ் கம்பனி, கொழும்பு.

14 Beny, Roloff, ISLAND CEYLON -
Mcclelland and Stewart Ltd. Montreal.

15 Mendis, G.C., CEYLON - TODAY AND YESTERDAY -
Associated New›áers of Ceylon Ltd., Colombo.

16 Pathmanathan, S., THE JAFFNA KINGDOM, Colombo.

17 Perera, S.G., A HISTORY OF CEYLON -
The Assosciated New›áers of Ceylon Ltd., Colombo.

18 Wilson, A.J., AN INTRODUCTION TO CIVICS AND GOVERMENT -
Tutorial Publishers, Colombo.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம், பிறந்த பொன்னாடாம் தமிழீழத்தையும், உலகின் மூத்தமொழிகளுள் முன் நிற்கும் தமிழ் மொழியையும் இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டுவரும் செயல்வீரன், தனது பணிகளை சொல் ஏர் உழவராய் எழுத்துத் துறையிலும் தொடங்குகிறார்.

இன்று கனடாவில் ஜெனரல் எலக்றிக் கம்பனியில் (General Electric Canada Inc.) தொழில் புரியும் இவர் தனது ஓய்வு நேரங்களில் மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகிறார். தமிழர்களிடையே தமிழ் மொழிக் கல்வி, தமிழ்க்கலைகள், தமிழ்ப்பண்பாடு என்பவற்றை காலம், இடம் என்பவற்றிற்கேற்ப வளர்க்கப் பல தமிழ் வளர்க்கும் அமைப்புகள் ஊடாக அரும்பணிகள் பல 1987இல் இருந்து புரிந்து வருகிறார். கனடா தமிழீழச் சங்க இயக்குனர்களில் ஒருவராகவும், தமிழ்க்கலை பண்பாட்டுக்கழகத் தலைவராகவும், தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் பொறுப்பாளராகவும் பல பொறுப்புகளை ஏற்று மக்கள் பணியே மகேசன் பணியாக உழைத்து வருகிறார்.

கனடாவிற்கு வரமுன்பு நைஜீரியாவில் சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரிய சென்றிருந்த காலத்தில் தாயக மண்ணின் தொடர்பை அறுக்காமல் அங்கிருந்து உதவிகள் பல புரிந்தார்.

1980 இல் நைஜீரியா செல்லும் வரை தாயக மண்ணின் அபிவிருத்திச் சேவைகளில் ஈடுபட்டிருந்தார். 1974ஆம் ஆண்டில் இருந்து யாழ் குடாநாட்டின் அபிவிருத்தித் துறை பணிப்பாளர்களில் ஒருவராய் பல ஆக்கப் பணிகள் புரிந்தார். அழியாச் செல்வமாய் அனைத்தும் பயன் தரும் பனையினது பலன் பெறும் "பனை அபிவிருத்திச் சபையின்" உப தலைவராய் இருந்து உழைத்தார். தமிழீழம் பொருளாதார தன்நிறைவு பெற வேண்டும் எனும் பாரிய தீர்க்க தரிசனத்துடன் பனம் சீனி உற்பத்திக்கு முன்நின்று உழைத்தார். வடமாகாண அபிவிருத்தியில் முழுமையாக ஈடுபடும் பொருட்டு அவரது சமூகநல சேவைகளின் பயனறிந்த ஸ்ரீலங்கா அரசு அவரை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இருந்து வடமாகாண அபிவிருத்திச் சபையில் சிறிது காலம் பணிபுரியச் செய்தது.

தனது பாடசாலை காலத்திலேயே தமிழ் இனம் தனது உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்ட இவர் தனது இம் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும்போது சிங்கள அரசின் இனவாதத்தன்மையையும் தமிழர் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டு திரிபுபடுத்தப்பட்டு உண்மை மறைக்கப்பட்டு வருவதையும் கண்டு வேதனையோடு, உள்ளக்குமுறலுடன் தமிழ் வரலாறுகளைப் படித்து வந்தார். அதன் அறுவடையே தமிழீழம் - நாடும் அரசும் எனும் இந்நூலாகும்.

சாமி அப்பாத்துரை

படிப்பகம்